






பொருளடக்கம்


துக்கமும், ஸுகமும், ஆனந்தமும் ... ... 49
ஸாதாரண உபநிஷத்துக்கள் ... ... 50
லார்டு பைரன் ... ... ... ... 53
ஆத்திசூடி விளக்கம்.—2. ஆறுவது சினம் ... ... 58
இந்திய நாணயங்களின் அபிவிர்த்தி ... ... 61
சுத்தமும், அசுத்தமும் ... ... ... 66
மனத்திருப்தி ... ... ... ... 69
சூரியனும் பூமியும்—தினகதி ... ... ... 70
சக்திதத்வபோதினி: xxiii உஷ்ணம்: பாவும் விதம்—
ஸ்வரூபம் ... ... ... 73
ஷேக்ஸ்பியர் (தொடர்ச்சி)—பிறப்பு, வளர்ப்பு, கவிமாண்பு 76
ஸுசீலா ஸ்வயம்வரம் ... ... ... 79
கல்யாணி ... ... ... ... 83
மாணவர் பக்கம், வியாஸ விதானம் iii விளக்க வியாஸங்
கள் (i) இயற்கை விஷயங்கள்—ஆறுகள் ... 84
நாகாநந்தம் ... ... ... ... 88
சிறுவர்களுக்கான பக்கங்கள் ... ... ... 90
ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... ... ... 94
விசேஷ வர்த்தமானங்கள் ... ... ... 96


---

[காபிரைட்]




இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

## AT CONCESSION RATES

*(Only to subscribers)*

**ராஜம் ஐயர் சரிதை**

LIFE OF B. R. RAJAM IYER, B. A.
AUTHOR OF KAMALAMBAL CHARITRAM

இப்புத்தகம், கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புதக் கதையின் நூலாசிரியராயும், பிரபுத்தபாரதம் என்ற மாதாந்தப் பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்த வரும் ஆகிய ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் ஐயர் அவர்கள், பி. ஏ., என்பவரது சரித்ரத்தை அடக்கியுள்ளது. இதனுடன் இவர் செய்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள உபதேச மொழிகளையும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸத்தையும் சேர்க்கப்பட்டுள்ளது.

விலை அணா 8

விவேக போதினி சந்தாதாரர்க்கு மாத்திரம் கொஞ்ச காலத்துக்கு விலை அணா 4

## நமது சந்தாதாரர்களுக்கு

“விவேக போதினி” தனிப்பிரதிகள் ஆரம்பம் முதல் அனேகமாய் இரண்டொரு சஞ்சிகைகள் தவிர எல்லா மாத சஞ்சிகைகளும் கிடைக்கும். சந்தாதார்க்கு மாத்திரமே பத்திரிகை 1-க்கு 3 அணாவுக்குக் கொடுக்கப்படும். ஒரு சந்தாதாரருக்கு ஷை விலைக்கு 4 ப்ரதிகளுக்குமேல் கொடுக்க முடியாது.

“விவேக போதினி” பத்திரிகை விஷயமாய் எழுதும் எல்லாவித கடிதங்களும், விவேக போதினி மானேஜருக்கே எழுதவேண்டும். அப்படிச் செய்வதினால், கடிதங்களுக்கு அப்போதைக்கப்போது பதில் எழுத முடியும். வீண்காலதாமதம் ஏற்படாது.

“விவேக போதினி” சந்தாதார்களுக்குப் புஸ்தகங்கள் குறைந்த விலைக்கு வேண்டுமானால், “விவேக போதினி” மானேஜருக்குத் தான் எழுதவேண்டும். இதைச் சந்தாதார்கள் கவனிக்கவும்.

சந்தாதார்களுக்குக் குறித்த காலத்தில் பத்திரிகை கிடைக்காமல் போனால் உடனே தெரியப்படுத்த வேண்டும். பத்திரிகை ப்ரசுரமான 15 நாளைக்குள் எழுதாவிட்டால், பிறகு தனிபத்திரிகைக்கு 5 அணா அனுப்பினால்தான் வேறொரு காபி அனுப்ப முடியும்.

---

## விவேக போதினி

1908-ம் ௵ ஜூலை ௴ முதல்

பிரசுரமாகிறது.

தொகுதி I] [Vol I
1908 ௵ ஜூலை ௴ முதல் 1909 ௵ ஜூன் ௴ வரை

தொகுதி II] [Vol II
1909 ௵ ஜூலை ௴ முதல் 1910 ௵ ஜூன் ௴ வரை

தொகுதி III] [Vol III
1910 ௵ ஜூலை ௴ முதல் 1911 ௵ ஜூன் ௴ வரை

இம்மூன்று தொகுதிகளும், மிகவும் அழகாய் பயிண்டு செய்து, பேர் கில்ட் அக்ஷரங்களால் போடப்பட்டிருக்கின்றது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 4

ஏற்கெனவே சந்தாதாரா யிருப்பவர்களுக்கு ரூ. 3 8 0 க்குக் கொடுக்கப்படும்.

3 - தொகுதிகளையும் ஏககாலத்தில் ஆர்டர் செய்யும் சந்தாதாருக்கு மாத்திரம் ரூ. 10-க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் பிரத்யேகம். பாக்கிங் இனாமாய் செய்யப்படும். வேண்டுவோர், உடனே எழுதிக்கொள்ளவும். கொஞ்சம் காபிகள் தான் கைவசமிருக்கின்றன.

# THE "VIVEKA BODHINI"

**An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors**

MAINLY DEVOTED TO

**Science, Philosophy, Morality, Literature and Art,**
**History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce and Economics.**

THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA.

Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects

**Vol. IV** **AUGUST 1911** **No. 2**


## PRINCIPAL CONTENTS

PAGES


Pain, Pleasure and Happiness ... ... ... ... ... 49
Minor Upanishads ... ... ... ... ... ... 50
Lord Byron (*a life-sketch*) by M. R. Ry., Nagai C. Gopalakrishnan, Sub Editor, The Swadesa Mitran ... ... ... ... ... ... 53
Moral Sayings explained ... ... ... ... ... ... 58
The Evolution of Indian Coinage : by M. R. Ry. G. Ratnam Pillai Avergal, B. A., L. T., Headmaster, Banadurai Secondary School, Kumbakonam ... ... 61
Cleanliness and Uncleanliness : by M. R. Ry. K. Narayana Aiyar Avergal, M. B. & C. M., Assistant Surgeon ... ... ... ... ... ... 66
Contentment by M. R. Ry. Pundit S. Velayuda Mudaliar Avergal ... ... 69
Sun and Earth—Diurnal motion : by M. R. Ry. S. Balakrishna Aiyar Avergal, B. A., L. T., of The Government College, Kumbakonam ... ... ... ... 70
Physics Primer : Heat, its transmission and nature by M. R. Ry., A. S. Kasturiranga Aiyar Avl., B. A., L. T., ... ... ... ... ... ... 73
Shakespeare (*a life sketch* continued) by a Master of Arts ... ... ... 76
Susila Swayamvaram : by M. R. Ry. K. Venkatrama Aiyar Avergal, B. A. ... 79
Kalyani : An adaptation of Sir Walter Scott's Bride of Lammermore by M. R. Ry., S. V. Kallapiran Pillai Avl., B. A., Deputy Collector ... ... ... 83
Students' Pages :—Expository Essays : Natural Phenomena Rivers ... ... 84
Naganandam,—A classical Drama : by M. R. Ry. V. Seshagiri Sastriar Avergal, B. A. ... 88
Children's Pages : —True Greatness or Vasudeva Sastri by late B. R. Rajam Aiyar, B.A. author of Kamalambal Charitram (Translated) ... ... ... 90
Ladies', Pages ... ... ... ... ... ... ... 94
Interesting News ... ... ... ... ... ... 96


* *Special pages are set apart* for the benefit of the students preparing for the Examinations with a view to h[elp] them in their Vernacular Translation and Composition.

All literary contributions, books &c., for review, should be addressed to th[e] Editor and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini," Mylapore, Madras.


The Hon'ble Mr. P. S. Sivaswami Aiyar, B.A., B.L., C.I.E., Advocate General, Madras, writes :—

**The articles are written in an easy, readable style and deal with a variety of interesting sub[jects]. [I]ts usefulness and cheapness, will I hope commend it to the Tamil public and secure popularity.**

56

# விவேக போதினி

**Rao Bahadur Mr. L. C. Williams Pillay, B. A., Retired Inspector of Schools**, writes :—

The "Viveka Bodhini" is **a very readable Journal full of interesting matter written in chaste Tamil.** As a means of disseminating valuable information on various subjects among the masses, it deserves the liberal support of the educated public.

* * *

**Rao Bahadur Mr. C. Nagoji Rao, B. A., Retired Inspector of Schools**, writes :—I have glanced through several numbers of the *Viveka Bodhini* and found them *interesting* and *instructive*.

* * *

**M. R. Ry. B. C. Ramaswami Aiyar Avergal, B. A., Assistant Inspector of Schools** writes :—

Viveka Bodhini is a Journal that is **best suited for the requirements of the teachers of Elementary Schools and the advanced students in them.** The style is simple and easy and the matter interesting and varied and useful.

* * *

**I. Srinivasa Aiyar, Esq., B. A., Principal The Hindu College, Tinnevelly.**—* * * It is a very interesting Journal containing readable articles **on a variety of useful subjects.** The easy style in which the articles are written must commend itself to a wide circle of readers.

* * *

**Hon'ble Dewan Bahadur R. Ragoonatha Row Avergal, C. S. I.**, writes :—

* * * It is written in good easy Tamil and deals with subjects of importance and usefulness to the general public. Its annual subscription is Rs. 3 so that even the poor can have valuable and useful reading in good Tamil for a small sum.

* * *

**M. R. Ry. R. Swaminatha Aiyar Avergal, Headmaster, Town High School, Kumbakonam**, writes:—

have been getting the Viveka Bodhini for my school ading Room for some time past and teachers and pils in the School seem to make a large use of the urnal. The subjects it deals with **are varied, interesting and instructive,** and the information is conveyed easy elegant Tamil so as to be within the comprehension of students of all grades of advancement. Schoolmasters will find in it much that will be of help to them in their vocation as teachers of the young. I think the Journal has a bright future before it. The publishers have indeed placed the reading public under a deep debt of obligation by bringing out such a nice Journal.

**M. R. Ry. G. Seshaiyangar Avergal, Head Master, National High School, Trichinopoly**, writes :—

As a subscriber and regular reader of the "Viveka Bodhini," I am in a position to testify to the fact that it is *very useful* and well conducted monthly. It is issued regularly and punctually every month ; and is well printed on good paper. Its articles which are occasionally illustrated are *interesting and instructive* contributed either by specialists or those who are an authority on subjects they write on. At a time when Tamil Composition has been made compulsory for the candidates for the Matriculation and Intermediate Examinations of the Madras University and for the Public Examination for the award of **Secondary School Leaving certificate** whose vernacular is Tamil, its importance to students especially cannot be overrated. All classes of people young and old, men and women lay and religious find in its issues matter suited to their tastes. *It deserves every encouragement* and the General Supplies Company are to be congratulated on the thoroughly business-like way in which they conduct the Journal.

* * *

**A. Panchpakeasa Aiyar, Esq., M. A., L. T., Head Master, P. S. HighSchool, Mylapore.**—*

* *All these objects are admirably served by the excellent Tamil monthly,* Viveka Bodhini *which has been rendering no small service to Tamil reading public* during the past three years of its career under the able management of its enterprising publishers, the General Supplies Co. The articles contributed *deal with a variety of subjects all interesting and useful*—The Journal supplies *a real want* and should be welcomed by all Schools and Colleges, by all Indian Houses and by both sexes of all grades—*The series of essays begun for the benefit of school pupils are very good and must be appreciated by teachers and students' alike.* I wish the journal all the success it so richly deserves.

* * *

**M. R. Ry. K. Venkatarama Aiyar Avergal, B.A., Senior Assistant, The Town High School, Kumbakonam** writes :—

I think the Viveka Bodhini needs no commendation from me. Even a cursory reader of its pages cannot fail to be impressed with the weighty matter contained therein. **It is upto date in respect of illustrations and topics.** Students will find in the pages of the Viveka Bodhini much matter for cogitation. The occasional essays are a peculiar feature of the Journal and these essays afford facility in Vernacular Composition now insisted on in all public examinations. I wish long life of usefulness and popularity to the journal is the foremost of its kind in South India.

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ ஆடி௴ : 1911-௵ ஆகஸ்டு௴ { பகுதி 2


## துக்கமும் ஸுகமும் ஆனந்தமும்

### PAIN, PLEASURE & HAPPINESS

உலகில் மாறிமாறி வரும் ஸுகதுக்கங்களைக்கண்டு மனங்கலையாது உண்டாகும் சாந்தத்திற்கே ஆனந்தம் என்று பெயர்.

ஒரு மஹான் இந்த விஷயத்தைச் 'சிற்றின்பம் மனதைச் சலிக்கும்படி செய்துவிட்டு மாறிவிடும், பேரின்பமோ மாறாததாயும் விஷயங்களுக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது. முன்னது மித்யாரூபம்; பின்னது ஸத்யமானது. முன்னது அக்ஞானத்தால் விளைவது; பின்னது ஞானத்தின் முடிவு. முன்னது மமகாரத்தால் (எனது என்ற உணர்ச்சியால்) உண்டாகி விருத்தியடைவது. பின்னதோ ஸர்வபூத தயாரூபம், அகங்காரத்தைச் சுட்டறுத்தலால் விருத்தியடைவது. முன்னது வெளி வஸ்துக்களிலிருந்து உண்டாகி அவைகளால் மாறுதல் அடையக்கூடியது. பின்னது தேஹம் உட்பட்ட வெளிவஸ்துக்களுக்கு அப்பாற்பட்டது. இவைகளோடு ஸம்பந்தம் உடையதும் அல்ல' என்று விமர்சிக்கிறார். ஆதலால் முற்கூறியபடி இருக்கும் ஸுகதுக்க ரஹஸ்யத்தை நன்கு உணர்ந்து, பகவத் ஆராதனை செய்து, இடைவிடாது மனனம் செய்து பழகிவருதல்தான் இந்த ஆனந்தம் வந்து குடிகொள்ளத் தகுந்தவழி.

இந்த ஆனந்தம் குடிகொண்டிருக்கும்மஹான்களுக்கு உள்ளே அமைதியிருப்பதோடும்கூட தம்மை அறியாது தம்மைஅணுகுவோர் மனதை நல்வழித் திருப்பும் சக்தியும் ஏற்படும். இந்தக் காரியம் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்படுவதல்ல. அவர் மனோநிலை அவ்வாறு செய்து வைக்கிறது. இவ்வாறு மாற்றும் சக்தி தமக்கு உண்டு என்ற ப்ரக்ஞை அவர்களுக்கு வரவேண்டியதுதான்; இந்த நிலை மாறிவிட சக்தியும் போய்விடும். பின்னர் அவர்கள் அஜாக்ரதையாக இந்த அகங்காரத்தை வளரவிட்டால், வீண் பாசாங்குக்காரர்களாகி லோகாபவாதத்திற்கு ஆளாவதும் அல்லாமல், அவரை அணுகுவோர் மனத்தைக் கெடுக்கும் சக்தியையும் அடைவார்கள். ஆகவே நாம் மனதை அமைதியாக்க முயலவேண்டுமே ஒழிய அதனால் வரும் பதருக்கு ஸமமாகவிருக்கும் பரோபகாரத்தைச் சற்றேனும் முன்னர் சிந்திக்கவே கூடாது. பரோபகாரம் ஏற்படுவதைக் கண்டு கர்விக்காது அப்பொழுதும் மனங்கலையாது ஆனந்தமாக இருக்கவேண்டும்.

இப்பொழுது கூறப்பட்ட மனதின் வலிமையைக் கொண்டு, பெரியோர் ஸுகம் துக்கம் என்ற பதங்களுக்கு வேறுவிதப்பொருளும் கொள்வர். **கம்** என்ற பதத்திற்கு ஆகாயம் என்று பொருள்; அதாவது அணுகுபவர்மேல் தாக்கக்கூடிய ஒருவித சக்தி என்பதாகும். ஆகவே அணுகுபவரை ஸந்நிதான மாத்ரத்தால், நல்வழிப்படுத்தும் மனவலி **ஸுகம்** என்றும், கெட்டவழிப் படுத்தும் மனவலி **துக்கம்** என்றும் ஆகிறது. ஆதலால் முற்கூறிய ஆனந்தமே உண்மையான ஸுகம் என்பதும், ஸாதாரண ஸுகதுக்கங்களால் ஏற்படும் மனக்கலக்கமே துக்கம் என்பதும் தெரியவரும். ராவணன் திக்விஜயகாலத்தில் ஸனத்குமாரரைக் கண்டதாகவும், உடனே அவன் குணம் மாறி 'எனக்கு நற்கதி எப்படி வரும்?', என்று கேட்டதாகவும், அதற்கு அவர் 'இப்பொழுது என்னமோ, உனக்கு நற்புத்தி வந்திருக்கிறது! கொஞ்சம் நாழிகைக்கெல்லாம் இது மாறிவிடும். ஆதலால் ஸத்துக்களிடம் மாறாப்பகையை வைத்துக்கொள்! இதுவே நீ கடைத்தேறும் மார்க்கம்' என்று கூறினதாகவும் உத்தரகாண்டத்தில் ஒரு கதை கூட உண்டு. வால்மீகி முன்னர் திருடராயிருக்கையில் ஸப்தருஷிகள் ஸந்நிதானவிசேஷத்தால் மாறி மேன்மை பெற்றாராம். கல்யாண வீட்டுக்காரனைப்பார்க்குங்கால் ஒருவிதமனக்கிளர்ச்சியும், மரணம் ஸம்பவித்த வீட்டுக்காரரைப் பார்க்குங்கால் ஒருவித மனத்தளர்ச்சியும் உண்டாவது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

ஒருமனம் ஸுகப்படுகிறது அல்லது துக்கப்படுகிறது என்பதை அது இவ்வாறு அணுகபவர் மனதை மாற்றுகிறது என்பதால் அறியலாம். இதையே ஒருவன் தன் நிலையைத்தானே உணர கைக்கொள்ளவே கூடாது; கொண்டால் நிலைதடுமாறிப்பாசாங்குக்காரனாவான். பகவத்ஸங்கல்பத்தால் ஆவதை நமதெனக் கருதல் வீண் கஷ்டத்திற்கே இடனாகும்.

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ ஆடி௴ [பகுதி 2

## ஸாதாரண உபநிஷத்துக்கள்

### MINOR UPANISHADS

இதுவரையில் 10-முக்ய உபநிஷத்துக்களின் ஸாரங்களைத் தொகுத்துக் கூறிவந்தோம். இனிப் பொதுவாக மற்றைய உபநிஷத்துக்களைப்பற்றி இங்கு எடுத்து விவரிப்போம். வேதசாகை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உபநிஷத்து உண்டென்று பெரியோர்கள் கூறி வருவதற்கேற்ப தற்காலம் 1180 உபநிஷத்துள் காணப்பட வேண்டும். ஆனால் கலியில் வேதம் சீர் குலைந்து நஷ்டமாகும் என்ற புராண வசனங்களுக்கேற்ப அநேக வேதசாகைகள் நஷ்டமாக, அவைகளோடு அவைகளைச் சேர்ந்த உபநிஷத்துக்களும் நஷ்டமாய் விட்டன. பின்னர் அவைகளுள் முக்யமாக 108 உபநிஷத்துக்கள் பொறுக்கப்பட்டு, அவைகள் இப்பொழுதும் வந்து எட்டி இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் உபநிஷத்துகள் ஸுமார் 130 இருக்கலாம், ஆயினும் 108 உபநிஷத்துக்களே போதும் என்று பெரியோர்களால் மதிக்கப்பட்டிருக்கிறது.இவைகளுள் 10 முக்ய உபநிஷத்துக்களுக்குத்தான் ஸ்ரீமத் சங்கராசார்ய பாஷ்யம் இருக்கின்றன. இம்மஹான் அவர் காலத்திலிருந்த மதங்களில் காணப்பட்டிருந்த துர் அப்யாஸங்களை வைதிகமல்லவென்று நீக்கி, நல்ல பாகங்களை அங்கீகரித்து ஒவ்வொரு மதத்தைச் சுத்தப்படுத்தி ஸ்தாபித்து வந்ததில், அவர் வாழ்க்கைத் தொழிலுக்கு மற்றை உபநிஷத்துக்கள் வேண்டுவது அநாவசியமாகப் [...] மையால் அவைகளை அவர் வ்யாக்யானம் செ[...] பிரஸித்தப் படுத்தாமல் விட்டார். ஆதிச[...]ருக்குப் பின்னர் ச்ருங்கேரி மடாதிபதிக[...] வந்த ஸ்ரீமத் சங்கரானந்தாள், ஸ்ரீ வித்யா[...]யாள் ஆகிய இவர்கள் இந்த 108 உபநிஷத்துகளுள் சிலவற்றிற்கு வ்யாக்யானம் செய்தும் சிலவற்றைத் தமது நூல்களில் எடுத்தாண்டும் இருக்கின்றனர்.

இந்த 108 உபநிஷத்துக்களுள் ஒன்றாகிய **முக்திகோபநிஷத்தில்** இவ்வுபநிஷத்துகள் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஸ்ரீராமருக்கு வஸிஷ்டர் செய்த உபதேசரூபமான **தத்வஸாராயனம்** என்னும் அரிய நூலில் உபாஸனா காண்டத்தில் வரும் **ராமகீதை** என்னும் நூலில் இரண்டாம் அத்யாயத்திலும் இவ்வுபநிஷத்துக்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவைகள் பின்வருவன.

**10 உபநிஷத்துக்கள்**

ஈச, கேன, கடவல்லி, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்திரீய, அயித்ரேய, சாந்தோக்ய, ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்கள்.

**32-உபநிஷத்துக்கள்**

ப்ரஹ்ம, கைவல்ய, ஜாபால, ச்வேதாச்வதர, ஹம்ஸ, ஆருணிக, கர்ப்ப, நாராயண, பரமஹம்ஸ, அம்ருதபிந்து, அம்ருதநாத, அதர்வசிர, அதர்வசிக, மைத்ராயண்ய, கௌஷீதகி, ப்ருகஜ்ஜாபல, நரஸிஹ்மதாபினி, காலாக்னிருத்ர, மைத்ரேய, ஸுபால, க்ஷுரிக, மந்த்ரிக, உபநிஷத்துக்கள்.

**108-உபநிஷத்துக்கள்**

ஸர்வஸார, நிராலம்ப, சுகரஹஸ்ய, வஜ்ரஸூசிக, தேஜோபிந்து, நாதபிந்து, த்யானபிந்து, ப்ரஹ்மவித்யா, யோகதத்வ, ஆத்மபோதக, நாரதபரிவ்ராஜ, த்ரிசிகி, ஸீத, யோகசூடாமணி, நிர்வாண, மண்டலப்ராஹ்மண, தக்ஷிணாமூர்த்தி, சரப, ஸ்கந்த, மஹாநாராயண, அத்வயதாரக, ராமரஹஸ்ய, ராமதாபினீ, வாஸுதேவ

முத்கல, சாண்டிலி, பைங்கள, பிக்ஷுக, மஹா, சாரீரக, யோகசிக, துரியாதீத, ஸந்யாஸ, பரமஹம்ஸபரிவ்ராஜக, அக்ஷமாலிக, அவ்யக்த, ஏகாக்ஷர, அந்நபூர்ண, ஸூர்ய, அக்ஷிக, அத்யாத்ம, குண்டிக, ஸாவித்ரி, ஆத்ம, பாசுபத, பரப்ரஹ்ம, அவதூத, த்ரிபுராதாபிநீ, தேவி, திரிபுர, கட, பாவன, ருத்ரஹ்ருதய, யோககுண்டலி, பஸ்மஜாபால, ருத்ராக்ஷ ஜாபால, கணபதி, தர்சன, தாரஸார, மஹாவாக்ய பஞ்சப்ரஹ்ம, ப்ராணாக்னிஹோத்ர, கோபாலதாபினி, க்ருஷ்ண, யாக்ஞவல்க்ய, வராஹ, சாட்யாயன, ஹயக்ரீவ, தத்தாத்ரேய, காருட, கலிஸந்தாரண, ஜாபால, ஸௌபாக்யலக்ஷ்மீ, ஸரஸ்வதீரஹஸ்ய, பஹ்வ்ரிச, முக்திக, உபநிஷத்துக்கள்.

இங்குக் குறிக்கப்பட்டுள்ள உபநிஷத்துக்கள் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பிரித்திருப்பதன் காரணத்தைப் பின்வரும் ராமகீதா வாக்யத்திலிருந்து எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீராமர் ஹநுமாரைப் பார்த்து 'இங்குக் கூறப்பட்டுள்ள உபநிஷத்துக்களுள் மாறுநிலையாகிய கைவல்யமுக்தியைப்பெற மாண்டேக்யம் ஒன்றேபோதும். இதைப்படித்தும் தேறாதவன், 10 உபநிஷத்துக்களை வாசித்து என் விஷயமான ப்ரோக்ஷஞானம் பெற்று ப்ரஹ்மலோகம் அடைந்து முடிவில் அங்கிருந்து விடுபடுவான். உனக்கு உயிரோடு இருக்கும்பொழுதே தேஹவியோகம் முதலிய கஷ்டங்களுக்கு ஆளாகி வருந்தாது ஜீவன் முக்தியைப் பெற வேண்டும் என்ற பேராவலிருந்தால் 32 உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்து அபரோக்ஷஞானத்தைப்பெறு. இப்படி இருக்கையில் உடனே தேகஸம்பந்தம் முற்றிலும் அற்று ஸகலவித கர்மங்களும் வந்து தாக்காத நிலையை அடைய வேண்டும் என்று தோன்றினால் 108-உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்' என்று உபதேசித்தார். இதிலிருந்து மாண்டேக்ய உபநிஷத்தே மிகச்சிறந்ததென்பதாயிற்று. இது மிகச்சிறியது ஆயினும் மோக்ஷமார்க்கத்தை நன்கு சுருக்கமாக விளக்கிக் காட்டுகிறது. இதன் பாகங்களைக் கொண்டு விடாது வெகுகாலம் பெரியோர்கள் மெய்ம்மறந்து மனனம் செய்வது உண்டு. இதில் உள்ள விஷயத்தைத்தான் ஆதிசங்கரரது பரம குருவாகிய ஸ்ரீமத் கௌடபாதாள் வெகு அழகான காரிகையாகச்செய்து 403 ச்லோகங்களில் பூர்த்தி செய்திருக்கிறார். இக்கருத்தையே 'பிறரைக்கொல்ல கத்திமுதலிய ஆயுதங்கள் வேண்டும், தன்னைக் கொல்லவோ சிறு ஊசிகூடப் போதும். அது போல மனச்சஞ்சலத்தை ஒழுங்குபடுத்தி பிறருக்கு உபதேசாதிகள் செய்ய உலகிலுள்ள சாஸ்திரங்கள் எல்லாம் வேண்டும். தான் அடங்கி மோக்ஷம் பெற சிறுவார்த்தையே போதும்' என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் வெளியிட்டிருக்கிறார். இதையே பெரியோர்கள் 'மோக்ஷமிருக்கிறது ஸூக்ஷ்மத்தில்' என்பர்.

முன்எழுதியுள்ள உபநிஷத்துக்களை வாசித்து வந்தவர்களுக்கு அவைகள் பொதுப்படையாக ஒருவித ஆராதனாக்ரமத்தையும் பற்றாது ச்ருதி யுக்தி அனுபவம் கதைகள் மூலமாகப் பிரஹ்ம விஷயத்தை ப்ரஸ்தாபிக்கின்றன என்பது விளங்கும். மற்றைய 98 உபநிஷத்துகளிலும் அவ்வாறு பொதுவாகப் பெரும்பாலும் காணப்படாது. சிற்சில உபநிஷத்துக்கள் மதவாதிகளின் ஆராதனாக்ரமங்களைக் காட்டி அவைகளை மேலான ப்ரஹ்மபரமாகப் பொருள்படுத்தி அவைகளையும் மோக்ஷமடைய ஒரு மார்க்கமாக ஆக்கும் (உ-ம்) பஸ்மஜாபாலம், ருத்ராக்ஷஜாபாலம். ஆராதிக்கப்படும் தேவதர்ஸம்பந்தமாகஉள்ளவைகளையே ஜகத் காரணாதிகளாகக் காட்டி அந்த தேவதையையே பரப்ரஹ்மமாகக் காட்டும். இவைகளுக்கு உதாரணம்கோபாலதாபினி, க்ருஷ்ணோபநிஷத், ராமதாபினி தேவி, கணபதி, ஸீத முதலியவைகளே. வேறு சிலவற்றிற்மேலான இரண்டற்ற பரமநிலையை மாத்திரம் எடுத்து விஸ்தரித்து அவைகளின் மார்க்கங்களைக் காட்டியிருக்கும் (உ-ம்) கைவல்யம், அம்ருதபிந்து, மைத்

ரேயம் முதலியன. சிலவற்றில் யோகாப்யாஸ விஷயம் வாராஹ உபநிஷத்தில் காணப்படுவதுபோல் விஸ்தாரமாகக் காணப்படும். மற்றும் சில நிராலம்ப ஸர்வஸார உபநிஷத்துக்களைப்போல வினாவிடை ரூபமாக பரம அத்வைத ரஹஸ்யங்களை நன்கு வெளியிடும். சில ஸ்கந்தோபநிஷத்தைப் போலச் சிவவிஷ்ணுபேதம், தெய்வமிகழ்தல் மதத்வேஷம் முதலியவைகளைக் கண்டித்து ஆராத்ய வஸ்து ஒரே பரம்பொருள் என்பதை எடுத்துக் காட்டும். சில உபநிஷத்துக்களில் உபாக்யானங்களின் உட்கருத்துக்கள் விளக்கப்படும். தக்ஷிணாமூர்த்தி உபநிஷத்தில் மார்க்கண்டேய சரித்திரம் பின் வருமாறு விளக்கப்படுகிறது. 'பரமசிவன் பக்தன் உள்ளே அவன் ஆத்மானந்த ரூபமாக இருந்து; இதுவரையில் விசாரணை இல்லாததால் மோஹம், த்வைதபாவனை ஆகிய இவைகளால் முழுத்தப்பட்ட விவேகத்தைப் பிழைப்பு மூட்டுகிறார். தன் தேகத்தைச் சுற்றிக் கட்டியிருந்த காலபாசத்தால் இழுக்கப்பட்ட காலத்தில் இம்மாதிரிதான் ஆனந்தரூபமாக வெளிப்பட்டு ம்ரிகண்டு பிள்ளையை (மார்க்கண்டேயனை) யமபயத்திலிருந்து விடுவித்துப் பிழைப்பு மூட்டினார்' என்று இவ்வுபநிஷத்துக் கூறுகிறது. வேறுசில ஸந்யாஸ லக்ஷணங்களை நாரதபரிவ்ராஜக் உபநிஷத்தைப்போல ஸவிஸ்தாரமாக எடுத்து வெளியிடுகின்றன. சில சாரீரக உபநிஷத்தைப்போலத் தேகப்ரபஞ்சத்துவங்களை வெளியிடுகின்றன. ஆகவே முக்ய உபநிஷத்துக்களில் பொதுவாகக் கூறிய அரியவிஷயங்கள் ஒவ்வொன்றையும் விஸ்தாரமாயும், அப்யாஸக்ரமம், ஆராதனக்ரமம், ஸாதன முறைகள் முதலியவைகளைஒட்டி மற்றைய உபநிஷத்துக்கள் விரிவாகக் கூறுகின்றன.

ஸாதாரணமாக ஞானவிஷயம் தெரியத்தெரிய கர்மம் ஆசாரம் முதலியவைகள் குறைந்து வருகின்றன என்பது எல்லோரும் நேரிட அனுபவித்து வரும் விஷயமே. ஞான சாஸ்திரம் அப்யஸிக்கும் முறைதவறி அப்யஸிப்பதால் இந்த அனர்த்தம் வந்திருக்கிறது. முதலில் பகவத்கீதையையும், தச உபநிஷத்துக்களையும சாஸ்திர விஷயத்தில் அதிகச்ரத்தையின்றி படிப்பவர்களுக்குத்தான் இம்மாதிரியான விபரீதம் ஸம்பவிக்கும். அவ்வாறின்றி முதலில் 108 உபநிஷத்துக்களை முன்பு ஒருவாறு படித்துத்தெளிந்து பின்னர் தச உபநிஷத்துக்களை வாசித்தால் ஆசாரம் கர்மம் முதலியவைகளில் அசிரத்தை வாராது அவைகளின் உட்கருத்தை நோக்கி, தேஹப்ரக்ஞை உள்ளவரையில் அவைகளை விடாமல் செய்து விடவேண்டும் என்ற ச்ரத்தையும், ஞானமுதிர்ச்சியும் உண்டாகும். நாரதபரிவ்ராஜகம், பரமஹம்ஸபரிவ்ராஜகம் முதலியவைகளை வாசித்தவனுக்கு ஸந்யாஸ விஷயமான வெறுப்பு அச்ரத்தை முதலியவைகள் எப்படி உண்டாகும்? கோபாலதாபினி, ராமதாபினி, ராமரஹஸ்யம், தேவி, திரிபுரதாபினி, முதலியஉபநிஷத்துக்களைவாசிப்பவர்களுக்கு ஸகுணோபாஸனை முடிவான ஞானநிஷ்டையில் இவ்வாறு கொண்டு சேர்க்கும் என்பது விளங்காமல் போய்விடுமா? நிராலம்பம், ஸர்வஸாரம், ஸ்கந்தம் முதலிய உபநிஷத்துக்களைப் படிப்பவர்களுக்குத் தெய்வமிகழுந்தன்மை, மதத்வேஷம், சிவவிஷ்ணு தாரதம்யம் எவ்வாறு மனதினில் தங்கிநிற்கும்? பஸ்மஜாபாலம், ருத்ராக்ஷஜாபாலம், க்ருஷ்ணோபநிஷத்முதலியவைகளைவாசிப்பவர்களுக்கு விபூதி ருத்ராக்ஷம் விஷ்ணு ஆராதனம் முதலியவைகளின் ரஹஸ்யம் வெளியாக அவர்கள் தமது ஆசாரங்களை கைவிடத் துணிவார்களா? ஆகவே இந்த ஸாதாரண உபநிஷத்துக்கள் ஒவ்வொருவனையும் தன்னிலையை விட்டு வீணே பெயர்ந்து ஞானத்திற்கும், காமத்திற்கும் தகுந்தவனாகாவண்ணம் த்ரிசங்கு வாக்கிவிடாது. அவனவன் ஸத்கர்மங்கள், சிறப்பெனக் கருதும் புராணகதைகள் ஆகிய இவைகளின் உட்பொருளைக் காட்டி அவைகள் மூலமாக மேலான நிலையைஉணர்த்தி, அதை அவன் அடையும்படி செய்யும் திறமையை உடையன.

இவ்வுபநிஷத்துகள் இவ்வாறு ஆசார பாகங்களையும் சிற்சில மதபாக விஷயங்களையும் தழுவி நிற்றலால் இவைகள் பின்னர் செய்து வேதங்களோடு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்; ஆகவே இவைகளை உபநிஷத்துக்கள் தொகுதியுள் சேர்க்கக்கூடாது; என்று மேனாட்டார், அபிப்ராயப்படுகின்றனர். மேனாட்டார்களுக்கே ஒரு புஸ்தகம் இன்னால் இக்காலத்தில் எழுதப்பட்டது என்பதை விசாரிப்பதாகிய இலெண்ணும் விருத்தியில் அதிகப்ரீதி. நமக்கோதொன்றுதொட்டு புஸ்தகம் எழுதியவன் எவனாயினும், அது எப்பொழுது எழுதப்பட்டதாயினும், அதனுள் அடங்கி யிருக்கும் விஷயத்தின் சிறப்பக்கண்டு களிப்பதாகிய பழம்தின்னும் விருத்திலேயே அதிகப்ரீதி. உபநிஷத்து என்ற பதத்திற்குப் பரம்பொருள் அருகாமையில் கொண்டு சேர்த்து அக்ஞானத்தையும் அதன் மூலமாக ஏற்படும் ஸம்ஸாராதி துக்கத்தையும் நாசம் செய்வது என்று பொருள். இந்த லக்ஷணம் இந்த 108 உபநிஷத்துக்களில் பொருந்தி யிருப்பதால் அவைகளுக்கு இப்பெயர் தகும். மேலும் முற்காலத்தவர்களால் இவைகள் எடுத்துப் பாராட்டப் பட்டிருந்தமையால் இவைகள் தேச சரித்ரங்கள் சென்றெட்டும் காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகவே இவைகள் மேனாட்டு சரித்ரமெழுதுவோர் கூறுவதுபோல அதிநூதனமானவைகளல்ல.

இந்த நூற்றெட்டு உபநிஷத்துக்களின் ஸாரத்தை தொடர்ச்சியாக **உபநிஷத்ரத்னமாலை** என்ற தலைப்பின்கீழ் எழுதிவருவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது நண்பர்கள் அவைகளை ச்ரத்தையுடன்வாசித்துவருவார்கள் என்று நம்புகிறோம்.

---

**கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள ஸம்பந்தம்.** காந்த ஊசி எப்பொழுதும் உத்தரதிக்கையே சுட்டிக்காட்டுகின்றது. அதனால் தான் கப்பல்கள் தம்வழி தவறாது செல்கின்றன. மனிதனது ஹ்ருதயமும் பகவானை நோக்கி எதுவரையில் ப்ரார்த்தித்து நிற்கின்றதோ, அதுவரையில் அவன் ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்து மூழ்கிப் போகாமலிருப்பான்.

# ✓லார்டு பைரன்

## LORD BYRON



### முன்னுரை

உலகத்தின் எப்பாகத்திலும், எக்காலத்திலும் நூல்கள் இரண்டுவிதமாக எழுதப்பட்டு வருகின்றன. ஒன்று உரை அல்லது வசனநடை; மற்றொன்று பாட்டு அல்லது செய்யுள் நடை. இவற்றுள்ள முன்னையது சொற்பெருக்கமும், சாதாரண பொருளும் கொண்டுவிளங்கும். பின்னையதோ சொற்சுருக்கமும், பொருளாழமும் பெற்று விளங்கும். மேலும், வசனநடை தன்னைப்பயில்வாரின் அறிவை (Knowledge) மாத்திரம் விளக்கும். மற்று பாட்டோவெனின்; தன்னைப் பயில்வாரின் அறிவை விளங்கச்செய்வதோடு நில்லாமல், வசனத்தைவிட இன்னும் சிறிது மேற்படியிற் சென்று, அவர்களுடையஉணர்வையும்(Feelings) எழுப்பிவிடும் ஆற்றலுடையதாகும். தவிர, சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினர்களாகிய நமக்கு, வசனத்தைவிட பாட்டே பெரிதும் பயனுடையதாகும். ஏனெனில் வசனம் விரிந்து செல்லும் இயல்புடையதாதலின், அதனைப்படித்து பொருள் தேறுதற்கு நாள்செல்லும். அங்ஙனம்

தேர்ந்தபிறகும் வேண்டாதனவற்றை நீக்கியும், வேண்டுவனவற்றைக் கொண்டும், கிரகிக்க வேண்டிய சிரமம் ஏற்படுகிறது. செய்யுளில் இந்தச் சிரமம் இல்லை. தவிர, பாட்டு ஆன்மா உணர்வை எவ்விதம் சென்று பற்றுகிறதோ, அவ்விதம் வசனம் செய்யாது. இதனாலேயே அறிவிற் சிறந்த சான்றோர் பலர், பற்பல காலங்களில், பலபல இடங்களிற்றேன்றி இயற்கையை ஒட்டிக் கவிகள் இயற்றுவாராயினர். அத்தகைய சான்றோரில் ஒருவராம், இப்போது யாம் எழுதப்புகுந்த சரித்திரச்சுருக்கத்துக்கு உரியவரான லார்ட் பைரன்.

## பைரனுடைய முன்னோர்கள்.

லார்டு பைரனுடைய குடும்பம் பண்டைக் காலந் தொடங்கியே உள்ள ஒரு குடும்பம் என்றும், அக்குடும்பத்தார் தலைமுறை தத்துவமாக ப்ரபுத்வமும், கௌரவமும் கொண்டு விளங்கினவர்கள் என்றும் தெரிகிறது. பதினைந்தாம், பதினாறும் நூற்றாண்டுகளிலேயே இக்குடும்பத்தார் ப்ரபுத்வம் பெற்றுவிட்டார்கள். அரசர்களுக்கு உதவியாக எவர்கள் யுத்தகளத்தில் போரியற்றி, வெற்றிபெற்று, அரசர்களால் சம்மானிக்கப்பெற்றுப் பிரபுக்களானார்கள். இங்கிலாந்தைப் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் பரிபாலனஞ்செய்த எட்டாவது ஹென்றி, பைரன் குடும்பத்தாருக்கு, நியூஸ்டெட், நாட்டிங்ஹாம் ஷயர், என்னும் இடங்களில் பெரும் பகுதியான நிலங்களை இனமாக அளித்தார் என்றும், பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தை ஆண்ட சார்லஸ் முதலாவான், அக்குடும்பத்தாருக்குப் பாரன் (Baron) என்னும் பட்டமளித்தார் என்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. சார்லஸ் அரசர் செய்த எந்தமரியாதைக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாய், அவருக்குச் சார்பாக இக்குடும்பத்தார் இருந்து, பல இடங்களில் அவருக்காக யுத்தம் செய்து வெற்றி பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பைரன் குடும்பத்தின் ஐந்தாம் தலைமுறையில் உதித்தவர் இப்போது இங்கு பிரஸ்தாபிக்கப்படும், பாலகவியாகிய லார்டு பைரனுக்குப் பாட்டனாராவர்.

## பைரனுடைய பாட்டனர்

1765-ஆம் வருஷத்தில் இவர்மீது ஒரு கொலைக்குற்றம் கொண்டுவரப் பட்டது. இவர், தம்முடைய நெருங்கிய பந்துவான சாவோர்த் (Chaworth) என்பவரை வேண்டுமென்றே கொலைசெய்து விட்டாராம்! அதிகாரிகள் இவர் மீது கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தை விசாரணைபுரிந்து இவர் கொலைக்குற்றத்துக்குப் பாத்தியப்படார் என்று கருதினவரை விடுதலை செய்து விட்டார்கள். ஆனாலும், பொது ஜனங்களின் அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்தது. சாவோர்த்துக்கும், இவருக்கும் நெடுநாளாகவே விரோதமென்றும், அந்தப் பகைமையை இவர் மனதில் வைத்துக்கொண்டே சமயம் பார்த்திருந்து, இருவருக்கும் மல்யுத்தம் ஒரு சமயம் நேர்ந்தபோது, இவர் அநியாயமாய்ச் சாவொர்த்தைக் கொன்று விட்டார் என்றும் ஜனங்கள் அபிப்பிராயப்பட்டு இவரை இழித்துப் பேசினார்கள். இந்த இழிவையும், அவமானத்தையும் சகிக்கமுடியாமல் பைரன் நியூஸ்டெட் ஆபிக்குச் (Newstead Abbey) சென்று அங்கே ஒருவருடனும் கலவாமல் தனித்து வாழ்ந்து வந்தார். வருத்தமும் துக்கமுமே இவரை இவ்விதம் ஏகாந்தமாக இருக்கும்படிச் செய்தன. ஆனாலும், இவருக்குப் பூஸ்திதிகள் ஏராளமாக விருந்தன. இவருக்குப் புத்திரரும் இல்லை. இவர், தம் சகோதரியின் புத்திரனாகிய காப்பிட்டன் பைரன் என்பவரை அதிகஅன்போடும் விசுவாசத்தோடும், காப்பிட்டனின் குழந்தைப் பருவத்தில், வளர்த்து வந்தார். ஆனாலும் பிற்காலத்தில் இவருடைய வாழ்க்கை துன்பத்துக்கே இடமாயிருந்ததால், இவர் அந்தக் காப்பிட்டனையும், மற்ற உறவினர்களையும் வெறுத்து வந்தார்.

காப்பிட்டன் பைரன்

காப்பிட்டன் பைரன் அழகிற் சிறந்த ஆண் மகன். எப்படிப்பட்ட ஸ்திரிகளையும் தன்வசப் படுத்தக்கூடிய சரீரப்பொலிவும், வாக்கு சாமர்த்தியமும் நிரம்பவாய்ந்தவர். ஆனால், அவருடைய ஒழுக்கம், யாவராலும் அருவருக்கக்கூடிய அவ்வளவு இழிவாயும் கெட்டதாயுமிருந்தது. எவர் கார்மார்த்தன் மார்ஷியானஸ் என்னும் ஒரு உயிர் குலச்சீமாட்டியை, எவ்விதமாகவோ அவள் மனத்தைக்கலைத்து, ஒருவருக்குந் தெரியாமல் அழைத்துக் கொண்டு ஐரோப்பாவுக்கு ஓடிப் போய் விட்டார். அப்பெருமாட்டியின் கணவன் இதனை அறிந்து, அவளுக்குந் தனக்குமுள்ள விவாக பந்தத்தை நியாயஸ்தலத்தின் மூலமாய் நீக்கிக்கொண்டார். அதன்பிறகு அவளைக் காப்பிட்டன் பைரன் ஊராறியப்பகிரங்கத்திலேயே மணம் புரிந்துகொண்டார். விவாகமான சிறிது காலத்திற்கெல்லாம் அப்பெருமாட்டி அகஸ்தா பைரன் என்னும் ஒருபெண்குழந்தையைப் பெற்று இவ்வுலகில் விட்டுவிட்டுத் தான் பரகதியானள். இந்தப் பெண்குழந்தை வளர்ந்து பெரிதானபின்பு கர்னல்லீ (Leigh) என்பவர் விவாகஞ்செய்து கொண்டார். கார்மார்த்தன் இறந்தபிறகு, காப்பிட்டன் பைரனுக்குக் கடன் அதிகரித்தது. போதுமான பொருள் அவருடைய அனுவசியமான ஆடம்பரச்செலவுக்குக் கிடைக்கவில்லை. ஆதலால், வேறொரு பெரிய சீமாட்டியைத் தான் மனைவியாக அடைவதற்கு அவர் முயன்றார். ஏற்கெனவே, இவர் அழகிற் சிறந்தவரென்றும், தேனொழுகப்பேசும் சாமர்த்திய முடையவரென்றும் கூறியிருக்கின்றோமாதலால், இவர் வீசிய வலையில் வேறொரு பெண்மான் வந்து சிக்குவதுதானா ஒரு பெரியகாரியம்!

காதரைன் கார்டன்

இச்சமயத்தில் கார்டன் குடும்பம் என்று ஒரு கௌரவமான குடும்பம் இங்கிலாந்திலிருந்தது. இக்குடும்பத்தார் அரச குடும்பத்தில் விவாகம் முதலிய சம்பந்தங்கள் வைத்துக்கொண்டிருந்தவர்கள். முதலாவது ஜேம்ஸ் அரசரின் புத்திரியை எர்ல் அப் ஹண்ட்ளி விவாஹஞ் செய்துகொண்டார். அவருக்கும், ஜேம்ஸ் அரசரின் புத்ரிக்கும் பிறந்த மூன்றாவது குமாரர் ஸர்வில்லியம் கார்டன் என்பவர். அவர் பரம்பரையில் உதித்த கார்டன் அப் கைட் என்பவரின் புத்திரிதான் காதரைன் கார்டன் என்பவள் இருவருக்கு ஏராளமான நிலங்களும், ஆஸ்திகளும் இருந்தன. எவளை எவ்விதமாக வாவது விவாகஞ் செய்துகொண்டால், தம்முடைய தரித்திரம் நீங்கு மென்றும், கடன் ஒழியுமென்றும், காப்பிட்டன் பைரன் நினைத்து, இவளை மணம் புரிதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்தார். காப்பிட்டன் பைரனுடைய குணதிசயங்களை அறிந்தவர்கள், அவருடைய தகாத ஒழுக்கத்தைப்பற்றியும், கெட்ட நடத்தையைப் பற்றியும், காதரைன் கார்டனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறி எச்சரித்தும், அவள் அவரையே காதலிக்க ஆரம்பித்தாள். "காதலுக்குக் கண்ணில்லை" என்னும் மிதுமொழி மற்றவர்கள் விஷயத்தில் இப்படியாயினும், காதரைன் கார்டனைப்பற்றிய மட்டில் அது உண்மையாகவே முடிந்தது. காப்பிட்டன் பைரனுடைய மாயக் கண்ணியில், கபடுசூதரியாத இந்தக்கன்னி அகப்பட்டுக் கொண்டாள். மிஸ்டர் கார்டனுடைய சம்மதத்தைப் பெற்று காப்பிட்டன் பைரன், காதரைன் கார்டனை விவாகஞ்செய்துகொண்டார்.

பாலகவியின் பிறப்பு

காப்பிட்டன் பைரன், காதரைன் கார்டனை விவாகஞ்செய்துகொண்ட சிறிதுகாலத்துக்கெல்லாம், அவளுக்குச் சொந்தமான வீடு, வாசல், நிலம் முதலிய எல்லாச் சொத்துக்களையும் அவர் வியஞ்செய்து அழித்துவிட்டார். காதரைனுக்கு வருஷா வருஷம் 150 பவுன் ஜீவனத்துக்கு வந்துகொண்டிருந்தது. அவளுடைய பாட்டியின் மரணத்தினல் 1,112 பவுன் கிடைத்தது இவைகளைத் தவிர அவளுக்கு வேறு சொத்து ஒன்றுமில்லாமலே போய்விட்டது. 1786-ம் வருஷத்

தில், அதாவது விவாகமான ஒரு வருஷத்துக்குப் பிறகு, ஒற்றுமையில்லாத இந்தச் சதிபதிகளிருவரும் பிரான்ஸ்தேசத்துக்குப் போனார்கள். இந்த மாதரசியை அங்கே தனியே விட்டுவிட்டுக் காப்பிட்டன் பைரன் எங்கோ ஓடிவிட்டார். இனி காதரைனிடம் பொருளில்லை என்பதை அறிந்துகொண்ட காப்பிட்டன் இவ்விதம் அவளை நட்டாற்றில் விட்டுவிட்டு ஓடிப்போனது ஒரு ஆச்சரியமோ! 1787-ம் வருஷத்து இறுதியில் காதரைன் கார்டன் பூரண கருப்பத்துடன் தனியாக இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தாள். 1788-ம் வருஷம் ஜனவரிமாதம் 22-ம் தேதி இவள், பின்னொரு காலத்தில் சிறந்த கவிவாணராக வரப்போகும், ஜீயார்ஜ் கார்டன் பைரனைப் பெற்றெடுத்தாள். 1790-ம் வருஷத்தில் இவள் தன் கைக்குழந்தையை அழைத்துக்கொண்டு ஸ்காத்லாந்துக்குச் சென்றாள். பைரனுடைய தகப்பனும், இவளுடைய கணவனுமாகிய காப்பிட்டன் பைரன் மறுபடியும், இவளிடம் இன்னும் சிறிதிருக்கும் பொருளையும் அழிப்பதற்காக, ஸ்காத்லாந்து வந்து, இவளுடன் சிறிதுகாலம் கூடியிருந்து, மறுபடியும் இவளை விடுத்து, வாலென்ஷினஸ் என்னுமிடத்துக்குப் போய், அங்கே 1791-ம் வருஷம் இறந்துபோனார்.

### பைரனுடைய இளமைப்பருவம்

பைரனுக்கு ஐந்து ஆண்டு நிறைந்ததும், ஆபர்டின் நகரத்திலுள்ள ஒரு சிறு பள்ளிக்கூடத்துக்குக் கல்வி பயில்வதற்காக மிஸஸ் காப்பிட்டன் பைரன் அவரை அனுப்பினர். அங்கே ஒரு வருஷம் வரையில், போவர் என்னும் பெயருடைய போதகாசிரியர் அவருக்குக் கல்வி கற்பித்துவந்தார். இந்த ஒரு வருஷத்தில் எழுத்துக்கூட்டிப்படிக்க இவர் கற்றுக்கொண்டார். அதன் பிறகு ஸ்காடிஷ்பாதிரியாராகிய மிஸ்டர் ராஸ் என்பவர், பைரனுக்கு எடுத்த புத்தகத்தை வாசிக்கும்படிக் கற்றுக்கொடுத்தார். அதன் பிறகு மிஸஸ் பைரனுக்கு ஜோடுதைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு சக்கிலியின் புத்திரராகிய மிஸ்டர் பாட்டர்ஸன் என்பவரிடம், லத்தின் கிரீக் முதலிய பாஷைகளின் ஆரம்பப் பயிற்சியை லார்ட் பைரன் அடைந்தார். இதற்குள் பைரன் குடும்பத்துக்கு வேர்வார்சான ஒருவர் இறந்துபோகவே, நம்முடைய பைரன் பாரன் பட்டத்தை அடைந்தார். உடனே இவரை ஆபர்டின் இலவச இலக்கணக்கலாசாலையில் சேர்த்து கொண்டார்கள். 1798-ம் வருஷத்தில், காப்பிட்டன் பைரனுடைய தாய் மாமன், அதாவது நியூஸ்டெட் ஆபிஸில் ஏகாந்தமாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்த பைரன் இறந்துபோகவே, வேறு வார்சு இல்லாமல் அவருடையசொத்தெல்லாம் லார்டு பைரனுக்குவந்தது. இவைகளைத்தவிர மூன்றுவது ஜீயார்ஜ் சக்கரவர்த்தி தம்முடைய பொக்கிஷத்திலிருந்து வருஷமொன்றுக்கு 300 பவுன் காதரைன் கார்டனுக்குக் கொடுத்துவரும்படி உத்தரவிட்டார். ஆகவே, அவளுடைய தரித்திரத்தசை நீங்கி மறுபடியும் அவள் செல்வமுடையவளானாள். இப்போது லார்டு பைரனுக்கு வயது பதினொன்று.

### தாயும் பிள்ளையும்

பைரனுடைய தாயார் கல்வியறிவு சிறிதுமில்லாதவளாயும் முரட்டுத்தனமும் கோபமும் குடிகொண்டவளாயு மிருந்தாள். தன் குழந்தையை மிகவும் கொடுமையாக நடத்திவந்தாள். தாய்க்கும் பிள்ளைக்கும் எப்போது பார்த்தாலும் சண்டையும் சச்சரவும் நடந்துகொண்டே யிருக்கும். ஆனாலும், சில சமயங்களில் தாய் இந்தக் கவிவாணரை அன்புடன் நடத்துவாளாம்! பிள்ளையும் தாயாரை நேசித்தேவந்தார். ஒரு சமயத்தில் தாய், குழந்தையான பைரனைப்பார்த்து "நொண்டிக் கழுதையே!" என்று தூஷிப்பாளாம்! மற்றொரு சமயத்தில் "கண்ணே! நீ ஒரு பெரிய பிரபு என்பதை மறந்துவிடாதே! உன்னுடைய கண்கள் உன் தகப்பனாரின் கண்களைப் போலவே அழகாய் இருக்கின்றன!" என்று சொல்லிச் சிலாகித்து முத்தமிடுவாளாம்! அவள் தன்னுடைய கோபத்தை எவ்வளவு கடூர

மாய்க் குழந்தையிடம் காட்டுவாளோ, அவ்வளவு கிரமாகவே தன் அன்பையும் காட்டுவாளாம். சந்தோஷத்தினல் குழந்தையை அவள் தட்டிக் கொடுத்தால், கோபத்தினல் அடிப்பதைப்போல் பிறருக்குத் தோன்றுமாம்! வீட்டிலிருக்கும் கரண்டி, தட்டு, கத்தி எவையா யிருந்தபோதி லும், கோபம் வந்துவிட்டால் அவைகளாலேயே தன் குழந்தையை அடிப்பாளாம்! பைரன் பிறந்த போதே அவருடைய காலில் ஒன்று சிறிது திரிந்து முடம்போல் காணப்பட்டதாம். இப்படி யிருப்பதை அவரே அடிக்கடி பார்த்து வெட்க மும், வருத்தமும் அடைவாராம். இவ்விதமாக இவர் இருந்துவரும் நாளில் இவருடைய இயற்கை ஞானம் சிறிது சிறிதாகப் பிரகாசிக்க ஆரம்பித்தது.

## காதலின் மகிமையும், கவியின் பேருமையும்

லார்டுபைரன் தம்தாயாரோடு அபர்டின் நகரத் துக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள ஒரு கிரா மத்துக்குச் சென்றார். அங்கே மேரிடப் (Duff) என்னும் ஒரு சிறுமி இருந்தாள். அவள் அழ கிற்சிறந்தவள். லார்டுபைரன் அவளைக் காதலிக்க ஆரம்பித்தார். இச்சமயத்தில் பைரனுக்கு வயது எட்டுதான். அந்தச் சிறுமிக்கும் ஏழு அல்லது எட்டுவயதுதா னிருக்கும். இவருக்கு எழுதத் தெரியாததலால், இவர் தன்னுடைய செவிலித் தாயாகிய மேரிகிரே என்பவளைக் கொண்டு, தான் எழுதியதுபோல் காதற்கடிதம் எழுதச் சொல்லி, அதை மேரிடப் என்பவளிடம் கொடுப்பாராம். இப்படியாகப் பால்யத்திலேயே இவருக்கும், மேரி டப் என்பவளுக்கும் காதல் முற்றிவிட்டது. ஆனல், மேரிடப் வேருெருவனைக் கல்யாணம் செய்துகொண்டாள். இந்தச் சங்கதி லார்டுபைர னுக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. அவர் மனவருத்தத்தினல் பல இரங்கற்பாக்கள் பாட ஆரம்பித்தார். பிறகு 1806-ம் வருஷத்தில் மிஸ்மேரி அனிசாவோர்த் என்பவளைக் கண்டு அவளைக் காதலித்தார். அவள் ஏற்கெனவே இவ ருக்கு நெருங்கிய பாத்தியமுடையவள். அப்படி யிருந்தும் அவளும் வேருெருவனை விவாகஞ் செய்து கொண்டாள். இதனல் ஏற்கெனவே புண்பட்டிருந்த லார்டு பைரனுடைய மனம், இன்னும் உடைய ஆரம்பித்தது. காதலின் பெருக்கும், அக்காதலை அடையப் பிரயத்தனப் பட்டும் முடியாமற்போனதால் உண்டான வருத் தமும், லார்டு பைரனுடைய மனோபாவத்தைக் கடல்மடை திறந்தாற்போல் திறந்து விட்டன வாதலால், அவர் பெருங்கவிவாணராய் பிற்காலத் திலானர்.



## பைரனுடைய குணாதிசயங்கள்

லார்டு பைரனும், ஸர் ராபர்ட் பீலும் (Peel) ஒரு சாலை மாணுக்கர்கள். லார்டுபைரன் கலா சாலைப் பாடங்களைச் சரியாகப்படிப்பதில்லை. ஆனல் தேச சரித்திரங்களை மட்டும் கவனத்து டனும் ஆவலுடனும் படித்துவந்தார். கவி பாடு வதில் இவருக்கு இயற்கை ஞானம் அதிக மிருந் தது. மலைகளையும், வனங்களையும், மிகுந்த சந் தோஷத்துடன் கூர்ந்து கவனிக்கும் இயல்புடை யவர். பைரனுடைய மனது மிகவும் இளகிய மனது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகி ருேம். இவர் கலாசாலையில் படித்துக்கொண்டி ருந்தபோது ஸர் ராபர்ட் பீலை ஒரு மாணுக்கன் அடித்தானும். இவர் அவனைப் பார்த்து "நீ இன்னும் எத்தனை அடி அவரை அடிக்கப்போகி ருய்?" என்று கேட்டாராம். "நீ ஏன் கேட்கி ருய்?"என அவன் வினவியதற்கு "நீ சொன்னல், அதில் பாதியை நான் வாங்கிக்கொள்ளுவேன்" என்று பைரன் பதில் கூறினராம். பைரனுடைய இறுதிக்காலம் கவிகள் பாடுவதிலேயே பெரும் பாலும் சென்றது. காதல் என்னும் அரிய தனத் தை இவர் இழந்துவிட்டபடியால், உலகவாழ்க்கை மிகக் கடினமாயும், வருத்தமாயும் இவருக்குத் தோன்றிற்று. "ஐயோ! இனி நான் சிறுவனல்ல என்கிற உணர்ச்சிஎனக்கு மிகுந்தவருத்தத்தைக் கொடுக்கிறது!" என்று இவரே ஓரிடத்தில்கூறு கிருர். லார்டு பைரன் தம்முடைய முப்பத்தா ரும் ஆண்டில் 1824-ம் வருஷத்தில், தம் புக முடம்பைமட்டும் நிலைநிறுத்திவிட்டு, மண் ணுடம்பை ஒழித்தார்.

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்

# அத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 2. ஆறுவது சினம்.

இதற்குத் தணிக்கத்தகுந்தது கோபமாகிய தீ என்பது பொருள். ஆத்திசூடியில் கூறப்பட்டுள்ள மற்றைய நீதிவாக்கியங்களில் எல்லாம் வினைமுற்று முடிவிலும் பெயர் முதலிலும் காணப்படுகிறது. இது ஒன்றில் மாத்திரம் இந்த ஒழுங்கு மாறி அமைந்து கிடக்கிறது. இதன் நோக்கம் 'தணிக்கத்தகுந்தது கோபம் ஒன்று தான், மற்றைய துர்க்குணங்கள் இது தணியத் தாமே அடங்கும்' என்பதை வற்புறுத்த வேண்டும் என்பதே. வேர் அறுபட்டுவிட்டால் எவ்வாறு எளிதில் பெரியமரமும் பட்டுப்போய் விடுமோ அதுபோலக் கோபம் அறுந்துவிட்டால் அதை வேராகக்கொண்டு வளரும் மற்றைய கெட்ட குணங்கள் பழக்கங்கள் யாவும் தாமே வளர முடியாது அடங்கிவிடும்.

நாம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கும் வஸ்துவாவது நிலையாவது கைகூடாக்காலத்தில் ஒருவித மனச்சஞ்சலம். பொங்கி எழும், இந்த மனச்சஞ்சலம். கிளர்ந்துவிட்டால் எருமைக்கடா விழுந்து கலக்கிய குட்டைபோல மனம் கலங்கிவிடும். ஒருவித படபடப்பும் பதட்டமும் உண்டாகிவிடும். அப்பொழுது நமக்கு நன்மை உண்டாகும் வழி இது, தீமையை வருவிக்கும் வழி இது என்று பகுக்குமறிவு இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிவிடும். தமது பலாபலம் எதிரிகளது பலாபலம் முதலியவைகளை விசாரிக்க இடம் கொடுக்காது நமது இஷ்டம் பூர்த்தியாகாதிருப்பதற்குக் காரணமாக விருப்பவைகளின் மேல் மனம் பாய்ந்தோடி அதைக் கெடுக்கவேண்டும் என்ற ஆவலேமேலாகக் கிளம்பியிருக்கும். நமது இஷ்டம் பூர்த்தியாகாததினால் நமக்கு நன்மையா தீமையா என்பதை விசாரிக்க அது இடமே கொடாது. வியாதி தீரவேண்டும் என்று கொடிய மருந்தைக்கொடுக்கும் வைத்யனிடம் அறியாமையில் அமுழ்ந்திக்கிடக்கும் ரோகிக்கு இந்த நிலைதான் ஏற்பட்டு அவனை யமனுகக் கருதும்படி செய்துவிடும். தர்மமார்க்கம் தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயத்தலால், இந்தக்கோபம் குறுக்கிட்டு ஜனங்களைத் தர்மமார்க்கத்தில் நடக்கவொட்டாது தடுத்துவிடும். அறிவுடையோர்களையும் இந்தக்கோபம் கிளம்பி, உணர்விழக்கும்படி செய்து, கோபம் அடங்கிய பின்னர் 'கோபத்திற்காளாகி என்ன கெட்ட காரியம் செய்துவிட்டோம்' என்று பரிதவிக்கக் காரணமாகவிருக்கும் காரியத்தை, முன்பின் யோசிக்காது செய்து முடிக்கும்படி செய்துவிடும். இவ்வளவு கேடுகளுக்குக், கோபம் ஹேதுவாதலால் அதைத் தான் முக்கியமாக அடக்கவேண்டும் என்று ஒளவையார் வற்புறுத்துகிறாள்.

கோபத்தைத் தணித்தால் அதனால் உண்டாகும் கேடுகள் நீங்குவதோடு கூட அதற்குக் காரணமாக இருப்பது இன்னது என்பதும் தெரியவரும். கோபம் வெளியே வந்து தொழில்படாமல் அடங்கப் பழகிவிட்டால், அது உள்ளேயே இருந்து நம்மை வருத்தும் அப்பொழுது கோபம் என்னும் தீ காமம் (அடங்கா ஆவல்)என்னும் விசால் எரியும்படி செய்யப்பட்டு நினைத்தபடி முடியாதிருத்தல் என்னும் நெய்யால் விருத்தியடைகிறது என்பது வெளியாகும். ஆகவே இவைகளை நீக்கவேண்டிய சாஸ்திரஞானம் முதலியவைகளை ஸம்பாதிக்கவேண்டும் என்ற ஆவல் பிறக்கும். கோபத்தை அடக்குவதால் வெளிஸுகமும் உள்விஷய அபிவிருத்தியும் ஏற்படுகிறது. ஆகவே கோபத்தை அடக்கவேண்டியது அவசியமே.

கோபத்தால் கெட்டவர் அநேகர். கோபம் தணிந்து மேன்மை பெற்றவர் சில புண்யவான்களே.

கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினன் ;
கோபத்தால் நகுஷனும் கோல மாற்றினன் ;
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன் ;
கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே !

முன்காலத்தில் வஸிஷ்டரிடமிருந்த காமதேனு (கேட்டதை எல்லாம் கொடுக்கும்: பசு) விஷயமாக கௌசிகருக்கும் வஸிஷ்டருக்கும் போர் உண்டாக அதில் வஸிஷ்டரின் ப்ரஹ்மதேஜஸ் பலத்தின்முன்கௌசிகரது க்ஷத்ரியபலம் சூறைக் காற்றிலகப்பட்ட பஞ்சுபோலப் பறந்தோடிப் போய்விட்டது. அப்பொழுது ப்ராஹ்மண்யம் ஸம்பாதிக்கவேண்டும் என்ற பேராவல் கௌசிகருக்கு வர, அவர் தபஸுக்கு ஆரம்பித்தார். தபஸு பூர்த்தியாகி வருங் காலத்தில் திரிசங்கு என்ற அரசன் தேஹத்தோடு ஸ்வர்க்கம் புகவேண்டும் என்று வஸிஷ்டரிடம் ப்ரார்த்திக்க, அவரால் நிராகரிக்கப்பட்டு சண்டாள ஜன்மமடைந்து கௌசிகரிடம் வந்து சேர்ந்தான். வஸிஷ்டரிடமிருந்த கோபத்தால் கௌசிகர் ஒரு யாகம் செய்துவைத்துத்திரிசங்குவைஸ்வர்க்கம்ஏற்றுவதாக ஒப்புக்கொண்டார். யாகத்திற்குப்ராஹ்மணர்களை அழைக்க அப்பொழுது வஸிஷ்டர் பிள்ளைகள் 'யஜமானன் சண்டாளன்; பண்ணிவைப்பவன்க்ஷத்ரியன்: இதென்ன யாகம்!' என்றுஇகழ்ந்துபேசியதுஇவருக்குத்தெரியஅவர்களைச் சபித்தார். பின்னர் யாகமுடிவில் திரிசங்குவை ஸ்வர்க்கம் ஏற்ற, அங்கிருந்து அவன் கீழே தள்ளப்பட்டான். நடுவில் அவனை நிறுத்தித் தனது தவத்தின் மஹிமையால் ஒரு புதிய ஸ்வர்க்கம் உண்டாக்கினர். வஸிஷ்டரிடமிருந்த கோபத்தினலேயே ஹரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி வீம்புக்காக எவ்வளவோ வருத்தி முடிவில் அவன் ஸத்தியத்திற்காகத் தன் தவத்தில் கௌசிகர் பாதி கொடுத்தார். இம்மாதிரி கோபத்தால் தன் தவத்திற்கு வந்த கேட்டை எண்ணி உறுதியான மனதுடன் வெகுகாலம் தவம்செய்ய இடையில் அதற்கு மேனகையால் விக்னம் வந்தும் பின்னர் அவ தவம் முன்னிலும் அதிகமாக வளர்ந்தது. அப்பொழுது ரம்பைவர, மேனகையிடம் ஏமாந்தது இவருக்கு ஞாபகம் வந்து விட்டது. உடனே, கோபம் பொங்கிஎழ ரம்பையைச் சபித்தார். அப்பொழுது ப்ரஹ்மா தோன்றி, 'இந்தக் கோபம் கூட அடங்கி லாத்விகம் மேலிட்டால்தான் உனக்கு ப்ராஹ்மண்யம் வரும்' என்றார். அதன்படியே கோபத்தால் தவத்தைக்கொட்டிய அனுபவத்தால் திடப்பட்ட கௌசிகர் வெகுகாலம் சித்தசலனமே இன்றித் தவம்செய்து கோபத்தைக்கடிந்து முடிவில் ப்ராஹ்மணராகி விச்வாமித்ரர் என்ற பெயரையும் பெற்றார்.

சந்திர வம்சத்தில் நகுஷன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் நூறு அச்வமேத யாகங்கள் செய்து இந்திர பதவிக்குரியவனாக இருந்தான். அப்பொழுது இந்திரனுக்கு ஒரு ஆபத்துவர அவன் தாமரைத் தண்டுள் வெகு காலம் ஒளித்திருக்கவேண்டி வந்தது. நகுஷனை இந்த்ரனாக்கினார்கள். அவன் தன் பதவிக்கேற்பட்ட தர்மத்தைக் கவனியாது அதற்கு உரிய ஸுகங்களை மிகவும் மதித்திருந்தான். இவன் இந்திராணியைப் பெண்டாளவேண்டும் என்று கருதி அவளுக்கு இந்த ஸங்கதியைத் தெரிவித்தான். அதற்கு அவள் 'இந்திரன் வருவதுபோல ஆடம்பரத்துடன் ஸப்தருஷிகள் பல்லக்குத்தூக்க என் வீடுவந்து சேர்ந்து, தங்கள் இஷ்டப்படி செய்யலாம்,' என்றாள். அப்படி ஸவாரிக்கு வேண்டியவைகளைத் தயார்செய்து கொண்டு ஸப்தருஷிகளால் தூக்கப்பட்ட பல்லக்கில் ஏறி இந்திராணி வீட்டை நோக்கி நகுஷன் புறப்பட்டான். வழக்கப்படி அவர்கள் பல்லக்கை மெதுவாகத் தூக்கிச்சென்றனர். அப்பொழுது இந்திராணி மேலிருந்த காமத்தால் அவனுக்குக் கோபம் உண்டாக ருஷிகளை நோக்கிக் கடகடுத்த மொழிகளால் கொஞ்சமேனும் மரியாதை இன்றி 'ஸர்ப்ப! ஸர்ப்ப!!' (சீக்ரம், சீக்ரம்) என்று அதட்டினன். அப்பொழுது அகஸ்தியர் 'அல்பனுக்கு ஐச்வர்யம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்' என்று சிரித்துக்கொண்டு 'நீ ஸர்ப்பமாகக் கடவாய்' என்று சபிக்க உடனே ஒரு பெரிய மலைப்பாம்பாக நகுஷன் விழுந்து

விட்டான். பின்னர் அகஸ்தியர் காட்டிய வழிப்படி பீமஸேனனைக் காட்டில் விழுங்க மடக்க, அங்குத் தேடிவந்த தர்மபுத்ரரிடமிருந்து கேட்ட தர்ம ரஹஸ்யங்களால் பரிசுத்தனாகி சாபம் நீங்கினான்.

இந்திரனும் இவ்வாறு கோபத்தால் தனது வச்சிராயுதம் போடும் சக்தியை இழந்து தத்தளித்தான். முன்காலத்தில் ச்யவனர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவர் அசுவனி தேவதைகள் அனுக்ரஹத்தால் யௌவனம் பெற்றார். அவர்களுக்கு அதுவரையில் யாகத்தில் ஹவிர்பாகம் இல்லை என்பதை உணர்ந்து, ஒரு யாகம் செய்து அவ்வளவு உபயோககரமாகவிருந்த அச்வனி தேவதைகளுக்கு ஒருபாகம் கொடுக்க யத்தனித்தார். அப்பொழுது இந்திரன் வந்து தடுத்தான். அவனை எவ்வளவோ நயமாகக் காரணங்கள் காட்டி ச்யவனர் திருப்திப்படுத்தப் பார்த்தார். முடியாதது கண்டு அவனைக் கவனியாது ஆகுதிகள் கொடுக்கத் தொடங்கினார். அப்பொழுது இந்திரன் கோபங்கொண்டு அவர்மேல் வச்சிராயுதத்தைப்போட யத்தனித்தான். அவர் தபோமஹிமையால் அவன் கையை அசைக்க வொட்டாது தடுத்து யாகத்தை முடித்தார். பின்னர் இந்திரன் கோபம் அடங்கி ருஷியை வேண்ட அவர் அனுக்ரஹத்தால் முன்னிலையை அவன் அடைந்தான்.

கோபம் சண்டாளம்; ஆதலால் அது அடங்காது எவ்வளவு தவம்தான் ஒருவனிடமிருந்தும் பயனில்லை என்பதைப் பின்வரும் வேடிக்கை கதை நன்கு விளக்கும். ஒரு ப்ராஹ்மண ஸந்நியாஸி ஓர் ஊரில் வாஸம் செய்துகொண்டிருந்தார். அவர் தினம் நதியில்சென்று ஸ்நாநம் செய்தும், தமது ஆச்ரமத்திற்கு ஏற்பட்ட தர்மப்படி தவறாது நடந்தும் வந்தார். இவருக்குக் கோபம் மாத்திரம் அடங்கவில்லை. ஒருநாள் காலையில் இவர் ஸ்நாநம்செய்து செடிமறைவில் ஜபம் செய்துகொண்டிருக்கையில் இவரைப் பாராது ஒரு புதிய வெண்ணான் அந்தத் துறையில் துனி தோய்க்கத் தொடங்க, அதிலிருந்துவெளிவந்த திவலைகள் ஸந்யாஸிமேல் விழுந்தது. அவருக்குக் கோபம்வர வெண்ணானை நன்றாக அடித்துவிட்டு மறுபடி ஸ்நாநம்செய்ய முயன்றான். அப்பொழுது வெண்ணானும் அவ்வாறே செய்தான். 'நீ ஏன்! குளிக்கிறாய்', என்று கேட்க 'நீங்கள் பெரியவர்கள் தான். நீங்கள் ஸாதாரணமாகத் தொட்டால் அடியேனுக்கு ஒரு கேடும் இல்லை. நீங்கள் கோபாவேசத்தோடு என்னைத் தொட்டு விட்டபடியால் எனக்கும் தீட்டு வந்துவிட்டது' என்றான். அப்பொழுது, 'நாம் என்னசெய்தும் இந்த வெண்ணானுக்கு 'உள்ள கோபம் சண்டாளம்' என்ற அறிவு இல்லாமல் போய்விட்டதே', என்று பரிதவித்து வெண்ணான் வாக்கை உபதேசமாகக் கொண்டு கோபம் அடக்கிச் சிறப்புற்றார். (விவேகபோதினி முதல் தொகுதி பக்கம் 253ஐப் பார்க்க)

ஆகவே கோபம் சண்டாளம். அது அடங்கினால் அதன் காரியமாகிய கெட்ட தொழில்கள் நீங்கும். பின்னர் அதன்காரணமாகிய அதிகஆவல் அடங்குவதற்குவேண்டிய ப்ரயத்தனங்கள்செய்ய வேண்டும் என்ற நற்புத்தியுண்டாகும். ஆதலால் முக்யமாக அடக்க வேண்டியது கோபம் ஒன்றே.

---

**பரப்ரஹ்மத்தை அறிந்தவன்.**—ஜீவாத்மாவின் இயல்பை அறிந்துகொண்டு, 'நான் நீ' என்ற சொற்களின் உண்மைப்பொருளை யுணர்ந்தவனே பரப்ரஹ்மத்தை யறிந்தவன் ஆவான். 'என் வீடு, என் சரீரம், என் குடும்பம்' என்ற அஹம்பாவம், தீர்க்க விசாரணையுள்ளவனுக்கு உண்டாகாது. ஞானோதயம் உண்டான பிறகு அஹம்பாவம் அழிந்துபோய்விடும். உள்ளிப்பூண்டின் மேலுள்ள புரைகளை ஒவ்வொன்றாய் உரித்துக்கொண்டே வந்தால், கடைசியில் ஒன்றும் மிகுந்து நிற்காததுபோல், ராகத்வேஷாதிகளைப் படிப்படியாய் வென்றுவிட்டால், பின்னர் 'நான்' என்ற பாவனையே அழிந்துபோய்விடும். தத்வவிசாரம் பூர்ணமாய்ச் செய்தவனுக்குப் பரப்ரஹ்மம் ஒன்றே நித்யமாய்த் தோற்றும். அஹம்பாவம் அழியாமல் பரப்ரஹ்மஸ்வரூப ஸாக்ஷாத்காரம் உண்டாகாது.

# இந்திய நாணயங்களின் அபிவிர்த்தி

## THE EVOLUTION OF INDIAN COINAGE

**நான்** இன்றுசாயந்திரம் பிரசங்கஞ் செய்வதாக எடுத்துக்கொண்ட விஷயம் இந்திய நாணயவாரியின் அபிவிர்த்தி. அதாவது இந்திய நாணயங்கள் தற்கால நிலைமைக்கு எவ்விதம் வந்தன என்பதே. இந்திய நாணயவாரியின் சரித்திரத்தை நாம் நன்ருய் அறிந்துகொள்ள வேண்டுமானுல், அதை மூன்றுபாகங்களாகப் பிரித்துக் கொள்வது நலம். அவைகளாவன:—

(1) வட இந்தியாவின் பூர்வீக நாணயங்கள், (2) மகம்மதிய நாணயவாரியும், இந்து, ஐரோப்பிய நாணயவாரியும், (3) தென்னிந்தியாவின் நாணயவாரியும்.

I. வட இந்தியாவின் பூர்வீக நாணயங்கள்.— வட இந்தியாவில் முதல் முதல் நிஷ்கரிஷையான நிறையுள்ள உலோகத்துண்டுகள் தான் நாணயங்களாக வழங்கப்பட்டன. அப்பேர்ப்பட்ட நாணயங்கள் முதலில் உண்டானகாலம் கி. மு. 7-வது நூற்றுண்டு என்று சொல்லலாம். அதாவது இந்தியாவில் நாணயங்கள் உண்டாகி சுமார் 2500 வருஷங்களாகின்றன. அதற்கு முந்தி ஆடு, மாடுகள், தானியங்கள், சோழிகள், நாணயங்களுக்குப் பதிலாக உபயோகப்பட்டு வந்தன. கி. மு. 7-வது நூற்றுண்டில் நாணயங்கள் உண்டானதற்குக் காரணமென்னவென்ருல் இந்தியாவிற்கும் பிரதேசங்களுக்கு முண்டான வியாபாரமே. வியாபாரத்திற்கு நாணயமும் எழுத்தும் அத்தியாவசியம். ஆகையால்தான் அக்காலத்தில் நாணயங்களும், எழுத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆதிகாலத்தில் தற்காலமாதிரி நாணயங்கள் சர்க்காரால் அடிக்கப்படவில்லை. வியாபாரிகள், காசுக்கடைக்காரர்கள் முதலானவர்களால் அடிக்கப்பட்டன. பண்டைக்காலத்துநாணயங்கள் நாற்சதுரமாயும் மூலைகளில் வெட்டப்பட்டதுமான உலோகத் துண்டுகள், (Babylon) பேபிலோன் நகரத்து நாணயங்களைப்போல் செய்யப்பட்டனவென்று சொல்லலாம். ஏனென்ருல் (Babylon) பேபிலோனுக்கும் இந்தியாவிற்கும் ஆதிகாலத்தில் வியாபாரம் விமர்சையாய் நடந்தது. இந்த நாணயங்களின் மேலுள்ள குறிகள் அநேகவிதம். மனிதர்களென்ன, பிராணிகளென்ன, மரங்களென்ன, சூரியனென்ன, இன்னும் நானுவிதமான குறிகள் போடப்பட்டுள்ளன.

இந்த நாணயங்களுக்குப் பிறகு சற்றேறக் குறைய வட்டமான தொளை போட்ட நாணயங்கள் அடிக்கப்பட்டன. பிறகு செம்பினுல் வார்க்கப்பட்ட நாணயங்கள் மேற்கூறிய நாணயங்களோடு அதிகமாக வழங்கப்பட்டு வந்தன. இவைகளுடைய காலம் கி. மு. இரண்டாவது நூற்றுண்டு என்று சொல்லலாம். கொஞ்சம் இளகலாக இருக்கும்போது ஒரு பக்கத்திலடிக்கப்பட்ட படியால் இந்த நாணயங்கள் மற்ருெருபக்கத்தில் வளைந்துபோயின. இருபக்கத்திலும் முத்திரை யடிக்கிறவிதம் கிரேக்கரிடமிருந்தும் ரோமரிடமிருந்தும் கற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் கிரேக்தேசத்தரசனுகிய மகா அலெக்சாந்தர் 325 கி. மு. வில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்தார். அவர் படையெழுச்சியால் இந்திய நாணயங்கள் யாதொருவிதமான மாறுதல்களை யடையவில்லை. அவர் இறந்த பிறகு அவர் ஜெயித்த பெரிய ராச்சியத்தில் பிரிவினை யுண்டாயிற்று. அப்படிப் பிரிவினை யுண்டானதில் பாக்டரியா தேசம் மினுண்டர் என்னும் அரசனுல் ஆளப்பட்டது. மினுண்டர் என்பவன் பஞ்சாப்மீது படையெடுத்து வந்தான். அவனுடைய நாணயங்கள் கிரீக் நாணயங்களைப்போலவே அடிக்கப்பட்டன. அவைகள் வெகு அழகாயிருக்கின்றன. மீனுண்டர் படையெழுச்சியால் பஞ்சாப் தவிர இந்தியாவின் மற்ற பாகங்களின் நாணயவாரி யாதொருவித

மான மாறுதல்களை யடையவில்லை. அப்பாகங்களில் ஜனங்கள் தங்கள் பழய நாணயங்களையே வழங்கினார்கள்.

## குஷான் அல்லது இந்து சிந்திய நாணயங்கள்

கிறிஸ்து பிறந்து முதலாவது நூற்றாண்டி னிறுதியில் யுகிகி என்னும் ஜாதியார் ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் முதலிய தேசங்களை ஜெயித்தார்கள். இந்தக் காலத்தில் ரோமர் ராச்சியம் ஆசியாகண்டத்தின் மேல்பாகத்தில் அகஸ்டஸ் என்னும் ரோமச் சக்கிரவர்த்தியால் விஸ்தரிக்கப்பட்டது. ஆகையால் இந்தக் காலத்து நாணயங்கள் ரோம நாணயங்களைப் போலவே யிருந்தன. இவ்விதமான நாணயங்கள் வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் சிற்சில பாகங்களில் அகப்பட்டிருக்கின்றன. குஷான் நாணயங்கள் முற்றிலும் ரோம நாணயங்களைப்போ லிருந்தன வென்று சொல்லமுடியாது. நிறையில் ஒத்திருந்தபோதிலும், மற்ற விஷயங்களில் கீழ்தேசத்து நாணயங்களைப்போலிருந்தன. குஷான் அரசர்களில் ஒருவராகிய இரண்டாவது காட்பீஷிஸ் என்பவருடைய நாணயங்களில் ஒரு பக்கம் நந்தியும் சிவனும் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் குஷான் நாணயங்கள் இந்தியநாணயவாரிசரித்திரத்தில் ஒரு முக்கியமான கட்டம். இதுவரைக்கும் நாணயங்கள் ஒருபக்கத்தில் அடிக்கப்பட்டன வென்றும் சர்க்கார் உத்திரவன்னியில் பிரஜைகளாலேயே அடிக்கப்பட்டன வென்றும் சொன்னோம்.

இது முதற்கொண்டு, அதாவது, கி. பி. முதலாவது நூற்றாண்டுமுதல் நாணயங்கள் சர்க்காரால் இருபக்கத்திலும் அடிக்கப்பட்டன. இரண்டாவது காட்பீஷிஸுக்குப் பிந்தி பட்டத்துக்கு வந்தவர் கானிஷ்கா. இவர் பெருங்கீர்த்தி பெற்ற சக்கிரவர்த்தி. இவருடைய முக்கிய இராஜதானி புருஷபுரம் (Peshawar), மற்றொரு இராஜதானி காபூல். இந்த இரண்டு நகரத்துத் தங்கசாலைகளிலும் ஏராளமான நாணயங்கள் தங்கத்திலும் செம்பிலும் அடிக்கப்பட்டன. கானிஷ்கா பௌத்த மதத்தில் வெகு பிரியமுள்ளவர். சென்ற 1909ஷு த்தில் கவர்ன்மெண்டார் பெஷாவாருக்குச் சமீபத்தில் வெட்டிப் பார்த்ததில் கானிஷ்கா கட்டிய பெரிய பௌத்தக்கோவிலும் பௌத்தரின் எலும்புகளுடைய பெட்டியும், இவருடைய நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நாணயங்களில் ஒரு பக்கத்தில் கானிஷ்கா நெருப்புப் பீடத்தின் கிட்ட நின்றுகொண்டிருக்கிறார். மற்றொரு பக்கத்தில் பௌத்தன் முதலான தேவதைகள் போடப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டு கானிஷ்கா முதலில் அக்னி ஆராதனை செய்தவரென்றும், பிறகு பௌத்தமதத்தைத் தழுவினாரென்றும் தெரிகிறது. இவர் காலத்துக்குப் பிந்திய நாணயங்களும் அநேகமாய் இவர் நாணயங்களைப் போலிருக்கின்றன. இவருடைய பேரனாகிய வாசுதேவர் கொஞ்சம் புதுவிதமாக நாணயங்கள் அடிப்பித்தார். அவைகள் ஒரு பக்கத்தில் கானிஷ்கா நாணயங்கள் போலிருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் காட்பீஷிஸ் நாணயம்போல் சிவனும் நந்தியும் போடப்பட்டுள்ளன.

கிறிஸ்து பிறந்து நான்காவது நூற்றாண்டில் வட இந்தியாவில் புது இராஜ்யம் ஒன்று உண்டாயிற்று. இதுதான் குப்த இராஜ்யம். இதற்கு இராஜதானி இப்போது பாட்னா என்று சொல்லப்பட்ட பாடலிபுரம். இந்த வமிசத்து முக்கிய அரசர்களில் ஒருவராகி சமுத்திர குப்தா என்பவர் தென் இந்தியாவில் கன்னியா குமாரி வரையில் படைஎடுத்துச் சென்றார். இவருக்குப் பின்வந்த அரசர் குப்த இராஜ்யத்தை மேற்கே அரபிக்கடல் வரையில் விஸ்தரித்தார். ஐந்தாவது அரசன் காலத்தில் குப்த இராஜியம் வெள்ளை ஹன்ஸ் என்னும் ஜாதியார் படை எழுச்சியால் க்ஷீணதிசை அடைந்தது. குப்த நாணயங்கள் வெகு அழகு வாய்ந்தவை. இதற்குக் காரணம் இந்தக்காலத்திலுண்டான சம்

ஸ்கிருதபாஷையின் அபிவிர்த்தியே. சமஸ்கிருத பாஷையை மிகவும் விருத்தி செய்த குப்த அரசன் விக்ரமாதித்தன். இவன் காலத்தில்தான் சமஸ்கிருத கவிசக்ரவர்த்தியாகிய காளிதாஸன் வாழ்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குப்த நாணயங்களில் இலக்கண சுத்தமான சமஸ்கிருதம் எழுதப்பட்டிருக்கிறது. கிரீக் எழுத்துக்களாவது அல்லது அக்காலத்தில் பேசப்பட்ட பிரகிருத எழுத்துக்களாவது கிடைபவே கிடையாது. இம்மாதிரியான நாணயங்கள் வெகுகாலம் நீடிக்கவில்லை. ஹன்ஸ்படை யெழுச்சியால் இவைகள் மறைந்து போய்விட்டன.

குப்த நாணயங்களெல்லாம் அனேகமாய் ஒரே மாதிரியாகத்தான் அடிக்கப்பட்டன. நாணயத்தின் ஒருபக்கத்தில் ராஜா நின்றுகொண்டிருக்கிறார். மற்றொரு பக்கத்தில் லட்சுமி தாமரை மலரில் வீற்றிருக்கிறாள். வட இந்தியாவில் நூற்றாண்டுகளாக நாணயங்கள் இம்மாதிரியாகவே அடிக்கப்பட்டன. 1339ஆ வரையில் காஷ்மீர் தேசத்து நாணயங்கள் இம்மாதிரியாகவே இருந்தன. மகம்மதுகோரி கூட லெட்சுமி போட்ட நாணயங்கள் அடித்ததாகத் தெரியவருகிறது.

## II. மகம்மதிய நாணயமும், இந்து ஐரோப்பிய நாணய வாரியும்

இதுவரையில் வட இந்தியாவின் பூர்வீக நாணயத்தைப் பற்றிச் சொன்னோம். இனிமேல் மகம்மதிய நாணயத்தைப் பற்றியும், இந்து ஐரோப்பிய நாணயத்தைப் பற்றிச் சொல்வோம். மகம்மது இறந்து சுமார் 64 வருஷங்கள் கழித்து, மகம்மதியர்கள் முதலில் நாணயங்கள் அடித்தார்கள். இந்த நாணயங்கள் மகம்மதிய வேதவாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. மனித உருவங்களாவது வேறு உருவங்களாவது கொஞ்சங்கூட கிடையாது. கி. பி. 712 வருஷத்தில் மகம்மதியர் முதல் முதல் இந்தியாவின்மீது படையெடுத்துச் சிந்து தேசத்தை ஜெயித்தார்கள். மகம்மதிய நாணயங்களையே அடித்தார்கள். அக்காலத்திலிருந்த ஹிந்து அரசர்கள் தங்கள் சொந்த நாணயங்களையே வழங்கினார்களே தவிர, புதுமாதிரியான மகம்மதிய நாணயங்களைப் பற்றி கொஞ்சங்கூட கவனிக்கவில்லை. பிறகு கஜினிமாமூது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். இவன் அடித்த நாணயங்களில் ஒரு பக்கத்தில் மகம்மதிய வேதவாக்கியங்கள் ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. மற்ற பக்கத்தில் எருது, குதிரை முதலிய ரூபங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவனடித்த நாணயங்கள் மகம்மதிய நாணயங்களுக்கு முற்றிலும் விரோதம். ஆயினும் இவைகள் இந்தியாவில் முதலி லடிக்கப்பட்ட ரூபங்களுள்ள மகம்மதிய நாணயங்கள். மகம்மதிய மதத்திற்கு முற்றிலும் விரோதமாக விருந்துங்கூட, இந்த நாணயங்கள் அனேக வருஷங்கள் நிலைபெற்றுப் பால்பன் காலம் வரையில் வழங்கப்பட்டன. பால்பனுக்குப் பின்வந்த மகம்மதிய அரசன் அல்லாவுடீன். இவன் தக்ஷணத்தின்மேல் படையெடுத்து ஏராளமான தங்கம் வெள்ளியை கொள்ளையடித்தான். ஆகையால் இவன் காலத்தில் தங்கவெள்ளி நாணயங்கள் ஏராளமாக அடிக்கப்பட்டன. இவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த மூபாரக் தன் நாணயங்களை ஹிந்து நாணயங்கள் போல் நாற்சதுரமாக அடிப்பித்தான். இந்த நாணயங்கள் ஷாஜகான் காலம் வரையில் வழங்கப்பட்டு வந்தன.

### டோக்ளாக் நாணயங்கள்

மகம்மதுபின் டோக்லாக் காலத்தில் நாணயங்கள் வெகு அழகாக அடிக்கப்பட்டன. ஆனால் இந்தப் பயித்தியக்கார அரசன் ஏராளமாய்ப் பித்தளை நாணயங்களை அடித்து அவைகளுக்கு வெள்ளி நாணயங்களுக்குரிய விலாவணி கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். ஜனங்கள் அவைகளை அங்கீகரிக்கும்பொருட்டு, அவைகளில், “அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்” என்று எழுதிவைத்தான். என்னசெய்தும் ஜனங்

கள் பித்தளை நாணயங்களை வெள்ளி நாணயங்களாக ஒத்துக்கொள்ளவில்லை.

இந்தக் கொடுங்கோன் மன்னன் இறந்துபோய் நூறுவருஷங்கள் கழித்தும் டோக்ளாக்பாடில், அவன் கோட்டையில் இந்த பித்தளை நாணயங்களெல்லாம் மலைமலையாய் குவிக்கப் பட்டிருந்தன. இவனுக்குப் பிந்திவந்த டோக்ளாக் லோடி அரசர்கள் நாணயங்களி லொன்றும் விசேஷமில்லை. லோடிவம்சத்து கடைசி அரசன் பேபரால் தோல்வியுற்றுக் கொல்லப்பட்டான். பேபர் மொகலாயராச்சியத்தை ஸ்தாபித்தான். பேபருடைய நாணயங்கள் முற்றிலும் புது மாதிரியானவை. இவன் மகன் ஹுமாயூன், சூர் வம்சத்து அரசனாகிய ஷர்ஷாவால் தோல்வியுற்று, இந்தியாவினின்றும் துரத்தப்பட்டான். ஷர்ஷா பட்டத்துக்கு வந்தான். இவன் நாணயங்கள் மிகவும் உயர்வானவை. முற்றிலும் புது மாதிரியானவை. இவன் நாணயங்கள் மொகலாயர்காலம் முடிய வழங்கிவந்த தன்னியில், 1835 வருஷம் வரையில் ஈஸ்ட்டு இந்திய கம்பெனியாரால் நிர்வகிக்கப்பட்டன. தற்காலம் வழங்கும் பிரிடிஷ் நாணயங்களுக்கு அஸ்திவாரம் அவைகளே. ஷர்ஷாகாலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் வழங்கப்பட்டன. அவன் வெள்ளி ரூபாய் தற்கால இங்கிலீஷ் ரூபாய்க்கு அனேகமாய் சமமாக விருக்கிறது. பிறகுவந்த அக்பர் சக்ரவர்த்தியால் முதலிலடிக்கப்பட்ட நாணயங்களும் ஷர்ஷா நாணயங்களைப் போலவே யிருந்தன. மறுபடி அடிக்கப்பட்ட நாணயங்கள் சிறியவை. அக்பருக்குப் பின் பட்டத்திற்குவந்த அரசன் ஜீகாங்கிர். இவன் நாணயங்க ளெல்லாம் வெகு அழகுவாய்ந்துள்ளன.

இவனுடைய மனைவியாகிய நூர்ஜிகானிடத்தில் இவனுக்குப் பற்றுதல் ஜாஸ்தி. ஆகையால் இவன் அடிப்பிவித்த நாணயங்களில் இவன் பெயரும் இவன் மனைவி பெயரும் போடப்பட்டிருக்கின்றன. இவனுடைய தங்க நாணயங்களில் இவன் கையில் பாத்திரமேந்தி குடிக்கிற பாவனையாகப் போடப்பட்டிருப்பதால் இவனுக்குக் குடியில் வெகு பிரியமென்று தோன்றுகிறது. மேற்கூறிய விநோதங்களெல்லாம் இவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த ஷாஜிகானல் முற்றிலும் தள்ளப்பட்டன. ஷாஜிகான் தங்கநாணயங்கள் மிகவும் பெரியவை. இவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த அவுரங்கஜீப் சக்ரவர்த்தி வைராக்கிய மகம்மதியனானபடியால் எல்லோரும் உபயோகிக்கக்கூடிய நாணயங்களின் மீது மகம்மதிய மதக்கொள்கை அடிப்பிக்கவில்லை. இவனுடைய நாணயங்களெல்லாம் ஒரே மாதிரியானவை. அவைகளடிப்பட்ட இடங்கள் மாத்திரம் போடப்பட்டவை. இவனுக்குப்பின் வந்த சக்ரவர்த்திகள் காலத்தில் மொகலாயராஜ்ஜியம் க்ஷீணதிசையடைந்தபோதிலும், இவனுடைய நாணயங்கள் நிர்வகிக்கப்பட்டுவந்தன. வரவர மொகலாய நாணயமானது ஆங்கிலேய இந்திய நாணயமாகப் போய்விட்டது. ஈஸ்ட்டு இந்திய கம்பெனியாருக்கு 1717, 1744, 1757, வருஷங்களில் தாங்களே நாணயங்களடிக்க உத்திரவு கொடுக்கப்பட்டது. ஈஸ்ட்டு இந்திய கம்பெனியார்நாணயங்களிளெல்லாம்ஸிம்ஹம்,யாளி, தவிர, மற்றவைகளெல்லாம் மொகலாய நாணயங்களைப்போலவே அடிக்கப்பட்டன. 1835 வருஷம் வரையில் ஈஸ்ட்டு இந்திய கம்பெனி நாணயங்கள் மொகலாய சக்ரவர்த்தியாகிய ஷஹாலம் பேரா லடிக்கப்பட்டன. பிறகு மொகலாய சக்ரவர்த்திக்குப் பதிலாக இங்கிலீஷ் ராஜாவாகிய நான் காவது உவில்யத்தின் தலை போடப்பட்டது. பழய நாணயங்களெல்லாம் அழிக்கப்பட்டன.

தற்காலத்துச் சுதேச ராஜ்யங்களின் நாணய

வாரி அவ்வளவு அழகுள்ளவை யல்லை. எல்லாம் சுதேசராஜ்யங்களும் பிரிடிஷ் நாணயவாரியை உபயோகிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மற்ற இந்த ஐரோப்பிய நாணயங்கள் போர்ச்சுகீஸ், டேன்ஸ், டச்சு, பிரென்சுமுதலிய நாணயங்களே. டேன்ஸ் நாணயங்கள் அனேகவிதமாய் தரங்கம்பாடியி லடிக்கப்பட்டன. 17, 18 நூற்றாண்டுகளில் டச்சுக்காரர் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் அடிப்பிவித்தார்கள்.

### தென்னிந்தியா நாணயவாரி

இனிமேல் சொல்லப்போகிறது தென்னிந்தியா நாணயவாரி. வெகுகாலம் வரையில் தென்னிந்தியா திராவிடநாடு ஆகையால் இதில் நாணயங்களுக்கும், வடஇந்தியா நாணயங்களுக்கும் கொஞ்சங்கூட சம்பந்தமில்லை. தென்னிந்தியா நாணயங்கள் மிகவும் சிறியவை. புராதன காலத்து நாணயங்கள் அகப்படுகிறதில்லை. அப்படி ஏதேனும் அகப்பட்டாலும் அவைகளினின்றும் ஒன்றும் தெரிகிறதுமில்லை. ஏனென்றால் பண்டைக்காலம் தொடங்கி தென்னிந்திய வட இந்திய அரசர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. அப்படி அடித்தவர்கள் சமுத்திர குப்தர், மாலிக்காபூர் பாமினிராஜ்ய மகம்மதிய அரசர்கள்.

வட இந்தியாவைப்போலவே தென்னிந்தியாவிலும் ஆதிகாலத்தில் தொளையிடப்பட்ட நாணயங்கள் வழங்கப்பட்டு வந்தன. இவைகள் வழங்காமல் நின்று விட்டகாலம் கி. பி. 200 என்று சொல்லலாம்.

ஏனென்றால் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஊதியூரிலும், மற்ற விடங்களிலும் கி. பி. 14ல் இருந்த அகஸ்டஸ் என்னும் ரோம சக்ரவர்த்தியின் நாணயங்கள் அகப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவில் ஆதிகாலத்தில் வழங்கினவை தங்கநாணயங்களே. ஏனென்றால் அந்தக்காலத்தில் கூட வயநாடு கோலார் முதலிய சுரங்கங்களில் தங்கம் வெட்டி எடுத்திருப்பதாகத்தெரிய வருகிறது. தங்கத்தின் நிறை இவ்வளவு கழஞ்சு என்று வழங்கப்பட்டு வந்தது. கழஞ்சில் பத்திலொரு பங்குக்கு மஞ்சாடி என்று பெயர். பொன் அல்லது வராகனென்று சொல்லப்பட்ட நாணயத்தின் நிறை கிட்டதட்ட ஒரு கழஞ்சு என்று சொல்லலாம். பணம் என்று சொல்லப்பட்ட நாணயத்தின் நிறை சற்றேறக்குறைய ஒரு மஞ்சாடி என்று சொல்லலாம். இம்மாதிரியான நாணயங்கள் 1833-வருஷம் வரையில் வழங்கப்பட்டு வந்தன.

தென்னிந்தியாவின் நாணய வாரியை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள்-(1) சளுக்கிய (2) பாண்டிய (3) சோழ (4) விஜயநகர நாணயங்களே.

சளுக்கிய தங்கநாணயங்களில் பன்றி போடப்பட்டதால் தங்கநாணயத்திற்கு வராகனென்ற பெயருண்டாயிற்று.[வராகம் = பன்றி]. பாண்டிய நாணயங்கள் மீன்போடப்பட்டுள்ளன. மேலே சொன்ன சளுக்கிய பன்றியும், பாண்டியமீனும் சோழநாணயங்களில் சிலவற்றில் போடப்பட்டிருக்கின்றன.

ராஜ ராஜ சோழருடைய நாணயங்களில் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிற அவலக்ஷண உருவமும், மற்றொரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அவலட்சண உருவமும் போடப்பட்டிருக்கின்றன.

இதைப் பாண்டிய ராஜாக்களிடமிருந்து சோழ ராஜாக்கள் கற்றுக்கொண்டார்கள். பாண்டியர் வடஇந்திய குப்த அரசர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.

விஜயநகர நாணயங்கள் வராகனைப் போலடிக்கப்பட்டன. எல்லாம் தங்க நாணயங்களே.

*ஐதர், திப்பு, கிருஷ்ணராஜ நாணயங்கள் விஜயநகர நாணயங்களைப் போலவே அடிக்கப்பட்டன.

G. இரத்தினம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

* இஃது கும்பகோணம் எலிமெண்டரி உபாத்திமைச் சங்கத்தில், ஷையூர் கவர்ன்மெண்டு காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் ஏட்ஸ் அக்ராஸனத்தின்கீழ் உபந்யஸிக்கப்பட்டது.

# சுத்தமும் அசுத்தமும்
## CLEANLINESS & UNCLEANLINESS

சுத்தம் அசுத்தம் இவைகளைப்பற்றி ஒருவன் என்ன சொல்லக்கூடும்? இவை எல்லாருக்கும் தெரிந்த வார்த்தைகள். இவைகளால் உணர்த்தப் படும் பொருள் யாருக்குத் தெரியாது? சுத்தமான வஸ்திரம் அசுத்தமான வஸ்திரம், சுத்தமான ஜலம் அசுத்தமான ஜலம் இவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசம் நமக்குத் தெரியாததோ என்று, இதின் தலைப்புப் பெயரை வாசிக்கும் நேசர்கள் கேட்கக்கூடும். இக்கேள்வியின் நியாயம் ஒப்புக்கொள்ளவேண்டியதே. சுத்தா சுத்தம் தெரியாமலா, நாம் முதற்சொன்னதை யங்கீகரித்து, இரண்டாவதைக் கழித்து வருகிறோம்? நாகரீகம் என்பதே இவ்விரண்டின் வித்தியாசத்தின் உணர்வின் அளவேயன்றோ? நாம் வேண்டிய அளவு நாகரீகத்தை யடைந்திருக்கிறோமென்று நாமெல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

ஆயினும், கொஞ்சம் ஊகித்துப்பார்த்தால் இச்சுத்தா சுத்தங்களைப்பற்றி எல்லாருக்கும் ஒன்றுபோல் அபிப்பிராயம் இருக்கிறதில்லையென்பது வெளிப்படும். உதாரணமாக: (சுத்தா சுத்த விஷயத்தில் மனதிற்கு கொஞ்சம் அரோசகமான உபமானங்கள் வரலாம்; விஷயத்தின் சுபாவத்தைக் கவனித்து நண்பர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறேன்). சில புது நாகரிகமுள்ளவர்கள் தமது கைக்குட்டைகளில் மூக்கைச் சிந்துகிறார்கள். இது தரையிலும் சுவர்களிலும் சிந்தி, தூண்களிலும் மேஜை நாற்காலிகளிலும் இடுப்பிலும் துடைப்பவர்களுக்குச் சுத்தமாகப் படவில்லை. வேறொரு உதாரணம்: சிலர் நாகரிகமாக வாழவிருப்பமும், சக்தியும் உள்ளவர்கள், பலவித பாய்களாலும் கம்பளங்களாலும் வீட்டுத்தளங்களை மூடுகிறார்கள். இதை, மற்றவர்பார்த்து, இப்பாய்களுக்கு அடியில் நாள் தோறும் சேர்ந்துவரும் புழுதியையே கவனித்தவர்களாய், சுத்தமானதாக ஒப்புவதில்லை. தினமும் பெருக்கி, அடிக்கடியலம்பிவரும் தரைக்குச் சமானம் இவையாகுமா என்று கேட்கிறார்கள்.

இது மாத்திரமல்ல, ஒருவிஷயத்திற்குச் சுத்தமானவஸ்து இன்னொரு விஷயத்திற்கு அசுத்தமாய் விடுகிறது. நாம் சாப்பிடுவதற்கு யோக்கியமான பதார்த்தங்கள் அநேகம், நமது துணிகளில் விழுந்தால் அவற்றை யசுத்தம்பண்ணி விடுகின்றன. அப்படியே உடம்பைச் சுத்தம் செய்யும் வஸ்து ஆகாரத்தில் விழுந்தால் ஆகாரம் அசுத்தமாய் விடுகிறது. தலைக்கு அலங்காரமாக எண்ணும் அளகத்தின் ஒரு ரோமம் ஆகாரத்தில் விழுந்திருந்தால், அவ்வாகாரம் சுத்தத்தில் குறைந்து விடுகிறது. இவ்விதம் சுத்தாசுத்தத்தைப் பற்றின அபிப்பிராயங்கள், விஷயங்களின் உற்பத்தி உபயோகங்களையும், கவனிப்பவரின் மனோபாவத்தையும் சம்பந்தித்துப் பேதப்படுகின்றன. இப்பேதங்களுக்குள், ஒரு வஸ்துவின் சுத்தா சுத்தத்தை நிர்ணயிக்க ஏதாவது மாறுபடாத அளவைகள் உண்டா என்பதை ஆராய்வது நமது கருத்து.

நாம் மாறுபடாத அளவை என்று சொல்லும் பொழுது, நமது அறிவிற்குத் தகுந்த என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், நம் அறிவு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகின்றதென்பது நிச்சயம். இவ்வறிவுக்குத் தகுந்தபடி நம் அளவு நிர்ணயங்களும் மாறுபடும். இதற்குச் சந்தேகமில்லை.

சுத்தம் என்றால் என்ன? அசுத்தம் இல்லாதது சுத்தம். எது அசுத்தம்? அசுத்தத்தின் அடையாளமென்ன? எந்தக்காரணத்தினால் ஒரு வஸ்து அசுத்தமானதாகச் சொல்லப்படுகிறது? இக்கேள்விக்குப் பதில் எல்லாருடைய மனதிலும் உதிக்கும். மனதிற்குச் சகிக்கக் கஷ்டமானது, அசுத்தம். இதின் முதல் நிர்ணய அளவைகள் நம்முடைய இந்திரியங்களே. முதலில் கண் பார்த்து ஒருவஸ்து தன் சுபாவநிறத்தைவிட்டு

வேறுநிறத்தைக்காண்பித்தால் அழுக்குப்படிந்ததென்று மனதிற்குச் சொல்லிக் கொடுக்கிறது. பிறகு மூக்கு வாசனையினால் ஒருவஸ்துவின் மலினத்தைத் தெரிவிக்கின்றது. இவ்விதம் இந்திரியங்களால் விரோதமாக அறிவிக்கப்பட்டு மனதினால் அசுத்தமானதாக மதிக்கப்படும் வஸ்துக்களுடைய பொதுவான குணம் எதென்று விசாரித்தோமானால், சரீரசௌக்கியத்திற்கு ஹிதமில்லாமையே யென்று தெரியவரும். அசுத்தத்தின் குணம் வியாதியை யுண்டாக்கக்கூடிய சக்தியே. அசுத்தமான காற்றும், அசுத்தமான ஜலமும், அசுத்தமான ஆகாரமும், அசுத்தமான உடைகளும் வியாதியை யுண்டுபண்ணுகின்றன.

அசுத்தமானவற்றின் வியாதி விளைக்குந் தன்மை அவற்றிற்கு எங்கிருந்து வந்தது என்பது அடுத்த ஆராய்ச்சி. இதைக் கவனிக்கும்பொழுது, சரீர சம்பந்தமுள்ள வஸ்துக்கள் அதிக அசுத்தமுள்ளனவாகவும், ஸ்தாவர சம்பந்தமுள்ளவைகள் அதற்கடுத்த படியிலும், மண் சம்பந்த முள்ளவை எல்லாவற்றிலும் குறைந்த அசுத்த முள்ளவையாயும் கருதப்படுகின்றன. இப்படி மேற்சொன்ன மூன்றுவித பதார்த்தங்களுள் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசத்தைப் பார்த்தோமானால், அழுகுதல் என்ற மாறுபாட்டையடையும் சக்தி பிராணி சரீரசம்பந்தமுள்ள வஸ்துக்களில் அதிகமாகவும், ஸ்தாவர சம்பந்த முள்ளவைகளில் குறைவாகவும், மண்சம்பந்த முள்ளவைகளில் இல்லாமலும் இருப்பது தெரியவரும். அழுகுதல்என்ற மாறுபாட்டின் தன்மையைக் கவனிக்கும்பொழுது அசுத்தத்தின் தன்மையும், அது வியாதியை உண்டுபண்ணும் விதமும் வெளிப்படும்.

அழுகுதல் (Decomposition, Putrefaction) என்பது பலவகைப்பதார்த்தங்கள் விசித்ரமாகச் சேர்ந்துள்ள ஒரு வஸ்து, அநேகம் சில்லரைப் பதார்த்தங்களாகப் பிரிக்கப்படும் செய்கையைக் குறிக்கின்றது. இச்செய்கையைப் பல விதமான அநேகங் கோடி சிற்றுயிர்களால் நடத்தப்படுகிறது. இச்சிற்றுயிர்கள் தகுந்த பதார்த்தங்களில் வளருவதினால், அப்பதார்த்தம் கெட்ட நாற்றமுள்ள வாயுக்களாகவும், நீராகவும், கரியமலவாயுவாகவும், சிலவித உப்புக்களாகவும் பிரிக்கப்படுகிறது. அதி விசித்ரமான சேர்க்கையையுடைய பிராணிஸம்பந்த பதார்த்தங்களும், ஸ்தாவரசம்பந்த பதார்த்தங்களும், பிரிந்து அத்தனை கலப்பற்ற பதார்த்தங்களாக மாறுவதற்கெல்லாம் இவையே காரணம். இவைகளால் உண்டாகும் பதார்த்தங்கள் அநேகம் கொடிய விஷங்கள். அநேகம் கொடிய வியாதிகளுக்கு இச்சிற்றுயிர்களே காரணம்.

இச்சிற்றுயிர்கள் ஸ்தாவரவுலகத்தைச் சேர்ந்தவை. நாய்க்குடைகளின் வகுப்பிலடங்கினவை. இந்நாய்க்குடைகளுக்கும் மற்ற ஸ்தாவரங்களுக்கு முள்ள வித்யாசமென்னவெனில், மற்ற ஸ்தாவரங்களுக்குப் பச்சைநிறத்தைக் கொடுக்கும் வஸ்து இவைகளிடத்தில் கிடையாது. பூமியிலிருந்தும், காற்றிலிருந்தும் தமக்கு வளருவதற்கு வேண்டிய ஆகாரத்தைச் செய்துகொள்ளும் சக்தி ஸ்தாவரங்களுக்கு இப்பச்சைநிற வஸ்துவினாலேயே உண்டாவதால், இந்நாய்க்குடைகளுக்கு இந்தச் சக்தி கிடையாது. இவைகளுக்கு ஆகாரம் முன்னமேயே தயாராயிருக்கவேண்டும். ஆனதால் இவை இறந்துபோன தாவரம் அல்லது பிராணிகள் சம்பந்தமான வஸ்துக்களிலேயே வளர சக்தியுள்ளனவாயிருக்கின்றன.

இச்சிற்றுயிர்களில் அநேகாயிரம் ஜாதிகள் இருக்கின்றன. ஒரு ஜாதி சர்க்கரையுள்ள ரசங்களைச் சாராயமாக மாற்றுகிறது. மற்றொரு ஜாதி அதே நீரைக் காடியாக மாற்றுகிறது. வேறொன்று பாலைத் தயிராகமாற்றிப் புளிக்கவைக்கிறது. நமது தோசைமா புளிப்பதும் அவைகளின் ஒரு ஜாதியினாலேயே. இன்னும் சில ஜாதியுயிர்கள், தரையில் போடப்படும் பிராணிகளின் கழிவு பதார்த்தங்களான மல மூத்திரங்களிலுள்ள உப்பு வாயு

கலந்த பதார்த்தங்களைப் பிரித்து வெடியுப்பாக மாற்றுகின்றன. இவைகளில் சில, புண்களில் ஒட்டிக்கொண்டு புண்சீப் பிடிக்கும்படியாகச் செய்கின்றன. வேறு சில பலவிதமான ரணஜன்னி களை விளைவிக்கின்றன. இன்னும் சில உயிருள்ள தேகங்களிலும் விஷய சக்தி பெற்றனவாய், காலரா, ஸன்னிபாத ஜுரம், க்ஷயம், குஷ்டம், முதலிய பல ரோகங்களையும் விளைவிக்கின்றன.

இச்சிற்றுயிர்கள் அதிநுட்பமானவை 1/10,000 முதல் 1/50,000 அங்குலப் பிரமாணமுள்ளவை. ஆயிரமடங்கு பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடிகளாலேயே பார்க்கத்தக்கவை. இவ்வளவு நுட்பமாயிருப்பதால் ஒரு சொட்டில் லக்ஷக் கணக்காகத் தங்கக்கூடும். உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. எங்கெங்கு தமக்கு ஆகாரம் கிடைக்குமோ அங்கு விழுந்ததும் அதி விரைவாய் விருத்தியாகின்றன. நாம் அசுத்த மென்று மனதினுல் கருதும் மலமூத்திராதிகளில் அபரிமிதமா யிருக்கின்றன. அப்படியே, நமது எச்சிலிலும், வியர்வையிலும், வியாதியஸ்தர்களுடைய மலம், மூத்திரம், வியர்வை, எச்சில் முதலிய கழிவுகளில் அந்தந்த வியாதிக்குக் காரணமான சிற்றுயிர்கள் அவைகளின் தன்மைப்படி நிறைந்து கிடக்கின்றன.

மேற்சொன்னதிலிருந்து ஒரு அனுமானம் உண்டாகிறது: அசுத்தமானவை வியாதிக்குக் காரணமாயிருப்பது இச்சிற்றுயிர்களாலேயே என்று. ஆதலால், வியாதிக்குக் காரணமான இச்சிற்றுயிர்கள் அதிகமாக நிறைந்துள்ளதும், அல்லது அவை சடுதியிற் சேர்ந்து வளருவதற்கு அனுகூலமானதுமான பதார்த்தங்கள் தான் அசுத்தமானவையென்று தெளிவாகிறது. இவ்விதமான பதார்த்தங்கள் நம் உடலில் சேராத வண்ணம் பாதுகாத்துக்கொள்வது நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்வதாகும். நம் சரீரத்தில் சம்பந்தப்படும் வஸ்துக்கள் மேற்சொன்ன வண்ணம் அசுத்தப்பட்டுப்போனுல், அதாவது இச்சிற்றுயிர்கள் நிறைந்த பதார்த்தங்களாலோ அவைகள் வளரும் பதார்த்தங்களாலோ மலினப்பட்டுப்போனுல் அவற்றை அவ்வஸ்துவினின்றும் நீக்குவது, அதைச் சுத்திசெய்வதாம்.

இப்படி, சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும், சுத்திசெய்வதற்கும், உள்ள சக்தி, இச்சிற்றுயிர்களைப்பற்றி நமக்குள்ள அறிவைப் பொறுத்தது. அதாவது, இச்சிற்றுயிர்களின் தன்மையும், அவை விர்த்தியாவதற்கு வேண்டிய சௌகரியங்களும், அவை வசிக்கக்கூடிய இடங்களும், பரவும் வழிகளும், அவை மரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றி நமக்கு அறிவு எவ்வளவுக்கெவ்வளவு உண்டாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், அசுத்தத்தை நீக்கவும் நமக்குச் சக்தியுண்டாகும்.

கே. நாராயண ஐயர், M. B. & C. M.

---

ஒரு பெரியர் கூறுகிறர். — "உலகத்தை யீன்ற மாதாவாகிய உமையவள் மலையரசனுகிய ஹிமவானுக்குப் புத்திரியாய் அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பார்வதிதேவி அவதரித்தபிறகு அந்த ஸர்வ சக்திமதியாகிய ஜகன்மாதாவின் விசுரூபதரிசனம் அக்கிராஜனுக் குண்டாயிற்று. அப்பொழுது அவன் அக்கண் கொள்ளாக் காக்ஷியைக்கண்டு தேவியை நோக்கி, "தாயே, வேதத்தில் பலவாறு புகழ்ந்து கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் தரிசனம் அடியேனுக் குண்டாகும்படி அருளாயோ" என்று பிரார்த்திக்க, குழந்தையாய் அவதரித்திருந்த பார்வதிதேவி, "அப்பா ப்ரஹ்மதர்சனம் கிடைக்கவேண்டுமென்ற கோரிக்கை யுனக்கிருந்தால், நீ ஸாதுஸங்கத்திற் பழகவேண்டும். அப்பொழுது தான் உன் கோரிக்கை நிறைவேறும்" என்றாள். ப்ரஹ்மம் இன்னதென்று வாக்கினுல் விளக்கமுடியாது. 'இவ்வுலகத்தில் ப்ரஹ்மம் ஒன்று தவிர மற்றவையெல்லாம் உச்சிஷ்டமே (எச்சிலே)' என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிருர்.

# மனத்திருப்தி

## CONTENTMENT

ஒருவன் தனக்கு இருப்பதுங் கிடைப்பதுங் கொண்டு மனக்களிப்பு அடைவது திருப்தி. அது நாளுக்கு நாள் உள்ளூறி, அறிவும், ஆற்றலும், ஆக்கமும், ஊக்கமும் இனிது ஓங்கி யுயர்ந்து பரந்து விரிந்து, நன்மையைத்தரும் இயல்பினையுடையது. மனத்திற்கும், தேகத்திற்கும் ஆரோக்கியந்தந்து பெரிதும் ஒற்றுமைப் பூத்து, உண்மைபெருகி, என்றும் மாறா நிலையினை அடைவிக்கும் இடையறா அன்பு, அருள், தூய்மை, புகழ், இரக்கம் முதலிய நிலையிற் பொருள்களின் பாகுபாடுகளை யுணர்த்தித் தன்னந்தனியாய்த் தனதியல்பு விளங்கத் தளிர்த்து, அரும்பிப், பூத்துக், காய்த்துப், பழுத்து, வினைவழிப்பலனை அளிக்கவல்ல சிரிய கற்பகத்தருவை யொத்த முழுமுதற் சக்தியின் பருப்பொருள்களை விரித்து அறியும் ஆற்றல் வாய்ந்தது. அளப்பரும் சம்ஸார சலதியைக் கடந்து கரையேறுவதற்கு உரிய அரும்பெருந்தோணி. இராகத்வேஷாதிகளை வேரறக்களைவதற்கு ஆதாரமாகிய கூரிய வாள். மனோவாக்குக் காயங்களினால் உலகத்தவர்க்கு நன்மையைப் புரிந்து புண்யத்தைத் தேடுவதற்கான சீரிய ஸாதனம்.

தயை, சாந்தம், பெருந்தன்மை, பரோபகாரச் சிந்தை முதலிய விலையற்ற சர்வோத்தமமான கல்யாண குணங்கள் வந்து பொருந்துவதற்குரிய பொருப்பு.

அத் திருப்தியே, அறம் வளர்ந்து, பாவந்தேய்ந்து, அறியாமை நீங்கிச், சித்தம் சுத்தியாய், நித்யாநித்யம் என்னும் பகுத்துணர்வு மேம்பட்டு, அநித்யமாகிய இம்மை மறுமை இன்பங்களிலே வெறுப்புற்று, பிறவித்துன்பம் இத்தகையதென உய்த்துணர்ந்து, ஆய்ந்து, நித்யமாகிய முக்திப் பேற்றை அடைவதற்கேற்ற அடிப்படையுமாகும்.

அதனைக் கொண்டார் எப்பொழுதும் இடையறா இன்பத்தை யடைவர். அன்னணம் அறிந்து நிற்பதுவே எடுத்த பிறவிக்கு ஏற்றம். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தத்தம் சக்திகளைத் திரிபின்றி அவ்வழியின் கண்ணேயே நிலைபெற்று நின்று ஆழ்ந்தறிந்து அளவிட்டுப் பார்ப்பதுவே இன்றியமையாக் கடப்பாடாகும்.

நிற்க, அதிருப்திகொண்டார் மனம் ஒருவழிப் படாது, பறவைபோல் அலக்கண் உற்று எக்காலும் எவ்விடத்தும் துன்பத்தையே அடையும். அன்னவர்க்கு மன ஆறுதல் என்பது கனவிலும் எட்டுணையும் உண்டாகாது.

மின்னலைப்போன்று இடைவிட்டு ஒளிர்கின்ற நிலையற்ற வாணாளைப்பெற்ற மாநுடர், தமக்கு எவ்வளவு இருப்பினும், இன்னும் வேண்டும் என்னும் நீள் நினைவு உண்டாகி, 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாக' ஏங்கித் தவித்து அலைந்து நிற்கின்றனர்.

எரியுந் தழற்கு எவ்வள்வு கட்டையை அளிப்பினும் திருப்தியே கிடையாது; பரந்த கடல் தன்னிடம் எவ்வெளவு ஆறுகள் பெருகித் தினைப் பொருள்கள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்துத் திரட்டி யுருட்டிக்கொணர்ந்து கொடுத்துக் கலப்பினும், திருப்திகொள்ளாது, என்னும் விஷயங்களை ப்ரத்யக்ஷமாகக் கண்டுணர்ந்தனர் அறிவுடையார்.

ஆகவே, நெருப்புத் தன்னிடம் விறகு உள்ளவரை எரித்து அவ்விறகு மாண்டவழித் தானும் மாய்வதுபோல, செல்வம் கிடைக்குந்தோறும் மனவமைதி பெறாது இருந்து, அது கழியுங்கால் வாடி வதங்கித், தேகம் இளைத்து, மனமயர்ந்து, பெருமூச்செறிந்து, நாளுக்கு நாள் வலிகுன்றி, முன்னிருந்த ஆற்றலுஞ்சிறுகி அழிவது, என்பது உலக இயற்கை. இக்கருத்தை யடக்கியே நீதிநெறி விளக்கத்தாரும்,

"பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க்கு ஆக்கம் பெரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா"

என்றனர். பேராசையே வடிவமாகக்கொண்ட மீதாசையன்(Midas)கதையைப் படிக்காதவர்கள் மிகவும் சொற்பம். அவனுக்கு உண்ணும் உணவும், பருகும் நீரும் தங்கமாக மாறினவன்றோ? 'நாயுந்தன் நிழலும்' என்ற சிறு கதையும், ப்ரதி தினமும் ஒரு தங்க முட்டை யிட்டுவந்த ஒரு வாத்தை ஒரே சமயத்தில் ஏராளமாய் அடைய விரும்பிக்கொன்ற பேராசைக்காரன் கதையும், **'அதிருப்தி கோண்டார் உள்ளனவற்றையும் இழப்பார்'** என்னும் நீதியை; நமக்குப் புகட்டுகின்றன வல்லவா?

நாம் எப்பொழுதும் நம்மினும் குறைவாக உடையவர்களைப் பார்த்து, முழுமுதற் பொருளினருளால் நமக்குக் கிடைத்து இருப்பது போதுமென்றெண்ணி வாணாளை வீணாளக்காது நற்குண, நற்செய்கை, நற்புகழ் பெறப் பிரயாசைப் படவேண்டுவதே புத்தியுள்ள விற்பன்னர்களின் கொள்கை.

'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா, பெரிதென் றகமகிழ்க"

என்று பிறரும் அறிவுறுத்தி யுள்ளார்.

'பேராசையே பெரிய நஷ்டம்' என்னும் முதுமொழி நம்மை அதிருப்தியாகிய படுகுழியினின்று வெளியேற்றித் திருப்தியென்னும் கரையில் சேர்ப்பிக்கின்றது அல்லவா?

ஒருவன் தனக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் குறைவாகவிருந்து அவைகளை யினி தடையுந் திறமையும் இருக்குங்கால், தமக்கு இருப்பது போதுமென்றெண்ணி யிருப்பது ஆகாது. ஆயின், முயற்சித்துக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைதல் நலம்.

பண்டிதர் S. வேலாயுத முதலியார்.

## V. சூரியனும் பூமியும்—தினகதி

**SUN & EARTH—DIURNAL MOTION**

நாமிதுவரையில் சூரியனைப்பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டோம். நம்மிடமிருந்து சுமார் 9-கோடி மைல் தூரத்தில் அவாந்திரமாக தாங்கலற்று நிற்கும் இப்பெருங்கோளம் நமக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் ஸதா வீசிக்கொண்டே யிருக்கிறது. சூரிய உஷ்ணமில்லாவிட்டால் இவ்வுலகில் ஒரு பிராணியும் ஜீவித்திருக்கமுடியாதென்று முன்னால் சொன்னோம். அதன் ஒளிப் பிரவாகம் நம்மிடம் ஓடிப்பாயாவிட்டால், எல்லாம் ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கும். சூரியவொளி யில்லாவிட்டால், சந்திரகாந்தியும் விளக்குகளும் நமக்கில்லையாவென்று ஆக்ஷேபிக்கலாம். அது முழுப்பிசகு. எப்படி இரவில் விளக்கில்லாவிட்டால் நம் வீட்டறைகளிலுள்ள சாமான்கள் கண்ணுக்குப் புலப்படாவோ, அப்படியே சூரியனென்னும் மகா விளக்கில்லாவிட்டால், சந்திரன், குரு, சுக்கிரன் முதலான கிரகங்கள் நமக்குத் தென்படா. ஏனெனில் அவைகளுக்கு ஸ்வயமாகவே பிரகாசிக்கும் தன்மை கிடையாது. அவைகளின் ஒளி முழுதும் ஸூரியனுடையதே. ஸூரியனிடத்திலிருந்து நாலா பக்கங்களிலும் பாய்ந்தோடும் ஜோதி அக்கிரகங்களின்மேற் பாய்ந்து, பிரதிபலித்து, நம் கண்களில் பிரவேசித்து அவைகளைப் புலப்படுத்துகின்றது. இவ்வுலகிலுள்ள விளக்குகளெல்லாம் தங்கள் வெளிச்சத்தை சூரியனிடத்தினின்றே பெறுகின்றவென்பது நவீன சாஸ்திரங்களில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது, ஆகவே, சூரியனில்லாவிட்டால் நக்ஷத்திரங்களினின்று வரும் சுவல்ப வெளிச்சத்தைத் தவிர நமக்கு வேறொன்றுமிராது.

மேலும், சூரிய வெளிச்சத்தை நாம் தினம் 60 நாழியும் அனுபவிக்கிறதில்லையல்லவா? காலையில் சுமார் 6-மணிக்குக் கிழக்குத்திசையிலுதித்து, வரவர ஆகாசத்தில் மேலேறி, நடுப்பகலில் வான

மத்தியத்தை யடைந்து, அதன்பிறகு கொஞ்சங் கொஞ்சமாக மேற்றிசையில் சாய்ந்து மாலை சுமார் 6-மணிக்கு அஸ்தமாகிறது. அடுத்த நாள் காலையில் 6-மணிசுமாருக்கு மறுபடியும்கீழ்த்திசையில் தோன்றிப் பிரகாசிக்கிறது. இதனுல் நம்மைப் பகலில் 12-மணி நேரம் ஒளியும், இரவில் 12-மணி நேரமிருட்டும் சூழ்ந்துகொண்டு நிற்கிறது. சூரியோதயமாகையில் திடீரென்று வெளிச்சம் தோன்றி நம் கண் திகைக்காதபடி அருணோதய மங்கலொளியும் சூரியாஸ்தமன காலத்தில் திடீரேன்று இருள் மூடிக்கொள்ளாதபடி அஸ்தமனஸமய மங்கலொளியும், நம்மைச் சுற்றி யிருக்கும் வாயுமண்டலத்தின் உதவியாலுண்டாகின்றன.

இதனுல், பூமியில் இரவும் பகலும் 12-மணிக் கொருதரம் மாறிமாறி வந்துகொண்டே யிருக்கின்றன. மேற்கில் அஸ்தமாகிற சூரியன் எப்படி எவ்வழியாகக் கிழக்கில் வந்துதிக்கிறது? இதைத் தெளிவாய் எடுத்துச்சொல்ல வெகு பேருக்குத் தெரியாது. அஸ்தமாகிற சூரியன் அப்படியே நஷ்டமாய்ப் போகிறதென்றும், தினந் தினம் ஒரு புது ஸூரியன் தோன்றுகிறதென்றும் ஆதிகாலத்தில், சிலர் நம்பியிருந்தார்கள். இவ்வளவு பிர்மாண்டமான சூரியனைத் தினம் தினம் புதிதாகச் சிருஷ்டிக்க வேண்டியிருந்தால் அதற்கு எவ்வளவுசாமான்கள்வேண்டியிருக்கும்! அப்படித் தினமொரு சூரியனை இழப்பதானுண்டாகும் நஷ்டமெவ்வளவு! இது வாஸ்தவமான ஸ்திதியாகத்தோன்றவில்லை. மற்றும்சிலர்சூரியன் சிறகுகளுள்ள குதிரைகள் பூட்டிய ரதத்திலேறி, ஆகாயமார்க்கமாய்ப் பறந்து சென்று அஸ்தமானதும், வடக்கு திக்கிலிருக்கும் மகாமேரு வென்னும் ஒரு பெருமலையின் உத்திர பாரிசமாகத் திரும்பிச்சென்று மறுபடி கிழக்கிலுதிப்பதாக எண்ணியிருந்தார்கள். ஆதிகால ஐரோப்பியர், வல்கன் (Vulcan) என்னும் ஒரு பெருந் தேவதை அஸ்தமிக்கும் சூரியன் சமுத்திரத்தில் வீழ்ந்தணைந்து போகாமல் தாங்கித் தன் பெருந்தோணியில் ஏற்றிக்கொண்டு வடக்கு சமுத்திரத்தின் வழியாகக் கீழ் சமுத்திரத்தை யடைந்து மறுபடியு முதயமாகும்படி செய்வதாக நம்பியிருந்தார்கள். நாகரீகத்திலும் சாஸ்திர ஞானத்திலும் விருத்தியடைந்திருக்கிற நாம் இவ்வித அபிப்பிராயங்கள் சரியல்லவென்று தெரிந்துகொண்டிருக்கிறோம்.

படகுகளிலும் பெருங் கப்பல்களிலுமேறி மேற்றிசை அல்லது கீழ்த்திசையை நோக்கித் தீர்க்க யாத்திரை செய்திருக்கிற மானுமிகள் சூரியன் நமக்குத் தோன்றுகிற பிரகாரம் சாயங்காலத்தில் மேற்கு சமுத்திரத்தை யடைவதாகக் கண்டதேயில்லை. மேலும், போகபோகப் பூமி தட்டையாயிராமல், பெரும் பந்தின் தலத்தைப் போல வளைந்திருப்பதாகவும், ஒரே திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தால் முதலில் கிளம்பின ஸ்தானத்திற்கே திரும்பிவந்துவிடலாமென்றும், அநுபவசித்தமாகத் தெரிகிறது. இதனுல் பூமி தட்டையானதல்ல, பந்துபோல உருண்டையானதென்று ஊகிக்கலாம்.

வடக்கு சமுத்திரப் பக்கமாக யாத்திரை செய்திருக்கிற பிரயாணிகள் மேற்சொன்னபடி வல்கனை (Vulcan) யாவது அவன் படகில் ஏறிச் செல்லும் சூரியனையாவது கண்டதேயில்லை. ஆகையால், சூரியன் இப்பூகோளத்தை 24-மணி நேரத்திற் கொருதரம் சுற்றிவந்து, ஒவ்வொரு தேசத்திற்கும் முறையே இரவையும் பகலையும் அளித்து வருகிறதென்று நமக்குத் தெளிவாகிறது.

நமக்கும் சூரியனுக்கும் சுமார் 9-கோடி மைல் தூரமென்று சொன்னேமல்லவா? பூமத்தியமாகச் சூரியன் சுற்றிவரும்பக்ஷத்தில், பிரதிதினமும் சுமார் 28-கோடி மைல் தூரமுள்ள ஓர் மகா யாத்திரை 24-மணி நேரத்தில் செய்து முடிக்க வேண்டி யிருக்கிறது. ஒரு சிறு சுண்டெலி போன்ற பூமியை நடுவிலிட்டு, அதற்காக ஒரு

மத்தகஜத்துக்குச் சமமான சூரியன் ஓய்வொழிவில்லாமல் ஒரு மணிக்கு 1-1/16-கோடி




மைல்வீதம் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறதென்றால், இது நம்பக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை.

ஆனால் கொஞ்சம் யோஜித்துப் பார்த்தால் இவ்வளவு அசாத்தியமாகத் தோன்றும் விஷயத்தை வெகு சுலபமாக விளக்க ஒரு உபாயம் தோன்றும். சூரியன் 24-மணிக் கொருதரம் 18-கோடி மைல் குறுக்களவுள்ள வட்டமார்க்கமாயோடுவதை விட, இச்சிறு பூமி 24-மணிக் கொருமுறை தன்னைத்தானே சுற்றுவதாக விருந்தால், முன் சொல்லிய தோற்றமெல்லாம் எளிதில் உடனே தெளிவாகும். இதற்கு ஒரு சிறு திருஷ்டாந்தம்.



இப்படத்தில் காட்டியபடி A-என்னும் உருண்டையைப் பூமியாகவும் B-என்னும் விளக்கைச் சூரியனாகவும் பாவித்துக்கொள்ளுங்கள். B-விளக்கு A-உருண்டையைச்சுற்றி, போவதால் A-யின் தலத்தில் உண்டாகும் ஒளி, இருள் வித்தியாஸங்கள் எவ்விதமாக ஏற்படுகின்றனவோ, அதே மாறுதல்கள், A, B, இரண்டையும் ஸ்தானத்தை விட்டுக்கிளப்பாமல், A-யை மாத்திரம் இருந்த இடத்திலேயே சுற்றித்திருப்புவதால் உண்டாகின்றன. இதனால் சூரியனை நம்பமுடியாத வேகத்தோடு ஒரு மகா பிரயாணம் ஓய்வொழிவில்லாமல் செய்விப்பதைவிட, இச்சிறு பூமி தன்னைத்தானே சுற்றுவதாக நினைத்துக் கொள்ளுதல் எளிது. வாஸ்தவமுமிதுதான்.

இம்மாதிரியாகப் பூமி நம்மையும், நம்மைச் சுற்றியுள்ள அநந்தகோடி வஸ்துக்களையும் தாங்கிக்கொண்டு சுழன்றுகொண்டிருப்பதற்கு பலவிதமானப் பிரமாணங்களுண்டு. அவைகளைப்பற்றிப் பின்னால் விஸ்தாரமாக விசாரிப்போம். ஆதிகால சூர்யக் கிரந்தங்களில்கூட நம்முன்னோர்கள் இப்பூமியை ஒரு பலாக்காயாகவும், அதன்மேலுள்ள சராசரவஸ்துக்களை அப்பலாக்காயின்மேலுள்ள முட்களாகவும் வர்ணித்திருக்கிறார்கள். இவ்விதமாகப்பூமி நம்மைச் சுமந்துகொஞ்சங்கூட அசங்காமல் சுழன்றுகொண்டிருப்பது வெகு ஆச்சரியமான விஷயமல்லவா? காற்றாட்டமில்லாமல் நிச்சலமாயிருக்கும் தருணத்தில் ஒரு படகிலுட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு அலைகூட அசங்காத ஓர் குளம் அல்லது ஏரியில் மிதந்து சென்றால், அப்படகு கொஞ்சங்கூட ஆடிச்சலிக்காமலிருப்பதால் நாம் நகர்வதாகக் கூட உணர்கிறதில்லை. வாஸ்தவத்தில் நகர்கிறோமோ அல்லவோவென்று கண்களைத்திறந்துசுற்றியுள்ளமாஞ்செடி முதலியவைகளைப் பார்த்துத்தான் அறியவேண்டும். அதுபோலவே இப்பூமியாகிற படகு ஆகாய ஏரியில் சலனமற்று நம்மைத் தாங்கிச் சுற்றுவதால் அதன்சுழல் கதியைநாம்உணரக்கூடவில்லை. ஆனால் சுற்றியிருக்கும் சூரியன், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப் பார்த்து நம்முடைய கதியை நாம் அநுமானிக்கவேண்டியிருக்கிறது. இந்நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் சமார் 24-மணிக்கொருதரம் முன்னிருந்த ஸ்தானத்திற்கே திரும்பி வருவதாகத் தோன்றுவதால், இப்பூகோளம் 24-மணிக்கொருதடவை தன்னைத்தானே சுற்றிச் சுழல்வதாக ஊகிக்கலாம்.

S. பாலகிருஷ்ணய்யர், பி. ஏ., எல். டி.

# சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

## XXIII உஷ்ணம்: பரவும் விதம்—ஸ்வரூபம்

### HEAT: ITS TRANSMISSION AND NATURE

II உடன்சென்று பரவல்.—இந்தமாதிரியாகத்தான் உஷ்ணம் த்ரவபதார்த்தங்களுள்ளும் வாயு பதார்த்தங்களுள்ளும் பாவுவது. இங்கு உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதே இல்லை. பதார்த்தங்கள் அணுக்களை உஷ்ணம்பற்றி அதனுடன் பதார்த்தங்களின் உட்பாகத்தில் மேலே கிளம்பி முழுவதும் ஓடிச்சென்று பரவுகிறது. பின்னர் உஷ்ணம் இழந்த அணுக்கள் விசிஷ்ட கன அளவில் அதிகப்பட கீழே மூழ்கிமறுபடி உஷ்ண உத்பத்திஸ்தானத்தின் அருகாமையில்மறுபடி உஷ்ணமாகி முன்போல மேலேகிளம்பி மறுபடி உஷ்ணத்தைப் பாவச்செய்து வஸ்துவின் உஷ்ண நிலையை அதிகப்படுத்தும். இம்மாதிரி த்ரவம் கொதிக்கும் வரையில் உஷ்ணம் உடன்சென்று பரவும். இம்மாதிரி உஷ்ணம் ஓடிப் பரவக்காரணமாகவிருக்கும் உஷ்ண ப்ரவாஹத்திற்கு உடன்செல்லும் தாரை என்று பெயர். இந்தத் தாரை சுடவைக்கப்படும் த்ரவவாயு பதார்த்தங்களில் இரண்டுவிதமாகக் காணப்படும்.

(1) உஷ்ணமான மத்யதாரை. உஷ்ண உத்பத்தியிலிருந்து நடுவில் நேரே மேல்நோக்கிப் போவது.

(2) உஷ்ணம் குறைந்த பக்கதாரைகள். மேலே இருந்து பக்கங்களின் வழியாக உஷ்ண உத்பத்தியை நோக்கிப் பாய்வன.

ஆதலால் த்ரவங்களையும் வாயுக்களையும் அடியிலிருந்துதான் சுடவைக்கவேண்டும். குளிர வைக்க வேண்டுமானால் மேலே இருந்துதான் குளிரவைக்க வேண்டும். இவ்வாறு செய்யுங்கால் உடன்செல்லும் தாரைகள் மாறிக் காணப்படும். முதலாவது குளிரான மத்தியதாரை குளிர் உத்பத்தியிலிருந்து நேரே கீழே போகும், உஷ்ணமான பக்கதாரைகள் இரண்டாவதானவை. இவை பக்கங்கள் வழியாகக் கீழே இருந்து குளிர் உத்பத்தியை நோக்கிச்செல்வன.

முற்கூறிய தாரைகளால் தண்ணீர் ஸாதாரணமாகக் காய்ச்சப்படுங்கால் சூடாகின்றது என்பதைச் சோதனை மூலமாகக் காட்டுவோம். ஒரு பெரிய குவளை பாத்திரத்தை எடுத்து அதனுள் தண்ணீரைவிட்டு ஒரு சிறு முக்காலியின்மேல் வைப்போம். பின்பு தண்ணீருள் கண்ணாடிக்குழாய் மூலமாகத் தண்ணீரை வர்ணப்படுத்தும்வஸ்துத்துண்டுகளை ஸாவதானமாக அடிவரையில் போகும்படிபோடுவோம். மெதுவாகத் தண்ணீரைக்கலக்காது கண்ணாடிக்குழாயை வெளியிலெடுத்துவிட்டுத் தண்ணீரைச்சாராயவிளக்கால் சுடவைப்போம். கொஞ்சநாழிகைக்கெல்லாம் வர்ணம் புகைபோல அடியிலிருந்து நேரேகிளம்பி மேல்மட்டம் வந்ததும் நான்கு புறங்களிலும் பரவி பக்கங்கள் வழியாக மழை மேகம் கவிந்து கொண்டிறங்குவதுபோல அடிபாகத்தை நோக்கி இறங்கிவரும். உற்றுநோக்கினால் இரண்டு விததாரையும் போவதைக்காணலாம். கொஞ்சநாழிகைக்கு எல்லாம் தண்ணீர்முழுவதும் வர்ணமாகிவிடும். இதனால் தண்ணீரின் அடிப்பாகம் உஷ்ணப்பட அது விசிஷ்டகன அளவில் குறைந்து மேல்நோக்கி கிளம்புகிறதென்றும் அது விட்டவிடத்தை நிறைக்க பக்கங்களிலிருக்கும் குளிர்ந்த தண்ணீர் ஓடிவர அதுவும் சூடாகி மேல் கிளம்புகிறதென்றும், இம்மாதிரி ஓயாது அடியிலிருந்து மேல்நோக்கிய மத்திய உஷ்ணதாரை ஏற்பட அது மேல்போய் உஷ்ணத்தைப் பரப்பிக் குளிர்ந்திருக்கும் முன்பாகத்தைப் பக்கங்களில் தள்ளி பக்க தாரையோடு சேர்ந்து அடியில் வந்து அதிக உஷ்ணம்



பாதிக்கச் செய்து இம்மாதிரி தண்ணீரின் உஷ்ண நிலையை ஏற்றுகிறதென்றும் தெரியவருகிறது. இம்

மாதிரியே வாயுவிலும் ஏற்படக் காற்று உண்டாகிற தென்று காற்று என்னும் வ்யாஸத்தில் (தொகுதி 2. பக்கம் 220) புகைப்போக்கி சோதனையில் எடுத்து விஸ்தரித்திருக்கிறோம். குளிரால் ஏற்படும் உஷ்ணம் செல்லும் தாரைகளை எளிதில் காட்டிவிடலாம். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து அதில் ஒரு சிறு பனிக்கட்டியை மிதக்கவிடுவோம். ஊதா வர்ண எழுதுகோலைப்பனிக்கட்டி அடியில் தண்ணீரில் தோய்ப்போம். அதன் வர்ணம் உடனே கீழ்நோக்கி இறங்கிப் பரவும்.

இம்மாதிரி த்ரவங்களில் உஷ்ணம் உடன்சென்று பரவுங்கால் அவைகளைத் தாங்கி நிற்கும் பாத்திரங்களில் உஷ்ணம் உரைக்காது. இதை நன்முக விளக்கிக்காட்டக் காகிதத்தால் ஒரு தொன்னை தைத்து அதில் நிறையத் தண்ணீரைவிட்டு அதை ஒரு ஆதாரத்தில் தொங்கவிடுவோம். அதை அடியிலிருந்து சுடவைப்போம். உள்ளே இருக்கும் தண்ணீர் கொதிக்குங்காலத்து காகிதம் எரியாது. உஷ்ணம் காகிதத்தின் வழியாக உள்ளிருக்குந் தண்ணீருள் சென்று பரவுவதால் காகிதத்தில் தாக்குவதில்லை. ஈயச்சொம்பு பாத்ரங்களை அடுப்பில் வைக்குங்கால் உள்ளே தண்ணீர் விட்டு வைப்பது இந்தக் காரணம்பற்றித்தான். இப்படிச் செய்யாவிடில் ஈயம் உருகிவிடும்.

த்ரவங்களிலும் வாயுக்களிலும் உஷ்ணம் உடன்சென்று பாவி அவைகளை உஷ்ணநிலையில் ஏற்றுகிறது என்ற விஷயத்தால் நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம்.

(1) எப்பொழுதும் குளிர்ந்த ஜலத்தில் வெந்நீரை விடலாகாது. அப்படிச் செய்தால் அவைகள் சீக்கிரம் கலந்து ஒரே உஷ்ண நிலையை அடையா. ஆதலால் எப்பொழுதும் வெந்நீரை முதலில் விட்டு மேல் குளிர்ந்த ஜலத்தை விட்டுக்கலக்க முயலவேண்டும்.

(2) ஸமுத்திரத்தில் த்ருவஸ்தானத்தை நோக்கி நிரக்ஷரேகையிலிருந்து மேலாக உஷ்ணநீர் ஓடுவதும் அங்கிருந்து கீழாகக் குளிர்ந்த ஜலம் வருவதும், இதனால்தான். நிரக்ஷரேகையில் உஷ்ண அதிகத்தால் நீராவி வெளியே போவதால் நீர் மட்டம் குறையவும், உஷ்ணமாகவும் ஆகிறது. த்ருவஸ்தானத்திலோ பனிக்கட்டிமுதலியவைகளால்குளிர்ந்தஜலம் உள்ளே தள்ளப்பட்டு அது நிரக்ஷரேகையைநோக்கிவர அங்குஉஷ்ணமாக மேல் இருக்கும் நீர் மெதுவாக த்ருவஸ்தானம் நோக்கிப்போகும். இம்மாதிரியுள்ள நீரோட்டம் காற்றினங்களாலும், நிலத்தின் உருவத்தாலும் மாற்றப்பட்டு அநேகவித ஸமுத்ர நீரோட்டங்களாக மாறுகின்றது. இதை நன்கு விளக்கிக்காட்ட ஒரு சோதனையைச் செய்துகாட்டுவது உண்டு. ஒரு பெரிய கண்ணாடிப் பாத்திரத்தை எடுத்து அது நிறையத் தண்ணீர் விட்டு குறுக்கே ஒரு ஓரமாக ஒரு இரும்புக் கம்பியைத் தாங்கி நிற்கும்படி வைத்து அதில் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும்படி ஒரு பனிக்கட்டியைக் கட்டுவோம். எதிரே ஒரு செப்புக்கம்பியை ஓரத்தில் தாங்கி ஒரு நுனி ஜலத்துள் மூழ்கியும் மறு நுனி வெளியில் நீட்டிக்கொண்டும் இருக்கும்படி வைத்து வெளிநுனியைச் சாராயவிளக்கால் சுடவைப்போம்: நன்முகச் சூடேறியதும் பனிக்கட்டியருகாமையில் வர்ணஜலத்தைக் கொஞ்சநாழிகை விடுவோம். அந்த வர்ணம் பனிக்கட்டியிலிருந்து கீழே இறங்கி செப்புக்கம்பி அடிவரையில் போய் மேலே கிளம்பி அதன் அருகேசென்று மேல் மட்டம் வழியாகவே பனிக்கட்டியை நோக்கி வந்து மறுபடியும் முன்போன வழியே சுற்றிக்கொண்டு போகும். இதில் பனிக்கட்டி பூமியின் வடக்குத் துருவத்தையும், காய்ந்த செப்புக்கம்பி நிரக்ஷ பாகத்தையும் தண்ணீர் ஸமுத்ரத்தையும் குறிக்கிறது.

(3) காற்றுப் போக்கிகள் வைக்கும் மார்க்கமும் இதனால் தான். ஸாதாரண வீடுகளில் படுக்கும் அறைகளிலாகட்டும் அல்லது அநேகர் கூடும் உபந்யாஸ சாலைகளிலாகட்டும் காற்றுப்போவதற்கும் எதிர் எதிராக வாயிலையும் சன்னலையும் ஏற்படுத்தி மேல்பாகத்தில் சிறு பலகணிகளும் விடுவதுண்டு. உள்ளே இருப்பவர்கள் மூச்சுக் காற்முகிய உஷ்ணவாயு மேலே கிளம்ப அதுமேலே இருக்கும் பலகணிகள் வழியாக வெளியே போகும். அப்பொழுது குளிர்ந்த சுத்தமான காற்று அடியிலுள்ள ஜன்னல்கள்வாயில்கள் வழியாக உள்ளே புகும்.

(4) காற்றுகளும் காற்றினங்களும் இந்த மாதிரி உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதால்தான் உண்டாவது. இதைக் காற்றும் காற்றினங்களும், என்ற வ்யாஸத்தில் விவரித்தாய் விட்டது. (தொகுதி. 2—பக்கம் 250.)

III. நேரடிப் பரவல்.—முற்கூறிய இரண்டு வழிகளிலும் உஷ்ணம் ஒரு வஸ்துவைப் பற்றியே

பரவுகிறது. இந்த வழியில் உஷ்ண உத்பத்தியிலிருந்து உஷ்ணம் நேர்கோட்டின் வழியாக எல்லாப் பக்கங்களிலும் பரவுவது. இதற்கு ஒருவித வஸ்து ஆதாரமும் வேண்டாம். ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் வருவது இம்மாதிரிதான். மூன்று விதமாக உஷ்ணம் பரவுவதை நன்கு விளக்க ஒரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். ஒரு அடுப்பின்மேல் பித்தளைபாத்திரத்தில் தண்ணீரை வைத்து அருகாமையில் நாம்உட்கார்ந்து பார்த்துவருவோம். தண்ணீர்சூடாவது உஷ்ணம் உடன்சென்று பரவுவதால். பித்தளைப் பாத்திரத்தில் சூடேறுவது உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதால். நமது முகம் தேஹம் இவைகளில் உஷ்ணம் தாக்குவது உஷ்ணம் நெருப்பிலிருந்து எல்லாப் பக்கத்திலும் நேரிடப்பரவுவதால். ஆகவே ஒரு வஸ்துவிலிருந்து எப்பொழுதும் உஷ்ணம் சுற்றும் முற்றும் நேரி-



டப் பரவிக்கொண்டே இருக்கும். சூடான பதார்த்தங்கள் ஆறுவது இதனால்தான். ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் வாங்கும் நிலம் அதை மறுபடி ஸூர்யவெப்பம் குறையக்குறைய வெளியே நேரிடப் பரவவிடுகின்றது. தண்ணீர் இவ்வளவு சீக்கிரம் வெளிவிடாது. சீக்கிரமாக உஷ்ணத்தை வாங்கும் தன்மையை உடைய வஸ்துக்கள் சீக்கிரமாக அதை நேரிடப்பரவவிடும்; மெதுவாக வாங்கும் திறனுடையவை மெதுவாக அதை நேரிடப்பரவவிடும். காலை 8-மணிமுதல் நடுப்பகல் 2-மணிவரையில் நிலம் உஷ்ணமாயும், தண்ணீர் குளிர்ச்சியாயும் இருக்கும். நிலம் உஷ்ணத்தை சீக்கிரம் வாங்கும்திறனுடையதாதலாலும் தண்ணீர் சீக்கிரம் வாங்கும் சக்தியற்றதாகவிருத்தலாலும்முன்னது அதிக உஷ்ணம்போலவும், தண்ணீர் குளிர்ச்சிபோலவுங் காணப்படும். மாலைநேரத்தில் குளக்கரை குளிர்ச்சியாகவும் குளத்துநீர் உஷ்ணமாகவும் காணப்படும். மாலைக்குள் சீக்கிரம் உஷ்ணம்வாங்கிய நிலம் தன் உஷ்ணத்தை இழந்துவிட, மெதுவாக உஷ்ணம் வாங்கிய தண்ணீர் அவ்வாறு செய்யமுடியாது உஷ்ணத்துடனிருக்கிறது. இதனால்தான் முற்கூறியபடி மாலையில் காணப்படுகிறது. பொதுவாகக் கரிய வஸ்துக்கள் உஷ்ணத்தைச் சீக்ரம் வாங்கி சீக்ரம் வெளிவிடும் சக்தி உடையவை, வெண்மையான வஸ்துக்கள் சீக்ரம் உஷ்ணம் ஏற்கும் திறனுடையவை யல்ல.

**உஷ்ணத்தின் ஸ்வரூபம்.**—இதுகாறும் எடுத்துவிஸ்தரிக்கப்பட்ட உஷ்ணத்தின் ஸ்வரூபம் என்ன என்ற சங்கை பிறக்கும். உஷ்ணமும் சப்தத்தைப்போல வஸ்து அணுக்களின் ஸூக்ஷ்ம நடுக்கம். ஆனால் சப்திக்கும் வஸ்துவைவிட உஷ்ணமுடைய வஸ்து வேகமாக நடுங்கும். ஆகவே உஷ்ணமும் ஒருவித சக்தி. இது புகை வண்டியில் அசைவாக மாற்றமுடிவதாலும், இதன் காரியங்கள், இனம் மாற்றம், பெரிதாக்கல் முதலிய ஆதலாலும் இது காரியம் செய்யும் திறனுடைய ஒரு சக்தி என்பது பொருந்தும். ஒரு வஸ்துவைச் சுடவைத்தால் உஷ்ணநிலை ஏற ஏற அதன் அணு நடுக்க வேகம் ஏறுகிறது. வஸ்து எளிதில் உருகாத இரும்பு முதலியவையாக இருப்பின் வெகு நாழிகையானதும் நடுக்க அதிகத்தால் சிவப்பு ஒளிவருகிறது. இந்த ஸமயத்தில் அது பழுக்கக் காய்ந்தது என்பார்கள். மேலும் சுடவைத்தால் இருட்டறையில் அது வெள்ளை ஒளி கொஞ்சம் விடும். ஸூர்ய வெளிச்சத்தில் அது வெளுப்பாகக் காணப்படும். இதை இப்பொழுது வெளுக்கக் காய்ந்தது என்றே கூறவேண்டும். ஆகவே நடுக்க அதிகத்தால் உஷ்ணம் ஒளியாக மாறும். இந்த ஒளியின்விஷயத்தைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

அ. ஸி. கஸ்தூரிரங்கய்யர், பி. ஏ., எல். டி.

# ஷேக்ஸ்பியர்

பிறப்பு, வளர்ப்பு, கவிமாண்பு

**(SHAKESPEARE (A LIFE-SKETCH.)**

(378-ம் பக்கத்தொடர்ச்சி.)

**எ**ன்றாலும் ஷேக்ஸ்பியர் செடி மரம் கொடி முதலியவற்றைப் பார்த்து அவைகளின் இயற்கையைப் பற்றி புத்தகமெழுத எண்ணவில்லை. கூடியவரை குறிப்பாகப் பார்த்து, தன்கவியுள்ளலங்காரமாக எங்கெங்கமைத்தல் கூடுமோ அவ்விதமா யன்றி மற்று வெகுவாய் இவைகளைக் கற்கவில்லை.

லாட்டினில் ஆவிட், ஹாரஸ், ஜூவெனல், சிசரோ, செனீகா, பிளௌடஸ் முதலியவர்கள் எழுதிய புத்தகங்களை, பள்ளிக்கூடத்திற் கற்கும்பொழுதிருந்த அறிவை விர்த்திபண்ணி எளிதில் தெரிந்து கொள்ளுந் தேர்ச்சியடைந்தார். என்றாலும் ஆவிட் தவிர மற்றவர்க ளெழுதியவற்றைப் பிரயோகிக்குங் காலத்து ஆங்கிலேய மொழிபெயர்ப்பையே பிரயோகித்தார்.

தர்க்கம் முதலியவற்றை லாட்டினில் படித்தது தன் நாடகங்களில் அவைகளைக் கேலிபண்ணவே அதிகமாகத் தனது வேடிக்கை நாடகங்களி லுபயோகித்தார். இதே சமயத்திலாவது, அல்லது பின்னால் தனது நண்பர்கள் பேசுவது முதலியவற்றிலாவது, தான் படிக்கக்கூடியவற்றில் படித்தாவது, தந்தேசத்துச் சரிதத்தைத் தெரிந்துகொண்டார்.

லண்டன் நகருக்கு வந்தபிறகு, அவ்விடத்தில் நடக்கும் விஷயங்களை வெகு குறிப்பாகப் பார்த்தாரென்று தெரியவருகிறது. ஹென்றி நாலாவதவர் என்னு நாடகத்தில் பால்ஸ்டாவ் என்பவன் தன் கூட்டாளிகளைக் கொண்டு திருடின விஷயம் அந்தக் காலத்தில் வெகு ஸாதாரணமாய் நடந்து வந்தது என்று ஹாரிசன் என்பவர் ஹாலின்ஷேட் எழுதிய வருஷக்குறிப்புக்குச் சேர்த்தெழுதியவற்றில் சொல்லி யிருக்கிறார். இது விஷயமும், அக்காலத்தில் ஏமாந்தவர்களைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகும் சூட்சவழி என்று கிரீன் எழுதிய புத்தகத்திலுள்ள விஷயமும் ஷேக்ஸ்பியர் வெகு விஸ்தாரமாக வெடுத்துக் கையாண்டிருப்பதால் இவற்றை யெல்லாமவர் குறிப்பாகப் பார்த்திருத்தல் வேண்டும்

இதே சமயத்தில் ஸௌதாம்டன் பிரபுவினுடைய பழக்கத்தினாலும், எலிசபெத் மகாராணிக்கு முன் ஆட்டம் ஆடுவதாலும், அரசரது நடவடிக்கைகளை, மற்றவர்கள் நடவடிக்கைகளைக் கற்றுக்கொண்ட நுண்மையோடு, அறிந்துகொண்டார். இவர் நாடகங்களில் எலிசபெத் மகாராணியைப் பற்றியும், அவளுக்குப்பின் பட்டத்திற்கு வந்த ஜேம்ஸ் என்னு அரசனையும் வெகு வாய்ப் புகழ்ந்து அவர்கள் தாங்கள் எதில் சிறந்தவர்களென்று நினைத்தார்களோ, அவ்விஷயத்தையே மிகுதியும் பாராட்டிப் பல நாடகங்களில் புகழ்ந்து பேசியிருக்கிறார். இவையும், இனி, உயர் குலத்திற் பிறந்தவர்க்குமட்டுந்தோன்றும் பெருந்தன்மையான வார்த்தையும்பெருந்தன்மையான நடத்தையும் வெகு நுக்கமாய் தெரிந்து, அன்பின் முயற்சி வீண்பட்டது என்னு நாடகத்தில், மாக்காபியஸ் முதலிய சாதாரண மனிதரைப்பற்றி இரக்கங்கொள்வதாக இராஜகுமாரத்தியையும், பன்னிரண்டாவதிரவு என்னு நாடகத்தில், ஸர் டாபி பெல்ச் என்னுங் குடிகார பந்துவைக் காப்பாற்றி, மல்வோலியா என்பவன் கஷ்டப்படுங்கால் அவன் கஷ்டத்தைத் தீர்த்துவிட்டு,பின் தன் விஷயம் பார்ப்பதாக ஒலீவியா என்பவளையும் நடிப்பித்துக் காண்பித்திருப்பது — இவ்வித அறிவின் அத்தாட்சிகளிரண்டாகும்.

ஷேக்ஸ்பியர், பிரயாணஞ் செய்தது எவ்வளவு இருக்கலாமென்று முன்னேயே குறிப்பிட்டிருக்கிறோம். அவ்விஷயத்தின் முடிவாக அவர், ஊர்வழி போனவர்கள் சொன்னதைக் கேட்டதன்றி, தானே யதிகமாய்ப்,பிரயாணம் பண்ணினதாகத் தெரியவில்லை. தனது கடைசி நாடகங்களில் கிராம வழக்கங்களையும் கிராமதோற்றங்களையு மதிகமாகக் குறிப்பிடுவது அவர் ஸ்ட்ராட்போர்டில் வீடுவாங்கிவருஷமொருமுறைவந்து போவதினாலிருக்கலாமென்று சொல்லலாம். இது பற்றியே போர்களும், அரசாங்க மாட்சிமையையும், மனிதர்க்குண்டான துன்பமும், விசாரமும், இடையூறும் எல்லா முரைத்தவர், பர்டிடாவினது தோட்டத்தையும்,ஆடுகளுக்கு மயிர் கத்திரிக்குங்காலத்தையொட்டிய வேடிக்கைகளையும் நமக்குச் சொல்லுகிறார். இந்நாடகங்களில் மேலும், அன்பும், அழகும்வாய்ந்த பெண்மணி ஒருவள், தன் தகப்பனால் பிரியமாக வளர்க்கப்பட்டு அல்லது, வெகுகாலம் பிரிந்து பின் தன் தகப்பனைக் கண்டுபிடிப்பதாயும்,மிகுதியும் அன்பினோடு, அதிக விமர்சையாகக் காட்டியிருக்கிறார். இதை அனேகர் தன்மகள் ஜூடித் என்பவள் மேலுள்ள பிரியத்தை யிவ்வாறு காட்டியிருக்கலாமென்பதுண்டு. ஷேக்ஸ்பியர் ஜூடித் அன்றி மற்றப்பெண்களைப் பார்த்திருப்பதுண்மையே. என்றாலும் 'பெற்ற மனம் பித்து' என்பதுபோல் ஷேக்ஸ்பியருங்கூட இம்மனித

இயற்கையுடையராய் மற்றவரிலுந் தன் மகளையே யதிகமாய்ப் பார்த்து அவள் நடவடிக்கை முதலியனவற்றை இங்ஙனஞ் சேர்த்திருத்தல் கூடும் என்று எண்ண இடமுண்டு.

இவ்வாறு நாமிவர் என்னென்ன பார்த்து எவ்விதமாய் யோசித்திருக்கலாமென்று எண்ணுகிறபோது, சிலர் இதுபோன்ற அனுபவங்களே அதிகம் ஷேக்ஸ்பியரது அறிவின் மாண்மை இவற்றால் சிறிது பட்டது என்றெண்ணுவது அறியாமை. கடலின் தண்ணீரில்பட்டு மின்னுகிற நிலாவும், மரக்கிளைகளிடையே பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களும், புதரில் மின்னு மின்மினி பூச்சிகளும் ஆறுகளும் அருவிகளும், பள்ளத்தாக்கிலுள்ள புல்லும் புஷ்பங்களும், பறக்கின்ற பாடுகின்ற பக்ஷிகளும், மனித இயற்கையும், தேச தோற்றங்களு மெல்லோருக்குக் கிட்டுவனவே. ஆனால் அவற்றின் உட்பொருளின் மெய்ப்பொருளை யுணர்ந்து, அவற்றின் அழகும், அருமை யமைப்புந் தெரிந்து கண்டதோர் காக்ஷியினையும், பட்டதோர் மனவெழுச்சி, மனக்கவலை, அன்பு, முதலியனவற்றை மற்றையோர்க்கு மவ்வணமே படும்படி ஒரு புதிய அறிவினை உண்டாக்குந் திறமுடையவரே கவியாவர். அத்தகைய கவிக்கு இவ்வளவு அனுபவ ஆட்சிமை யிருத்தல் தகுதியு முதவியாயினும் அவரறிவே சிறந்ததென்று தெற்றெனத் தெரிவதோர் விஷயமாகும்.

இனி இவர் கற்ற புஸ்தகங்கள் எவ்விதமா யிவர் அனுபவ சக்தியை ஆதிகரித்தன வென்று பார்க்க வேண்டும். இவர் புத்தகங்களை இருவிதமாக வுபயோகித்தார். முதலாவது அவைகளிலுள்ள கதைகளையெடுத்து வேண்டாதவற்றை நீக்கி, வேண்டுவனவற்றைச் சேர்த்து மற்று முள்ளவைகளைச் சீர்திருத்தி, ஆரம்பத்தினின்று வெகுவாய் மாறுபடுத்திச், சிறந்த அழகையு முண்மையும் வாய்ந்திருக்குமாறு செய்வித்தார். மற்றுமவற்றினின்றுதான் எழுதவேண்டிய விதமுங்கற்றுக்கொண்டார். வெகுகவலையாய், மெள்ள, வார்த்தை வார்த்தையாய்ப், படிப்பவர்களைப்பற்றி யிழிவாகவே பேசுகிறார். தன்னுடைய வழி, ஒரு புஸ்தகத்தைச் சுறுசுறுப்பாய், வெகு சீக்கிரத்தில் படித்து அதில் வெகு முக்யமானவற்றை க்ரகித்துக்கொண்டு, மேன்மேலும் வேறு புஸ்தகங்களைப் படிக்க வாரம்பிப்பதேயாம். இவர் படித்த புஸ்தகங்களைப்பற்றி அதிகமான முயற்சியோடு அனேகர் எழுதியிருக்கிறார்கள். என்றாலுமவை யிங்கே யெடுத்துரைப்பதிற் பயனில்லை. மார்லோ, லில்லி, விட்னி முதலியவர்கள் எழுதியவற்றையும் பார்த்திருந்ததாகத் தெரியவரும். நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியது இவை எவற்றினின்று தனது கதைகளை யெடுத்தாரென்பதே. இது விஷயம் நாடகங்களைத் தனித்தனியே பார்க்குமிடத்து விஸ்தாரமாய்ப் பார்ப்போம். ஹாலின்ஷெட், லின்டியோ முதலியவர்களது புஸ்தகங்களையும், நார்த் என்பவர் மொழிபெயர்த்த புளுட்டார்க்கினுடைய சரிதங்களையும் அதிகமாக வுபயோகித்தார். மான்டெயின் எழுதிய வ்யாசங்களையும் பலவிடங்களிற் கையாண்டிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம். இதுபோக அக்காலத்தில் வெளிப்பட்ட சிறுபாட்டு, துண்டு காகித முதல் ஒரு பார்வை பார்த்திருக்கக்கூடும். ஏனென்றால் நாடகவாயிலான் மனிதரை ஸந்தோஷிக்க முயலுபவர், அன்றன்றைய விஷயங்களைக் கூடச்சேர்த்து ப்ரயோகித்து வந்தால்தான் எல்லோரையும் ஸந்தோஷிப்பித்தல் கூடும். இவ்விதமாய்த் தனது திறமையை மேம்படுத்திக்கொண்டவர் எவ்விதமாய் இவற்றைத் தனது நாடகங்களிலுங் கவிகளிலுந் தெரிவித்தாரென்று பார்ப்போம்.

இச்சமயத்தில் 1593-ம் வருஷத்தில் எழுதிய வீனஸும், அடோனிஸும் என்னுங் கவியும், 1594-ம் வருஷத்திலெழுதிய லூக்ரீஸ் என்னுங் கவியும் இவரது கவித்திறமை மலர்ந்து பூத்துச் சொரிதலைக் காட்டுகின்றன. ஆனாலிவற்றினின்று மனிதருடைய நடவடிக்கை யனுபவ முதலியவற்றைத் தக்கவாறு ஆண்டிலர். அழகாக அமைக்கப்பட்டிருப்பதே யிவற்றின் முக்கிய சிறப்பாம். இவ்விடத்தே இவரெழுதிய சிருங்கார கவிகளைப்பற்றி யோசித்தல் தகுதி. அவை மொத்தம் நூற்றுநாற்பத்தாறு கவிகள். அவற்றில் நூற்றிருபத்தாறு அழகாயவோர் மனிதனுக்கும், மற்றவை அழகில்லாவிட்டாலு மன்பை யுண்டாக்கிய ஓர் பெண்ணுக்கு மெழுதப்பட்டுள்ளன. இவை முதலில் அச்சிடுவதற்காகவே யெழுதவில்லை. ஆகவே தன் மனதின் அன்பைச் சிறிதுமொளிக்காமல், அன்பு தூண்டியவாறே வார்த்தைச்சிறப்புந் தன்னாலெட்டிய மட்டுஞ் சேர்ந்ததாய், இதற்கே யோரிணையில்லாமல் எழுதப்பட்டுள்ளன. இவை ஷேக்ஸ்பியர் தன்னிலையே யுணர்ந்து தனதன்பின் பெருக்கத்தால், தனக்காறுதலுண்டாகும்படி, அடக்கமுடியாமல் எழுதிய அன்பின் கவிகளென்று எல்லாராலும் நிச்சயிக்கப்படுகின்றன. இதன் முக்யம் என்ன

வெனில் நாடகக்கவியாகிய ஷேக்ஸ்பியர் தனது நாடக புருஷர் வாயிலானுரைப்பது அவ்வவ்வகையினர் உரையே யன்றி இவரதென்று தெளிவாக நிச்சயித்தல் முடியாது. ஒருவிதமாய்ப் பார்க்குங்கால், கொடியவ னொருவன் வார்த்தைகளையும் சத்தியவந்தன் ஒருவன் வார்த்தைகளையும் அவர்களை நாடகங்களிற் சேர்ப்பித்திருப்பதால் ஷேக்ஸ்பியர் எழுத வேண்டியதாகிறது. அவ்வண்ண மெழுதுமிடத்துச் சண்டாளனொருவனை அருவருப்பா யெண்ணினரேல் அவன் மனதினெண்ணம் இவர் கையைவிட்டோடிப்போம். அவனதியற்கையி னுண்மையை ஸரிவரக் காண்பித்தல் முடியாது. ஆகவே அவனாகவே நின்று, அவன்போல நினைத்து, அவன்போலப் பேசினால் மட்டுமே அவன் வார்த்தை ஸாதாரணமாக உலகில் அவன்போன்றவர் வழங்கும் வார்த்தையென உண்மைப்படும். இப்படிப் பல்வேறு வகையான இயற்கையுடைய ஷேக்ஸ்பியரை யெவ்வாறு இவ்வியற்கைதானுடையரென்று சொல்லுதல்கூடும். ஆகவே இச்சிருங்கார கவிகள் போன்ற கவிகளில் தன் மனதினன்மைத் தான் காமுற்ற மனிதனுக்கும், பெண்ணுக்கு மெழுதியது நமக்கு இவரெவ்வளவு அன்பு மிகுதியை யுடைத்தாயிருத்தல் கூடும் என்பதைப்பற்றி ஓர் நிச்சயங் கொள்ளத்தக்க ஸாதனமாகிறது. இதைக் கற்போர் காண்பதென்னவெனில் இவ்வித ரஸம் வாய்ந்தமைக்கப்பெற்ற பாடல்களிலெல்லாஞ் சிறிதுஞ் சந்தேகமின்றி இவை மிக்கச் சிறந்ததென்றும் இதுபோல் யாரும் அன்புடையராதலாவது, அவ்வன்பை யிவ்வளவு அழகாயும், படித்தோர் மனத்தைக் கவர்ந்துருக்குவதாயுங் கவிகளிலமைப்பதுங் காணக்கிடையாதென்பதாம். இவை யவர் வேடிக்கைக்காக வெழுதியவையல்ல. அவருடலின் உதிரத்தினால் எழுதப்பட்டதுபோல், தன் உதடும், இருதயமுமதிரத் தன்னில் உணர்ந்து, எழுதியவை யாகின்றன. நம்மையுமவ்விதமாகவேயவை அவ்வன்பையுணரச்செய்கின்றன வென்றால், இனி யவற்றின் பெருமையைக் குறித்து வேறு சொல்லுதல் வேண்டாம்.

இனி யவர் நாடகங்களைப் பற்றியே குறிப்பாக வுரைத்தல் வேண்டும். ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கு முன்னிருந்த நாடகங்கள் மிகுதியும் ஸாதாரணமானவையாயும், அறிவின் நுட்பத்திற்காவது கவியினினிமைக்காவது சிறந்தவை யில்லாமலும், தந்தனப்பாட்டுகளே மிகுந்தனவாயு மிருந்தன. அவை கிறிஸ்திய மதவிஷயமாய்ப் பாதிரிகளால் தம்மதக்கோட்பாடுகளை ஜனங்களுக்கு விபரமாய்க் கண்காக்ஷியாய்க் காட்டுதல் குறித்து ஏற்படுத்தப்பட்டு, பின் அவைகளில் தேசசரிதமும், தொழிலாளியர் வாழ்வும், வேடிக்கைக் கதைகளுஞ் சேர்ப்பிக்கப்பட்டு அக்காலத்திற் கல்வியுடையரான பாதிரிகள் கையினின்று நீங்கித் தொழிலாளிகள் கையிற்பட்டு, வெகு காலத்திற்கப்பால், வில்லி, மார்லோ முதலியவர்கள், தாம் கலாசாலையிற் கற்ற கல்விகொண்டு, அரசருக்கு முன்னும் பிரபுக்களுக்கு முன்னு மாடுமோட்டங்களை வெகுவாய்ச் சீர்திருத்தினார்கள். இவர்களில் மார்லோஎன்பவர் ஷேக்ஸ்பியரது ஸ்நேகரும், ஷேக்ஸ்பியர் நாடகமெழுது முன்னரே மிகச்சிறந்த நாடகமெழுதியவருமானவர். இவர் எவ்விதத்தாலும் மிக்கவறிவினர், நுண்ணறிவும், வாக்குவல்லமையு முடையவர். ஆனால் ஒரு குடிவெறிச்சண்டையில் தனது முப்பதாம் வயதில் குத்துண்டு செத்தார். இவருடைய திறமையும், கிரீன், வில்லி என்பவரது முக்கிய திறமையும் ஷேக்ஸ்பியர் மிகுகவலையாகக்கற்றுத்தன் தொழிலில் விர்த்தியடையமுயன்றார். இவ்வித நாடகங்கள் முதலில் அரசர் முன்னும் பிரபுக்கள் முன்னுமட்டுமே யாடப்பட்டு வந்தன. ஆகவே இப்பிரபுக்கள் சென்றவிடமெல்லாமவர்கூட இந்நாடகக்காரருஞ் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் ஷேக்ஸ்பியர் லண்டனுக்கு வரும்போது நாடகசசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவையொரே யிடத்திலிருக்கவும், பிரபுக்களன்றிமற்ற ஸாதாரண ஜனங்களும் வந்து பார்ப்பதற்குரியதாகவு மிருந்தன. முதலில் ஜனங்களுக்குரிய முண்டா, குஸ்தி, கத்திச்சண்டை கண்கட்டுவித்தை கர்ணம்போடுதல்முதலியன சேர்ப்பித்துவந்தார்கள். இதுவிஷயம் ஷேக்ஸ்பியர்எழுதிய உம் மனம்போலே யென்ற நாடகத்தில் குஸ்திபோடுவதாகக் காண்பித்தலிலும், ஹாம்லெட் ரோமியோவும் ஜூலியட்டும் என்ற நாடகங்களில் கத்திச் சண்டையிற் காண்பிப்பதிலும் அறியலாம். ஆகவே இவர்க்கு முன்னர் ஆட்டக்காரர் செய்தவற்றையுந் தழுவியே அவற்றின்மீது தன் அரிய பெரிய தத்துவங்களையும், கவித்திறன், அனுபவமாட்சி முதலியவற்றைக் காட்டியிருக்கிறார்.

ஷேக்ஸ்பியர்நாடகமெழுதவாரம்பித்துச் சிலகாலத்திலேயே, அரண்மனையில் வேலையாயிருந்த பிரபுவின் நாடகக்காரரொருவராய்ச்சேர்ந்து பிறகு ஜேம்ஸ் என்னு மரசன் பட்டத்துக்கு வந்தபிறகு அவரது நாடகக்காரராக மாற்றப்பட்டு நதிக்கரையிலுள்ள குளோப் நாடகசாலையில் நாடகமாடியும், நாடகமெழுதியும் வந்தார். அக்காலத்து நாடகசாலை இன்றையதுபோல் படங்களுள்ள திரைகளாவது, காடு, செடி, கடல் முதலியன காட்டக்கூடியவையாவது, உடையனவல்ல. இது இன்னவூர், இது இன்னவிடமென்று பலகையிலெழுதித் தொங்கவிட்டிருக்கும். அதைக்கொண்டே அவ்விடங்களென்று பார்ப்போர் தம்மனதில் எண்ணிக்கொள்ளவேண்டியது. எனினும் ஆட்டத்தின் சிறப்பும், நாடகத்திலுள்ள அருமையான செய்யுள் வன்மையும், அரும்பெரும் விஷயங்களுமிவையில்லாதபோதிலும் மிகுந்த சிறப்பினை யுண்டாக்குவனவாயிருந்தன.

*—A Master of Arts.*

# ஸுசீலா ஸ்வயம்வரம்

**SUSILA SWAYAMVARAM**

(410-ம் பக்கத்தொடர்ச்சி)

அரசன் ஸபையிலிருந்த வேலையாட்களையும் இதரர்களையும் விலகிப்போகும்படி கட்டளையிட்டவுடன் அரசனைத் தன் ஸமீபத்தில் இருத்தித் தாபஸியர் பேசுவாராயினர்.

"உன் பெயரே அஸூயாவர்மனென்று ஏற்பட்டுவிட்டது. அஸூயா உன் பிறவிக்குணம்; அதை மாற்றுதல் எம்மாலாகிற காரியமன்று; ஆயினும் நீ ஒருவருமறியாமற் செய்தவற்றை நான் வெளியிட்டுவிட்டமையால் உலகத்தில் இரகசியமே ஒன்றுமில்லையெனலாம். மூடர்கள் மனத்தில் இந்த யதார்த்தம் பதியாது. உலகம் உஜ்ஜீவிக்கும்பொருட்டுக் கடவுளால் ஏவப்பட்ட எம்போலியர்கள் வருங்கால விஷயங்களைச் சொல்லி மனிதரை நல்வழிப்படுத்தல் அவசியம்; அதுபற்றியே உன்னிடத்தில் ஒரு விஷயம் சொல்வேன். உன் வயிற்றிற் பிறந்த பிள்ளை யொருவனும் உன் ஸிம்மாஸனத்தைப் பெறான். இந்த நிமிஷம் முதல் ஒரு வருஷம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது உன் பட்டமஹிஷி வயிற்றில் பெண்தான் பிறக்கும். அதே காலத்தில், விறகு வெட்டி ஒருவன் வயிற்றில் மஹா புருஷன் ஒருவன் ஜனிக்கப்போகின்றான். அவனே உன் பட்டத்திற்கு அதிபதியாவான். [...]து தெய்வ ஸம்மதமானது. இதற்கு விரோதமாய்ச் செய்யும் முயற்சிகளெல்லாம் பயன் பெறாவாகும்" [எ]ன்று கூறிச் சடிதியில் மறைந்தார்.

[...]மக்கட்பேற்றை நினைந்து மனமுருகின மஹாராஜன்
[...]ரியவர் சொன்ன மொழிகளால் பெண்ணொருத்தி
[...]யது தனக்குப் பிறக்கப் போகிறு[...]ன்று கேட்டு
[...]ஞ்சங் கிலேசம் நீங்கி மனங்களி[...] இராஜ்ய
பத்தை நடத்தி வந்தான். ரிஷி [...]ச் சொன்
[...]தை ஒருவரிடத்திலும் கலக்கவில்லை[...]
ரிஷி சொன்னபடி பட்டமஹிஷி [...]ர்ப்பவதி
[...]ளுள். பத்தாவது மாதம் கிட்டி[...]படி
[...]க்கையில் அரசன் வேட்டையாட[...]ட
[...]ட்களையும் சேனைத்தலைவரையும் [...]
[...]யும் அழைத்துக்கொண்டு அடிநா[...]
[...]டந்து அங்கிருந்து காத தூரத்[...]
[...]த்து மிருகவேட்டை செய்[...]
[...]காலம், "மண்கொதிப்ப வ[...]

கொதிப்ப வெண்ணுவா, செண்கொதிப்ப நறுநீழ லிலை மனைவிட் டகலார்க்கும், கண்கொதிப்பக் காங்கொதிப்பக் கால்கொதிப்பக் கற்பகஞ்சார், விண்கொதிப்ப வவ்வேனில் வெம்பருவ மேவியதால்" எனப் புலவர் கூறியபடி தாபம் மிகுந்தது. அரசன் துரத்திப்போன மான், ஓட்டம் பிடிக்க, அரசனும் அதன்பின் ஓடிக் களைத்தான். வேட்டையாட்களும் போர்வீரர்களும் ஸமயசஞ்சீவியும் தனித்தனி பிரிந்து போய் அரசன் ஒண்டியாய்க் குதிரைமேல் இருந்தான். வெப்பத்தாலும் தாகத்தாலும் குதிரை களைத்துக் கீழே விழுந்து மாண்டது. அரசன் காலால் நடந்துபோகும்படி ஸம்பவித்தமையால் புஷ்பம்போன்ற கால்களில் பருக்காக் கற்களும் முட்களும் தைத்துப் பாதங்கள் புண்ணாயின அஸ்தமன காலமும் நெருங்கிற்று. காட்டுவழி ஒன்றுந் தெரியவில்லை; வரவர இருட்டும் அதிகரித்தது. அரசன் மனத்தில் எண்ணாத எண்ணங்களெல்லாம் உண்டாயின. விதியின் வலியை வெல்லுதல் அரசர்க்கும் ஆகாத காரியமன்றோ? திகைத்துத் திகைத்து நின்று எங்காவது காட்டில் வெளிச்சம் புலப்படுமோ வென்று உற்றுப்பார்க்கையில் சிறிது தூரத்தில் மினுக்கு மினுக்கென்று ஒருவெளிச்சந் தோற்றிற்று. அதை நாடிக் கல்லையும் முள்ளையும் பார்க்காமலே அரசன் நடந்துபோனான். கிட்டபோனவுடன் கரியடைந்த குடிசை ஒன்றிருந்தது. அதன் வாயிலில் கறுத்துப் பெருத்த ஆள் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அரசன் கண்ணில் அங்கு நின்றவன்கிராதகனாகத்தோற்றினான். அரசனுக்குப் பசியுந்தாகமும் மிகுதியாயிருந்தது. எதிரில் நின்றவன் கம்பொன்று கையிற் பிடித்திருந்தமையால்தன்னைக்கொல்லத்தான் தண்டபாணியாயிருக்கின்றானென்றெண்ணி அரசன் நடுங்கினான். பசிதாகங்களினாற் பீடிக்கப்பட்டவன் பயவெட்கங்களைப்பாராட்டல் இல்லை. ஆகவே அரசன் அரணியவாஸியிடத்திற் போய், "அன்பனே, இன்றிரவு எனக்கு உண்ணச் சோறும் உறங்க இடமும் தருவாயாயின் உனக்குப் போதுமான பொன்னைக்கொடுப்பேன்: தயவு செய்வாயாக," என்றான். கிராதகன் அரசன் தன்முன் வந்திருக்கிறானென்பதை யறியாமல், "என் வீட்டிற்குள் ஒரு அறைதானிருக்கிறது; அதில் என் மனைவி பிரஸவவேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறாள்; என் கழுதை வெளியில் மேயப்போயிருக்கிறது; அது கட்டப்படும் கொட்டகை அதோ இருக்கிறது; அங்கு [...]ாயில் வைக்கோலைத் தெளித்துக்கொண்டு இராவிற்

டை: என் வீட்டிலுள்ள உணவுப்பொருள் ஏதோ
அதை உனக்குப் போடுகிறேன். என் மனைவி சாவ
இருக்கிருள் ; என் மனம் பதைக்கிறது ; எனக்கு உண
வும் வேண்டுவதில்லை: உறக்கமும் வராது" என்று
தெறிப்பாய்ச் சொன்னுன். பேய்க்கு வாழ்க்கைப்பட்
டால் புளியமாத்துக்கு அஞ்சலாமோ? அரசன் அந்த
மையத்தில் தன் குலப்பெருமையை நினைப்பதனு லாவ
தென்ன? வனவாஸி சொன்னபடி கழுதைத் தொழு
வத்தில் வைக்கோலைப் பரத்திக்கொண்டு அரசன்
சகோரபக்ஷிபோல உண்டிவருவதை நினைந்து உறக்க
மின்றி உட்கார்ந்திருந்தான். கிராதகன் தான்சொல்லிய
வாறே உள்ளேபோய்ப் பழையசோறிருந்ததில் கொஞ்
சம் உப்பைப்போட்டு மிளகாயைவெஞ்சனமாக வைத்து
அரசனுக்குக் கொணர்ந்து தந்தான். ஷட்ரஸோ பேத
மான ஆகாரத்தைத் தெவிட்டத் தெவிட்ட உண்டு
வாடிக்கைப்பட்ட அரசன் அன்றிரவு தனக்குக்
கிடைத்ததை யுண்டு வைக்கோற் படுக்கையி லுறங்கு
கையில் சொற்பனத்தில் "எற்றுக்கொள், எற்றுக்
கொள்," என்று ஒருபெரிய சத்தம் காதிற்படவே
எழுந்து சுற்றுமுற்றும்பார்த்து ஒருவருமில்லாமையால்
கனவென்றெண்ணி திரும்பவும் உறங்கப் போனுன்.
தூங்குங்கால் அரண்மனையில் ஒருவருமறியாமல் முன்
தனியேபேசின தபஸியின் உருவம் அரசன் கண்ணிற்
பட்டு "விடு, விடு," என்னும் சொல்லுங் காதிற்
பட்டது. தபஸி அரசனுக்குக் கனவில் சொன்ன
தாவது, "வனசரனுக்குப் பிறக்கப்போகும் ஆண்
பிள்ளையேதான் உனக்குப்பின் பட்டத்திற்கு வருப
வன். அவனை உன் ஔரஸபுத்திரனுக எற்றுக்
கொள்வாயாயின் உனக்கு இம்மையிற் புகழும் மறுமை
யில் மோக்ஷ ஸாம்ராஜ்யமும் கிடைக்கும். அன்றேல்
அபவாதமும் நரகமுந்தான் உன் கதி;" இதைக்கேட்ட
வுடன் அரசன் விழித்துக்கொண்டு உறக்க மில்லாமல்
விடிகிறவரையில் தரையி லுட்கார்ந்திருந்தான். கிழக்கு
வெளுத்தவுடன் கிராதகன் வீட்டிற்குப்போய் இரவில்
நடந்ததென்னவென்று விசாரித்தபொழுது கிராதக
னுக்கு ஒரு ஆண் மகவு பிறந்திருக்கிறதென்றும் பிர
ஸவித்த மறு நிமிஷமே அக்குழந்தையின் தாய் மரித்தா
ளென்றும் தெரிந்துகொண்டான். பிறந்தஆண்பிள்ளை
சந்திரபிம்பம்போன்ற முகமும் தாமரைபோன்ற கண்
களையுமுடையதா யிருந்தது. தாயில்லாப் பிள்ளையைக்
கண்ட அனைவர்மனுக்குந் தயாவென்பது கொஞ்சத்
தேனும் உண்டாகாமல் அது தன் பாம்பரைை

கெடுக்க வந்த பரமசத்ருவாகப் புத்தியிற்பட்டது. வன
சானுக்கு இரகசியம் தெரியாதாகையால், அரசன் அவ
னிடத்திற்போய், "நண்பா, உனக்குப் போதுமான
அளவு பொன் தருகின்றேன் : பிள்ளையை என்னிடம்
கொடுத்துவிடு: நான் அதைக் காப்பாற்றி முன்னுக்குக்
கொணர்வேன் : நீ வேறு பெண்சாதியை மணந்து
சுகமே வாழலாம்" என்றுன். கிராதகன் "பிள்ளை பெரி
யவனுகி எனக்குக் கிழப்பருவம் வந்த காலத்தில்
உதவுவானென்றிருந்தேன். கடவுள் வேருக எண்ணி
ஞர்போலும்;அப்படியேஆகுக"என்று சொன்னகாலத்
தில் அரசன் ஆட்கள் இரவு முழுதிலும் அரசனைத்
தேடித்திரிந்து வனசரன் வீட்டிற்குச் சற்றுத் தூரத்
தில் வந்தபோது தமது கொம்புகளை ஊதினுர்கள். தன்
னுட்கள் வந்தார்களென்று களித்த அரசன் தன் கொம்
பையும் ஊதவே, அடுத்த நிமிஷத்தில் இராஜபரிவா
ரங்களெல்லாம் அங்குவந்து கூடி "மஹாராஜாவே,
தங்களை இரவுமுழுதும் தேடி அலைந்தோமே, இரவில்
எங்குபடுத்துறங்கினீர்? எவருணவு அளித்தார்? மஹா
ராஜாவின் பாதங்கள் எவ்வாறு நொந்தனவோ," என்று
பிரலாபித்தலைக்கேட்ட வனசரன் மனைவி, மகன் இழக்
தை எண்ணுது இராஜாபாதம் வந்ததை எண்ணித்
திகைத்து நடுநடுங்கி யிருக்கையில் அரசன் ஸமய ஸஞ்
சிவியைநோக்கி, "இந்தக்கிராதகன் நேற்றிரவு எனக்கு
உண்ணச் சோறும் உறங்க இடமும் கொடுத்தான்.
அவன் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றுத் தே
வியோகமாய்விட்டாள். அந்தக்குழந்தையை நமதுஅர
மனைக்குக் கொண்டுபோய் உயர்ந்த பதவி யடையும்
செய்வோமாக" எனவே, ஸமய ஸஞ்சிவியும் "மஹா
ராஜாவின் சித்தம்" என்றுன். கிராதகன் அரசனி
டத்திற் பொன்னைப்பெற்று அந்த இடத்தை விட்டு
போனபிறகு மனைவி மகனைப்பற்றி நினைத்தவே
யில்லை. ...ட்கள் குழந்தையின் தாயைக் கனன
செய்து ... ள ஒரு சிறு பேழையில் வைக்கோலை
போட்டு ... சிசுவை வைத்து ஸமயஸஞ்சிவிகையி
ஒப்புவி... . அந்தப் பேழைக்குள் ஒரு செங்க
தின் ... ரைந்திருந்தது. அந்த உருவத்தை
ப... க்குச் செவினிடத்தில் ஆத்திரம் மேற
... வந்தது. நகரத்துக்குச் சமீபத்தி
... அரசன் ஸமயஸஞ்சிவியைத் தன்ன
... டு மற்றவர்களை யெல்லாம்
... ர்போய்ச் சேர உத்திரவு செ
... ாயின்மேல் தான் பெட்டியை

பிள்ளை இருந்தது. ஸஞ்சீவியை நோக்கி அரசன், "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தலல்லவா? இக்குழந்தையின் கதி என்னாகுமென்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். பிரதானி "பிரபுவே, தங்கள் சித்தமே என்பாக்கியமென்று ஆயுளில் பெரும்பாகத்தைக் கழித்துவிட்டேன். இக்குழந்தைக்குத் தக்க செவிலித்தாய் ஏற்பாடுசெய்து வளரும்படி செய்வோமாயின் ராஜஸேவைக்குத் தக்கவனாவன். இம்மட்டில்தான் என் புத்திக்கு எட்டுகிறது," என்றான். அரசன் புன்முறுவல்கொண்டு, "குட்டிச் சுவருக்கு வயதானதுபோல் உனக்கு வயதாகியும் என் சத்துருவை உன்கையில்வைத்துக்கொண்டே அவனைக் காப்பாற்றி ராஜஸேவைக்குப் பாத்திரனாக்க வேண்டுமென்கிறாய். நமது ஸபையில் கடைசியாக என்னிடத்தில் தனியே நின்று பேசின ரிஷியை அறிவாயன்றோ? அவர் சொன்னது, இக்குழந்தை ராஜஸேவைக்குப் படைக்கப்பட்டவன் அல்லன். என் ஸிம்மாஸனத்துக்கே உரியவனாகப்போகின்றானாம். வளர்த்தகிடா மாரில்பாய்வது நிச்சயம். அந்த ரிஷி திரிகாலஞ்ஞர். பெட்டியில் சிங்கத்தின் ரூபத்தைப் பார்த்தாயல்லவா? என் சோற்றையுண்டு என் சத்துருவை வளர்க்க உடம்படுகிறாயே. இது எனக்கு முழுதிலும் அனிஷ்டம். நம்முடன் கூட வந்தவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். நாமிருவரும் தனியே இருத்தலால் ரிஷிவாக்கியத்தைப் பொய்த்துப்போகச் செய்வோம். பெட்டியின்மேல் ஒரு திணியைப் போர்த்துக் குழந்தையை இவ்வாற்றில் விட்டுவிடுவோம். உடன் வந்தவர்கள் குழந்தையைப்பற்றிக் கேட்பாராயின் கிராமங்களில் பாலூட்டி வளர்ப்பவர்கள் மிகுதியாயிருத்தலால் வழியிலுள்ள ஒரு கிராமத்தில் ஒருத்தி வசத்தில் சிசு இருக்கிறதென்று சொல்லி விடுவோம். நமக்கென்ன பயம்? பெட்டியை ஆற்றில் போட்டுவிடு" என்று ஆஞ்ஞாபிக்க, ஸமயஸஞ்சீவி அரைமனத்தோடு பேழையை ஆற்றில்விட்டு அரசனோடு நகரம்போய்ச் சேர்ந்தான்.

அஸூயாவர்மன் அரண்மனை ஆஜாரவாயிலில் போனவுடனே வாயிற்காப்போன் ஓடிவந்து அரசன் காலில் வீழ்ந்து பட்டமஹிஷிக்கு ரதிபோன்ற ஒருபெண்பிறந்ததென்று தெரிவித்தான். அரசன் ஹ்ருதயம் சிறிது குளிர்ந்தது. ஸூதிகாகிருஹத்திற்குஸமீபமாய்ப்போய் விசாரித்தபோழ்து இராஜமஹிஷிக்கு உடம்பு அசௌக்கியமென்றறிந்து அரசன் மனந் துடித்தது. பிள்ளையாய்ப் பிறந்திருந்தால் அவன் மனம் வேறாயிருக்கலாம். ரிஷி சொல் தவறாதபடி குறித்தகாலத்தில் பெண் பிறந்துவிட்டது. பட்டமஹிஷி சுந்தரியின் சரீரம் நாளுக்குநாள் மெலிந்துவந்தது. உயிர்ச்சேதம் வருமென்று தோன்றிய காலத்தில் தன் கணவனைச் சுந்தரி அருகில் அழைத்து "பிராணநாதா, இன்னும் நான் ஜீவித்திருக்கக்கூடிய காலம் சொற்பமென்று தோன்றுகிறது. பிராணவியோகமாவதற்கு முன் நான் தம்மைப் பிரார்த்தித்துக் கொள்கின்றவை இரண்டு: என் பெண்ணுக்குச் சுசீலா என்னும் பெயரிடல்வேண்டும்: அவள் தன் கணவனை ஸ்வயம்வரத்திலடையும்படி அனுமதிதரல்வேண்டும். தாம் புத்திரவந்தராவதற்கு வேறு கன்னிகைகளை மணம்புரிவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. என் வேண்டுகோளுக்கு இணங்குவீராயின் என் மனம் சாந்தமடைந்து பரலோகப்பிராப்தியடைவேன்" என்றாள். அஸூயாவர்மன் "அப்படியேஆகுக" என்று அரைமனத்தோடு சொல்லிவிட்டுவெளியில்வர, இரண்டு நாழிகைகளில் ஸுந்தரி தேகவியோகமடைந்தாள். பட்டமஹிஷியின் ஈமக்கடன்கள் முடிந்தவுடனே வேறொரு பெண்ணை மணந்தான். புத்திரன் உற்பத்தியாகவேண்டியதற்கு இராஜ்யத்திலுள்ள ஜோதிஷ சாஸ்திரிகளையெல்லாம் வரவழைத்து ஹோமங்களும், யாகங்களும், ஸமாராதனைகளும் கணக்கில்லாமற் செய்தான். ரிஷிவாக்யம் பொய்யாகாமலே இருந்தது. அரசன் கொஞ்சக்காலத்துக்குள் ஆற்றில்விட்ட குழந்தையை முற்றிலும் மறந்துவிட்டான். அது இறந்தேபோயிற்றென்று அவன்நிச்சயம்செய்து வழக்கம்போல ராஜ்யகாரியங்களை நடத்திக்கொண்டு இரண்டாவது மனைவியுடன் கூடிக்குலாவிக் காலத்தைக் கழித்துவந்தான்.

இவ்வாறு பதினாலு வருஷங்கள் சென்றன. ரிஷிவாக்யம் பொய்த்துப் போயிற்றென்று சிற்சில வேளைகளில் அரசன் எண்ணியிருந்தான். ஆயினும் ஒருநாள் இரவில் அது ஞாபகத்துக்கு வரவே அரசனுக்குத் தூக்கமே இல்லாமல் படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தான். இரண்டாவது மனைவி, அரசன் இவ்வாறு உறக்கமில்லாமல் பெருமூச்சுவிட்டு மனத்துன்பமடைந்ததைக் கண்டு காரணத்தை வினவ, அவன் "ஒன்றுமில்லை, முன்னொருத்தியை மணம்புரிந்து ஒரு பெண்ணைப் பெற்றேன்: உன்னைக்கலியாணஞ் செய்து பெண்குழந்தை கூட இல்லாமல் இருத்தலை விட என் போலியர்களுக்குத் துக்கத்தைத் தருவது வேறென்ன?

என்னைக் கேள்வி ஒன்றுங் கேட்காதிருப்பாயாக" என்றான். இராஜாத்தி ஒன்றும் பேசாமல் சும்மா இருந்துவிட்டாள்.

மறுநாட்காலையில் அரசன் ராஜாளிப்பட்சிகளை வைத்துக்கொண்டு வேட்டையாடப் புறப்பட்டான். அக்ஷாமி என்னும் ஜீவநதியின் உபநதிகளில் ஒன்றிற்கு அகஹரி என்று பெயர். அந்த நதி தீரமானது மிகவும் ரமணீயமானது. மேட்டுப் பாங்கில் சிறு மலைகளும் அவைகளில் ஸுகந்தம் வீசும் சந்தன சம்பக விருக்ஷங்களும் அமைந்திருந்தன. மா பலா முதலிய பழமரங்கள் காய்த்துப் பழுத்து நறுநாற்றம் வீசிக்கொண்டிருந்தன. ஒரு குன்றிலிருந்து அமலா என்று ஒரு பெரிய அருவி அகஹரியுடன் வந்து கலக்கும் இடத்தில் ஓர் யந்திரம் ஏற்பட்டுப் பக்கத்தில் அதற்குடையவனும் அவன் வேலையாட்களும் வசித்துக்கொண்டிருந்தார்கள். அரசனும் அந்தச் சுந்தரமான இடத்திற்குத் தான் பக்ஷி வேட்டைக்குப்போனான். அரசன் பரிவாரங்களோடு வந்தவுடனே, யந்திரத்துக் குடையவன் அவர்களுக்குத் தக்க உபசாரங்கள் செய்தான். அரசன் மனமகிழ்ந்து யந்திரக்காரனுடைய யோகக்ஷேமங்களை விசாரிக்கையில் யந்திரியின் பக்கத்தில் சுமார் பதினைந்து வயதுள்ள வாலிபன் ஒருவன் அதிஸுந்தரனாக நிற்பதைக் கண்டு அரசன் மனம் கவரப்பட்டு யந்திரியை நோக்கி, "அதோ நிற்கும் சிறுவன் உன் குமாரனா? அழகில் மன்மதன்போலிருக்கிறானே. அவன் தாய்போலமைந்தான்போலும். இந்தச் சுந்தரனைப்பெற்ற தாயை நான் நேரிற் பார்த்துச் சில பேச்சுக்கள் பேசினாலொழிய என்மனங்குளிராது. உன் மனைவியைப் போய் இட்டுவா," என்று கட்டளையிடவே, யந்திரியும் வீட்டிற்குச்சென்று தன் மனைவியை அழைத்துவந்து ராஜ ஸன்னிதியில் நிறுத்தினான். அரசன் ஏறி இறங்கப்பார்த்து யந்திரி மனைவியை நோக்கி, "பெண்ணே, அதோ இருக்கும் பிள்ளை உனக்குப்பிறந்ததோ, அல்லது உங்களிருவருக்கும் அவன் ஸ்வீகாரப்புத்திரனோ, உண்மையை நம்மிடத்திற் சொல்வாயாக" என்றான்.

யந்திரியின் மனைவி என்றும் இராஜ ஸன்னிதானம் எப்படியிருக்கு மென்றறியாதவள். ஆயுத பாணிகளாய்ச் சேவகர்களும் மற்றவரும் நிற்பதைக்கண்டு நாவெழாமற் கால்நடுங்கித் திகைக்கையில் அரசன் அவள் அருகிற்சென்று, "சகோதரி, என்னை உன் தமையனாகப் பாவித்துப் பேசு. அரசனென்பதை முற்றிலும் மறந்துவிடு. உனக்கு இஷ்டமானவற்றையெல்லாம் நீ நிர்ப்பயமாய் என்னைக் கேட்கலாகும். நான் கொடுப்பதற்குத் தடையொன்றுமில்லை," என்று தைர்ய வார்த்தைகள் சொன்னவுடனே யந்திரியின் மனைக்கிழத்தி அஸையாவர்மனை வணங்கி, "இந்தச் சிறுவன் எங்கள் புத்திரனல்ல. பதினாறு வருஷங்களுக்குமுன் ஒருநாள் சந்தையிற்போய் குடித்தனத்துக்குவேண்டிய தட்டுமுட்டு ஸாமான்கள் வாங்கி வருங்காலத்தில் அக்ஷாமிநதிக்கரையோரமாய் ஒரு பெட்டி மிதந்துவந்தது. அதில் இந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. என்காதிற் பட்டவுடனே நானே ஆற்றிலிறங்கிப் பாலனை எடுத்து என் வீட்டிற்குக் கொண்டுவந்து பர்த்தாவினிடத்திற் காட்டினேன். அவரும்புத்திரனில்லாமல் வருந்தினமையால் பாலனைச் சரிவர வளர்க்கும்படி கட்டளையிட்டார். அவராணை மீறாது இந்நாள்வரையில் நடந்திருக்கிறேன். அவனைப் பார்த்த சில ஜோஸியர்கள் ராஜபதவிக்குப் பிறந்தவன் என்கிறார்கள். அவனே யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தைமுதலான அரசகுமாரர்களுக்குரிய கல்விகளிலெல்லாம் குருவில்லாமலே நிபுணனாயிருக்கிறான். அவன் என் வீட்டில் வந்தநாள் முதற்கொண்டு எங்களுக்கும் பக்கத்திலுள்ளவருக்கும் சண்டை சச்சரவுகளெல்லாந் தீர்ந்து ஊரிலுள்ளார் அனைவரும் ஏகோபித்து ஒரே மனதாய் வாழ்ந்துவருகிறோம். அவன் முகத்தை ஒரு நிமிஷம் பாராமற்போனால் எனக்காவது என் பர்த்தாவுக்காவது ஸந்தோஷலேசமுங் கிடையாது. அவனுக்கு நாமகரணஞ் செய்யுங்காலத்தில் சாஸ்திரிகளெல்லாம் பற்பல பெயர்களை வைக்க விரும்பிச் சொன்னார்கள். ஒரு விருத்தர் மாத்திரம் என்னைத் தனியே அழைத்து "இந்தப்பிள்ளைக்கு ஸுமித்ரன் என்னும் பெயரை இடு," என்றார். எனக்கும் அதில்தான் இஷ்டமாயிருந்தது. ஊரார் ஒருமித்து வாழ ஆரம்பித்துப் பகைமை மறந்தது இவன் வந்த பிறகானமையால் அந்தப் பெயரே இவனுக்குத்தக்கதென்றெண்ணி என் கணவனிடத்தில்நான் சொன்னேன். அவரும் ஸம்மதித்து இப்பாலனுக்கு ஸுமித்ரன் எனும் பெயர் வழங்கிவருகிறது. எங்கள் வீட்டிலேயே நீடித்த காலம் இருப்பவன்போல் எங்களுக்குத் தோன்றவில்லை. மஹாராஜாவின் கிருபையிருக்குமாயின் எங்களுக்கு எந்தப் பாக்கியந்தான் கிடைக்காது," என்று சொல்லிவிட்டு அரசனிடத்தில் விடைபெற்றுப் போனாள்.

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

# கல்யாணி

**KALYANI** *

## 2-ம் அதிகாரம்

இறந்துபோன புனபதியின் பிரேதக்கிரியையைத் தடைசெய்ய முடியாமல்போன அதிகாரி, அதற்கு மறுநாள் காலையில், நடந்தவைகளைச் சொல்ல வீரசேனன் அரண்மனைக்கு விரைந்து சென்றான். அப்பொழுது வீரசேனன் தன்னுடைய விஸ்தாரமான புத்தகசாலையிலிருந்தான். அதன் சுவர்களில் வரைந்திருந்த விருதுச் சின்னங்களாலும் மற்றைய அலங்காரங்களாலும் அது புனபதிகளின் நாட்களில் விருந்தினரை உபசரிக்கும் மகா மண்டபமாயிருந்ததாகத் தெளிவாகும். அவ்விடத்தில் இப்பொழுது புஸ்தக பாரத்தால் வளைந்துகொண்டிருந்த அனேக பலகைகளும் மேஜைகளுமிருந்தன. அவைகளில் சட்டப் புத்தகங்களும் சரித்ரங்களும் எண்ணிறந்தன இருந்தன. தேக்கமரத்தால் செய்த ஒரு கனத்த மேஜைமேல் காகிதங்களும், பிரியாதுகளும், மனுக்களும், தஸ்தாவேசுகளும் நிக்கித்திரக்கிக் கிடந்தன. அவைகளை வைத்து வேலைசெய்வது வீரசேனனுக்குச் சந்தோஷமாயும் தொந்தரையாயுமிருந்தது. அவன் இராஜ்யத்தில் உன்னதப்பதவியிலிருக்கும் ஒருவனுக்குத் தகுந்த கம்பீரமும் கவுரவமான காக்ஷியுடையவனுமிருந்தான். ஆவசியமும் இரகசியமுமான சங்கதிகளைப்பற்றி அவனுடன் அதிகநேரம் சம்பாஷித்தாலொழிய, அவனுடைய தீர்மானங்களில் சலனமாவது, உறுதிக்குறைவாவது உண்டென்று அன்னியன் ஒருவனும் அறியமுடியாது. அவனுக்குள்ள ஜாக்ரதையாலும், காரியங்களில் வீணாகத் தலையிடத் தைரியமில்லாமையாலும் தனக்குண்டாகும் மனத்தளர்ச்சியை, கருவத்தாலும், தந்திரத்தாலும் பிறர் அறியாமல் மறைக்கஅதிக ஆவலுடையவனுமிருந்தான்.

பிரேதக்கிரியை நடந்த காலத்திலுண்டான குழப்பத்தையும், அதிகாரம், குருக்கள், இராஜாங்கம் இவைகளை உல்லங்கனம் செய்ததையும் அதிகமாகப்பெருக்கி, அந்த அதிகாரி சொன்னவைகளையெல்லாம் வீரசேனன் அதிகச் சாவதானமாகக் கேட்டான். மாதவன் பேசிய அவமதிப்பும் பயமுறுத்தவதுமான வார்த்தைகளையும், அவைகள் தன்னைக் குறித்தவை என்பதையும் கேட்டும் அவன் சற்றும் அசையவில்லை. விருந்து நடந்த காலத்தில் அங்குச்சேர்ந்திருந்தவர் பேசின பேச்சுக்களையும் செய்த செய்கைகளையும் தன்னால் இயன்ற அளவு பொய்யாயும் அதிகமாயும் அந்த அதிகாரி சொன்னவைகளைச் செவி கொடுத்திருந்து, அதன்மேல் நடத்த வேண்டிய நடவடிகளுக்கு அவசியமாகிய விஷயங்களையும், சாக்ஷி சொல்லிக் காரியத்தை நிலைநிறுத்தக்கூடியவர்களின் பெயர்களையும் அதிகக் கவலையாய் எழுதிவைத்துக்கொண்டு அந்த அதிகாரியை அனுப்பிவிட்டு, புனபதியின் உடைமைகளெல்லாம் தன் வசமானதுபோல் மாதவனுடைய சரீரசுவாதீனமும் தன் வசமாகி விட்டதையெண்ணி வீரசேனன் மனக்களிப்படைந்தனன்.

அந்த அதிகாரி போனவுடன், வீரசேனன் ஒரு நிமிஷநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தபிறகு எழுந்து பலமான ஒரு செய்கையைச் செய்யத் திடமென்று தீர்மானித்தவனைப் போல அந்த அறையில் அங்குமிங்கும் நடந்தான். "மாதவன் என்கையில் சிக்கிக் கொண்டான். அவன் எனக்குக் கீழடங்கவேண்டும் அல்லது ஒழிந்துபோகவேண்டும். அவன் தகப்பன் ஒவ்வொரு விஷயத்திலும் என்னோடு வழக்குத் தொடர்ந்து, சமாதானத்திற்கு வாராமல் கடைசிவரை சாதித்து, என் பாத்தியதையைக் கெடுக்க முடியாத பொழுதெல்லாம் என்னைப் பழித்து அவதூறு பேசியதை நான் மறந்து போகவில்லை. அவனுடைய குமாரனாகிய இந்தப்புத்தியில்லாதகோபி தானுலகத்தில் ஜீவிக்க ஆரம்பிக்குமுன்னேயே தனக்குக் கேடு விளைத்துக் கொண்டான். மறுபடியும் அவனுக்கு நன்மை கிடையாமலிருக்க நான் வழி பார்க்கவேண்டும். நானிப்பொழுது எழுதிவைத்திருக்கிறதை "ப்ரிவி கவுன்சிலில்" தாக்கல் செய்தால், இராஜாங்கத்தினுடையவும் குருக்கள்மாருடையவும் கவுரவத்தை நிராகரித்த குற்றம் அவன்மேல் சாட்டப்பட்டு, அவன் அதிக அபராதம் விதிக்கப்பெற்றுச் சிறைச்சாலைக்குப்போக நேர்ந்தாலும் நேரும். அவன் பேசின சில வார்த்தைகளால் இராஜத்துரோகம் என்னும் குற்றமும் அவன்மேல் சாரக்கூடுமானாலும் அதற்கு நான் அனுகூலிக்காமலிருக்கத் தெய்வம் எனக்குத் துணைசெய்வதாக—கூடாது—மாட்டேன்—அவன் என் கையில் அகப்பட்டாலும் செய்யேன்—சரி—இராஜ்ய பாரம் மாறுகிற காலம்வரை அவன் உயிரோடிருந்தால் அப்பொழுது என்ன சம்பவிக்கும். ஒருவேளை பழிக்குப் பழிவாங்கல்—எதிர்மாறு செய்தல்—எனக்கு எதிர்க்கக்ஷிக்காரன் வீரமார்த்தாண்டன் இவனுடைய தகப்பன் விஷயத்தில் அனுகூலம் செய்வதாய்ச் சொல்லி

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.

யிருந்தான். இப்பொழுது மகனிருக்கிறன். நம்முடைய ஆதிக்யம் குறைந்துபோக ஆவலோடு காத்திருப்பவர்கள் கையில் இவன் எவ்வளவு பிரயோசனப்படுவான், என்ற எண்ணங்கள் வீரசேனன் மனத்தைக் கலக்கின. தன்னுடையவும், தன் சிநேகிதர்கள், கக்ஷிக்காரர்களுடையவும் நன்மையும்க்ஷேமமும், தற்காலத்தில்தனக்குக் கிடைத்திருக்கிற அனுகூலத்தை மாதவனுக்குவிரோதமாயுபயோகிப்பதால் கிடைக்குமென்று முழுவதும் நம்பிக்கொண்டு, புனபதியின் பிரேதக்கிரியை நடந்த தினத்தில் தன்னுடைய உத்தரவை அவமதித்து நடத்திய கலகாஸ்பதமான காரியங்களை "ப்ரிவி கவுன்சிலுக்கு"த் தெரிவிக்கும்படி எழுத ஆரம்பித்தான். அப்பொழுது நடந்த சங்கதிகளும் அவைகளை நடத்திய ஆள்களின் பெயர்களும் தன்னுடன் சேர்ந்த அதிகாரிகளுக்கு ருசிக்காமல் மாதவனுக்கு அனர்த்தத்தை விளைவிக்கும் என்று அவனுக்கு நன்ருய்த்தெரியும். மாதவன் மேல் கோரகச் சொல்லாமல், சந்தர்ப்பங்களால் அவன் தான் குற்றஞ்செய்தவனென்று ருசிப்பிக்க முயன்று கொண்டிருக்கையில் சுவரிலிருந்த ஒரு கறுப்புக்காளையின் தலையையும் அதன்கீழ் " காலம் வரக் காத்திருக்கிறேன்"என்று எழுதியிருப்பதையும்வீரசேனனுடைய கண்கள் தற்செயலாய்ப் பார்க்க, அவைகளைப்பற்றிய பூர்வகதை அவன் ஞாபகத்திற்கு உடனே வந்தது.

அதாவது, அனேக வருஷங்களுக்கு முன் ஒருவன் புனபதியின் நாடு நகரங்களைப் பறித்துக்கொண்டு அந்த அரண்மனையில் சிலகாலம் வசித்து வந்தான். அக்காலத்தில் ஒருநாள் தன் சிநேகிதருக்கும் பிரதானிகளுக்கும் பெரிய விருந்து செய்யக்கருதி அவர்களை அழைத்து, சகலரும் ஆவலுடன் விருந்துண்ண இருக்க, அவன் தன்னுடைய வேலைக்காரரைக் கோபித்துப் பதார்த்தங்களைப் பரிமாறச் சொல்லிக்கொண்டிருக்கையில், புனபதியும் அவனுக்கு நம்பிக்கையுள்ள சிலரும் அவ்விடத்தில் பிரவேசித்தார்கள். "காலம்வரக் காத்திருக்கிறேன்" என்று புனபதி சொல்லி மரணத்தின் அறிகுறியாக அக்காலத்தில் கருதப்பட்ட ஒரு எருதின் தலையை அவ்விடத்தில் வைக்க, முன் சங்கேதப்படி அங்கே பிரவேசித்தவர்கள் அங்கிருந்தவர்களை யெல்லாம் கொன்றுவிட்டார்கள்.

யாவருக்கும் நன்ருய்த் தெரிந்ததும் அடிக்கடி எல்லாரும் சொல்லிக்கொண்டிருக்கிறதுமாகிய இந்தக் கதை வீரசேனன் ஞாபகத்திற்கு வர, தான் எழுத ஆரம்பித்த காகிதத்தைத் தன் மேசையில் பத்திரமாய் வைத்துப் பூட்டிவிட்டு, தான் நடத்த உத்தேசிக்கும் காரியத்தின் முடிவு என்ன ஆகுமென்று யோசிக்கப் பல வழிகளில் பாய்ந்தோடுகிற தன் சிந்தையை ஒரே வழியில் திருப்பும்படி வெளியில் போகப் புறப்பட்டான்.

S. V. கள்ளபிரான் பிள்ளை, பி. ஏ.

## மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

### வியாஸ விதானம்

### Essay writing

### III. விளக்க வியாஸங்கள்

### EXPOSITORY ESSAYS

#### (1) இயற்கை விஷயங்கள்—ஆறுகள்

Natural Phenomena—Rivers

குறிப்பு.—முகவுரை—காரணம்—காரியம்—விசேஷக்குறிப்பு—உபயோகம்.

நாம் ஆறுகள் அநேகத்தைக் கண்டிருக்கலாம். அவைகளிலுள்ள நீரைக் குடித்து ஸுகமடைவதும், அதில் குளித்துச் சுத்தமாவதுமே நமக்கு வழக்கம். இதைத்தவிர அவைகளின் விஷயங்கள் நமக்குத் தெரியாது. வயல் வெளிகளுக்குச் சென்று உழவு முதலியவைகள் செய்து பயிரிட்டு ஜீவனம் செய்பவர்களுக்கு ஆற்று நீரின் உபயோகம் கூடக் கொஞ்சம் தெரிந்திருக்கலாம். என்ன தெரிந்தும் எல்லாம் வயிற்றைப்பற்றிய விஷயமாக விருப்பதால், ஆறுகள் இவ்வாறு ஏற்பட்டு, இன்ன தொழில்களைச் செய்துவருகின்றன என்னும் அரிய ப்ருகிருதி சாஸ்திர உண்மைகள் விளங்க இடமே இல்லை. இவைகளைப்பற்றி யோசிக்கக் காலமிருந்தாலல்லவோ ஆறுகளில் அமைந்து கிடக்கும் ஈசுவரஸ்ருஷ்டி அற்புதத்தைக்கண்டு களிக்க இடம் உண்டாகும். வலை வீசி மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டு கடலுள் வெகுதூரம் சென்று அங்கு அலைகளுள் மூழ்கி எழுந்து ஓயாது கிடக்கும் செம்படவர்களுக்குக் கடலின் காம்பீர்யம், அதன் சிறப்பு, அதன் விஸ்தீரணம் முதலியவைகளைக்கண்டு அவைகளில் மனம் எப்படி ஈடுபட்டு நிற்காதோ, அதுபோல அடிக்கடி நாம் பார்த்துக்கொண்டிருப்பனவாகிய ஆறுகளின் விஷயமான தத்துவஞானம் நமக்கு ஏற்பட இடமில்லை. நாம் எளிதில் பார்க்கக்கூடிய வஸ்துக்கள் மூலமாக இந்த விஷயத்தை விளக்கப்புகுவோம்.

ஆறுகள் எவ்வாறு உண்டாகின்றன என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். ஒரு மழை பெய்வதற்கு முன் நம் அருகிலுள்ள ஒரு பாதையை உற்றுநோக்குவோம். அது மட்டமாக விருப்பதாக நமக்குத் தோன்

றும். மழை பெய்யத்தொடங்கும்பொழுது அதில்மழைத் துளிகள் விழுந்து தனித்தனியாகச் சிறு குழிகளை உண்டாக்கும். மழை சற்று பலத்துவிட்டால் இக்குழிகள் எல்லாம் சேர்ந்து கலந்துபோக மழைத்துளி நீர்கள் ஒன்றாகச்சேர்ந்து சிறு தாரைகளாகி ஒருபுறம் நோக்கி ஓடத் தொடங்கும். பாதை முழுவதும் கண்டவிடம் எல்லாம் தண்ணீர் ஓடாது இருபுறமும் ஒதுங்கிப்பாயத் தொடங்கும். அப்பொழுதுதான் பாதையின் சரிவு நமக்கு வெளியாகும். அதில் வண்டித்தடங்களிருப்பின் அவைகளின் வழியாகவும் தண்ணீர் ஓடத்தொடங்கும். வழியில் பாதை கரடுமுரடாகவிருப்பதும் இப்பொழுது தான்தெரியவரும். இப்பாகங்களின் அருகாமையில்வரும் பொழுது ஓடும்தண்ணீர்மார்க்கம் மாறி இப்பாகங்களைச் சுற்றி தாழ்ந்தவிடங்கள் வழியாகச் சரிவுநோக்கிச் செல்லும். இந்த நீரோட்டத்திற்கு நேரே எதிராகப் பாதையிலே சென்றால் வர இந்நீரோட்டம் அளவில் குறைந்துக்கொண்டு வர முடிவில் பாதையின் மேடான பாகம் வருவோம். அங்கு இந்த நீர்த்தாரைகள் ஒன்றும் காணப்படா. அதன் மறுபுறத்தில் முன்னோடும் தாரைகளுக்கு எதிர்ப்புறமாகத் தாரைகள் ஓடிக்கொண்டிருக்கும். இந்த விஷயங்களை நன்றாக மனதில் பதித்துக்கொண்டால் ஆறுகள் உண்டாகும் விதம் நன்கு விளங்கும். வானின்று இழிந்து விழுகின்ற தாரைமழையானது மேடான மலைப்பாகங்களிலும் பூமியின் மேடான பாகங்களிலும் விழ ஆங்காங்குள்ள தாழ்ந்த பாகங்களில் முதலில் சிற்றாறுகள் உண்டாகி நிலசரிவிற்கேற்ப இவைகள் ஓடிச் சேர்ந்து பெரிய நதியாகும். இது வரும் வழியில் மேடான பாகங்களிருப்பின் அவைகளால் தடைபட்டு மார்க்கம் மாறி தாழ்ந்த பாகங்களைத் தேடிச் சென்று ஆறு வளைந்து செல்லும். மலையில்விழும் நீர் ஒருபுறம் ஓடி ஆறாகப்போவது போலவே மறுபுறமும் நேரெதிராகிய ஆறுகளும் ஆகும். இம்மாதிரியானப் பாகங்களுக்கு நீர்ப்பிரிவு என்றுபெயர். மேற்குத் தொடர்ச்சி மலைகள் நீர்ப்பிரிவுகளே. கிழக்குநோக்கி தாம்ரபாணி, காவிரி, கிருஷ்ணா, கோதாவரி முதலியநதிகள் அதிலிருந்து ஓடுவதுபோல குழித்தலையாறு, பெரியாறு, பொன்னானியாறு முதலிய சிறு நதிகள் மேற்கு நோக்கியும் அதிலிருந்து போகின்றன. பாதையிலுள்ள மழைத்தாரைக் கால்வாய்கள் பள்ளமான விடத்தில் தங்கிச் சுழன்று மறுபடியும் அங்கிருந்து வெளியேறிப் போவது போல ஆறுகளும் பள்ளமான ப்ரதேசங்களில் ஏரிகளாகக் தங்கி அங்கும் நிலைபெறாது ஓடிச்சென்று எல்லாத் தண்ணீருக்கும் நிலையமாகிய கடல் சேருமளவும் ஓய்வதில்லை. மழை இருக்கிறவரையில் தான் பாதைக்கால்வாய்களில் நீரோட்ட மிருக்கும். பின்னர் அவை வறண்டுபோகும். ஆறுகளோ அப்படி அல்ல. என்ன வேனில் காலமாகிலும், வெகு குறைந்தாவது ஓடிக்கொண்டிருக்கும், அல்லது அங்கு வெட்டினால் சிறு ஆழத்தில் தண்ணீர் காணலாம். ஆதலால் மழைகாலத்தில் பூமியுள் மூழ்கி மறையும் தண்ணீர் உள்ளூற்றுக்களாக விருக்க அவைகளும் ஆறுகளை உண்டாக்கும் காரணங்களுள் ஒன்று ஆகவே, ஆறுகள்ஸாதாரணமாகப் பூமி உறிஞ்சிய நீர்போக மற்றைய நீர்களை மறுபடியும் மழையாக வந்திறங்கும்படி செய்ய ஸமுத்ரம் சேர்க்கும் கருவிகளை ஒழிய வேறல்ல. கங்கை ஸிந்து ப்ரஹ்ம புத்ராக்களைப்போன்ற சில ஆறுகளில் வேனில் காலத்தில் அதிக ஜலமும், மழைகாலத்தில் தண்ணீர் சற்றுக் குறைந்தும் காணப்படும். இவைகள் புறப்படும் மலைகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டிகளாக விருப்பதால்முற்கூறிய ஏற்றத்தாழ்வுகள் காலம் மாறி ஏற்படும்.

இனி ஆறுகளின் கார்யங்களை ஆராயப்புகுவோம். மறுபடியும் பாதைக் கால்வாய்களையே உற்று நோக்க வேண்டும். அவைகள் போகும்பொழுது பாதையில் உள்ள புழுதிகளை கூடவே அடித்துப்போகும். போகப் போக அவைகள் சற்றுத் தெளிந்து விடுவதால் அவைகளைப்போகும் வழியிலேயே படியவிட்டுப்போகின்றன. மேல்மேலும் வரும் தண்ணீர் படிந்தவைகளை இடம் மாற்றிவர, அந்தப் படிவுகளும் மெதுவாக இடம்மாறிக் கொண்டேதான் இருக்கும். இப்படிவுகள் பாதை முடிவிலுள்ள பெருங்குழி அண்டைபோக, அங்கு இவைகள் ஏராளமாகப் படிந்து, அக்குழி தூந்துகொண்டே வரும். கால்போய்ச் சேருமிடத்து மண்படிவு அதிகமாகவிருக்க அங்கு மேடு தட்டும். அது அதிகமாகி விட்டால் தரை வெளியில் தெரிய கால்வாய் இரண்டாகப் பிரிந்து போய்விடும். இது திரிகோண ரூபமாக விருக்கும். இது போலவே ஆறுகளும் பூமியிலுள் சிதைவுப் பொருள்களை ஸாவதானமாக எடுத்துச்சென்று கடலுள் சேர்க்

கும். முகத்துவாரத்தில் திரிகோண ரூபமான நில மட்டம் உண்டாக்கும். ஆகவே இவைகள் ஓரிடமுள்ள நிலங்களைச் சிதைத்து வேறோரிடத்தில் புதியதிட்டு உண்டாக்கிக்கொண்டே யிருக்கின்றன. கடலில் தான் நதிகள் இம்மாதிரி உண்டாக்குகின்றன என்ப தில்லை. போகும் வழியிலேயே திட்டுக்களை உண் டாக்கியும் நாளடைவில் தம் கால்வாயைக் குறைத்துக் கொண்டும் வருகின்றன. இதனால் நதிகள் இருபுறத்தி லும் வெகுதூரம்வரை மணல் இருப்பதையும் பெரு வெள்ளங்களில்கூட இவைகள் மூழ்காம லிருப்பதையும் காணலாம். இவைகளில் ஆற்றுமணல் இருப்பதால் இங்கு முன்னர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது என்றும் அது இப்பொழுது உயர்ந்துவிட்டது என்றும் அறிய லாம். ஆறுகள் கற்களைப் புரட்டிக்கொண்டு பாறை கள் மேல் பாய்ந்து ஓடுகையில் கூறுள்ள கற்களைத் தேய்த்து மழமழவென்றாக்கி உருட்டி கூழாங்கற்க ளாக்குகின்றன. பாறைகளையும் தேய்த்து வழவழப் பாக்குகின்றன. இம்மாதிரி ஓடும் நீரால் பாறைகள் மழமழவென்றாக்கப் பட்டிருப்பதைத் திருக்குற்றாலம் தேனருவித்தடாகம் இருபுறத்திலும் நன்றாகக் காண லாம். பாபநாசம் அருவி ஓரங்களில் பெரிய கூழாங் கற்களையும் காணலாம். கற்கள் ஆற்றுச்சுழலுள் அகப் பட்டுக்கொண்டால் அடிப் பாறையில் அவைகள் தேயுமிடத்தில் ஆட்டுரல் குழிபோன்ற நல்ல குழி பறி த்து விடும். ஆகவே, ஆறுகள் நிலத்தின் சிதைவுகளை ஸமுத்ரம் கொண்டுசேர்த்து அங்கு புதிய நிலமட்டங்கள் உண்டாக்கவும், அங்குள்ள சிப்பிப்புழு முதலியவை களுக்குக் கூட்டுக்குரிய வஸ்துக்கள் கொடுப்பதும், பூமி யில் மூழ்கியது போக உபயோகமற்ற நீரைக் கடல் கொண்டு சேர்த்து மறுபடி மழைக்கு ஆதாரமாக்குவது ஆகிய ஓயாத்தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறுகடலிலேபிறந்துமுடிவில் கடலையேஅடை யும் ஆறுகள் உலகவாழ்க்கையின் நிலையையும் தத்து வத்தையும் நன்குஉணர்த்துவதற்கு உரிய திருஷ்டாந்த மாக, உபநிஷத்ருஷிகள், புராணிகர்கள், கவிகள் முத லிய எல்லோராலும் எடுத்தாளப்பட் டிருக்கின்றன. ஆறுகள் ஓயாது இடம் மாறிக்கொண்டிருந்தும் எப் பொழுதும் நிலைத்திருப்பதுபோலத் தோற்றுவதால் வெளிப் பிரபஞ்சம் முழுவதும் இப்படியே என்பதைக் குறிப்பித்தும், கடலிலிருந்து பிறந்து பலதிசை ஓடி முடிவில் கடலிலே மறுபடி சென்று சேருவதால் எல் லாம் பரம் பொருளிலிருந்து உண்டாகி வெவ்வேறு வழிசென்று ஆடிப்பாடி முடிவில் பரம்பொருளிடமே வந்து அமரும் என்பதையும் குறிப்பாகக் காட்டுவதால் இவைகள் பெரியோர்களால் விரும்பப்பட்டவைகள் ஆகின்றன.

"கான்யாற் றடைகரை யூரினது" என்றார் கவி. ஆற்றங் கரையிலுள்ளோர்கள் அதை ஸ்நாந, பாநம், க்ருஷி முதலியவைகளுக்கு உபயோகப் படுத்துவதால் இவ்வாறு கவி கூறினர். நம்மவர்கள் ஆறுகளைத் தேவ தைகளாகமதித்துவந்தமையால் அவைகளில்அசுத்தகார யங்கள் செய்யாது நன்றாக வைத்துக்கொண்டுவந்தார் கள்.இப்பொழுதோ அப்படியல்ல. இதனால்ஊர் அருகா மையிலுள்ள ஆறுகள் கெட்டே காணப்படுகின்றன. ஊர் சாக்கடை முதற்கொண்டு அதிலேயேதான் வந்து விழுவது. ஆதலால் ஆற்றிற்கு அழிவு ஊராருகிருத் தல் என்று கூறவேண்டி வருகிறது. இவ்வளவு சிறப் பும் உபயோகங்களும் உடைய ஆற்றை நன்றாக வைத் துக்கொண்டிருந்தால் தான் அவைகள் நமக்கு விடாது நன்மை பயந்துகொண்டிருக்கும்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. *மழை
2. *க்ரஹணங்கள்
3. *எரி நக்ஷத்ரங்களும் பொரிநக்ஷத்ரங்களும்
4. *எரிமலைகள்
5. *பூகம்பங்கள்
6. ஜந்துக்களின் மேற் போர்வை
7. *பனிக்கட்டியும் அதன் ரூபாந்தரங்களும்
8. *கானல் நீர் முதலியன
9. மலைகள்
10. இடிமின்னல்.

* இக்குறிப்புள்ளவைகள் விவேக போதினியில் முந் தியே விஸ்தாரமாக எடுத்து ப்ரஸ்தாபித்தவை.

### போதக்குறிப்புக்கள்

1. முகவுரை.
2. காரணம்.
3. கார்யம்.
4. விசேஷக்குறிப்புகள்.
5. உபயோகம்.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

### 6. LESSONS FROM THE LIVES OF THE WORLDLY GREAT

No doubt, from the change of circumstances in the present day, many persons to whom we have referred could not now have been successful in the career they happened to adopt. The discoveries of Arkwright and Stephenson, for example, are not in a special sense to be repeated. A seller of old books could not expect to emulate Lackington. Perhaps it would be difficult to emulate Brassey in the grandeur of his undertakings. We do not, however, present instances of individual effort for precise imitation. Indeed, almost any kind of professional imitation is to be discommended. Nor do we wish that the young should overcome the difficulties that may be incidental to their situation merely for the sake of worldly wealth and distinction, but because it is the duty of every one to cultivate and make the most of his faculties, irrespective of all consequences, leaving the result to Providence. Naturally, there can be no such culture without bringing emulation in its train, independently of the pleasures derived from well-directed exertion. Happiness is not denied to the humble and trustful, but to this there may be added the happiness of being able to communicate happiness to others. To that let every one aspire in the way congenial with the abilities with which he has been beneficiently gifted.

Chamber's Examplary Biography, last para

### உலகிலுயர்ந்தோர் சரிதைகள் கருத்து

இக்காலத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை மாறுபாடுகளை நோக்கில், இங்குக் குறிக்கப்பட்டுள்ள அநேகர் (உயர்ந்தோர்) தாம் பின்பற்றிய மார்க்கங்களில் இப்பொழுது சிறப்புற்று விளங்கார்கள் என்பதற்கு ஸந்தேஹமே இல்லை. உதாரணமாக ஆர்க்ரயிட், ஸ்டீபென்ஸின் ஆகிய இவர்கள் கண்டுபிடித்த புதிய விஷயங்கள் (நெசவுயந்திரம், ரயில்) இக்காலத்தில் சிறப்பாக நோக்கில் மறுபடி ஏற்படக் காரணமே இல்லை. பழம் புத்தகங்களில் வ்யாபாரம் செய்பவன் லாகிங்டனைப் போலவாகக் கனவிலும் கருதமுடியாது. பெரிய ஏற்பாடுகளை ப்ராஸ்ஸியைப்போல எடுத்தாண்டு விளங்கவேண்டுமென்பது ஒருவேளை மிகக் கஷ்டமாயிருக்கும். எப்படி இருப்பினும், இங்கு நாம் நுட்பமாகப் பின்பற்றத்தகுந்த தனி முயற்சிக்கு உதாரணமாக உள்ளவர்களை எடுத்துக்காட்ட வரவில்லை. யதார்த்தமாகப் பார்க்குங்கால், தொழில்கள் விஷயமாக எவ்விதப் பின்பற்றுதலையும் நிராகரிக்கவேண்டும். தமது நிலைகளில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நம் சிறுவர்கள் சீரும் சிறப்பும் வரவேண்டும் என்ற ஆவலுடன் மாத்திரம் நீக்க முயலவேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல. தனக்கு என்ன பலன் கிடைத்தாலும் ஸரி, அது கடவுள் பாரம் என்றுவிட்டு, ஒவ்வொருவனும் தனது சக்திகளைத் தன்னால் கூடியவரையில் பயிற்சிசெய்து அவைகளைச் சிறப்பாக வைத்துக்கொள்ள வேண்டுவது தனதுகடன் ஆதலால் கஷ்டங்கள் நீக்கமுயலவேண்டும் என்று எண்ணவேண்டும். நேர்வழியில் செலுத்தப்படும் முயற்சியால் உண்டாகும் ஆனந்தம் ஒருபுறமிருக்க, மேன்மை அடையவேண்டும் என்ற ஆவல் ஒன்றும் இல்லாமலே, இம்மாதிரியான பயிற்சி ஸாதாரணமாக ஏற்படாது. அடக்கம், நம்பிக்கை இவைகளை உடையவர்களுக்கு ஆனந்தம் ஏற்படாதிருப்பதில்லை. இதனோடுகூட மற்றையவர்களுக்கும் ஆனந்தம் உண்டாகும்படி செய்யும் ஆனந்தமும் சேர்ந்து ஏற்படலாம். தனக்கு கருணையுடன் அளிக்கப்பட்ட சக்திக்கு தகுந்தபடி ஒவ்வொருவனும் இவ்வாறு ஏற்படவேண்டும் என்ற பேராவல் கொண்டிருக்கட்டும்.

---

**சில கெட்ட வழக்கங்கள்.**—ஒரு சங்கத்தில் போய் உட்காரும்பொழுது நமக்குள்ளேயே பாடிக்கொள்ளுதல், கைவிரல்களாலும், கால்களாலும், தாளம் போடுதல், துடை ஆட்டுதல் இவைகளெல்லாம் கெட்ட வழக்கங்களில் சேர்ந்தவைகள். விருந்து முதலியவை நடக்கும் இடங்களில் நாம் சாப்பிடப் போய் உட்கார்ந்தால் எல்லாரையும்விட வேகமாயாவது மெதுவாயாவது சாப்பிடவே கூடாது. இலையில் போட்டிருக்கும் பதார்த்தத்தை முகந்து பார்த்தல் மிகவும் அவலக்ஷணமான குணம். காறுதல், இலையோரங்களில் கோழை உமிழ்தல், வாயுபறிதல் இவை போன்றவைகளெல்லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்களாம்.

இந்து நேசன்.

# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

**விதூஷகன்.**—(இங்குமங்கும் பார்த்து) நண்பா! இங்கு பாரும்! தமது இளங்கழுத்தைச் சற்றே திருப்பி, அசையாத வாய்களிலிருந்து நன்றாக மென்றிடாத தருப்பைப் புல்லின் கபளம் நிறைந்து நெகிழ்ந்து வீழவும், ஒரு காதை சிறிது உயர்த்தி மிக்க ஆநந்தத்தால் கண்களை மூடிக்கொண்டு இம்மான்கூட்டங்கள் என்னதை காது கொடுத்துக்கேட்கின்றன!

**நாயகன்.**—நீ கூறியது நன்று! நண்ப! தமது கழுத்தை ஓசைவரும் பக்கமாகத் திருப்பிக்கொண்டு தமது பற்களினடுவில் பட்ட புல்லை அசைத்தால் எங்கு ஓசை உண்டாகுமோ என்று அதையும்விட்டுவிட்டு என்னவிதமாக ஆழ்ந்து அவ்வினிய இசையை இம்மான்கூட்டங்கள் கேட்கின்றன! மேல்கீழ் ஒலிகள் ஸரிவர பதிந்து, இடைநாதம் கிளம்பி, ஐந்யஇடங்களில் உண்டாகி, ஒலியோடு ஒலி இனிக்க மயங்கி வீணாகானத்தில் மதுவுண்ட தேனீக்களின் இனிய ஓசை கலந்தால்போல ஒலிக்கின்றது இந்தக் கானம்!

**விதூஷகன்.**—இத் தபோவனத்தில் யார், நண்பா, இங்கு பாடிக்கொண்டிருக்கலாம்?

**நாயகன்.**—அந்த யாழைமீட்டிய சிறுவிரலின் ஓசை நன்றாகக்கேட்க முடியவில்லை. ஆனால் காகலீஸ்வரம் ப்ராதனமாக இருப்பதாக எனக்குப் படுகிறது. (விரலால் சுட்டி) இக்கோயிலில் யாராவது தேவகன்னியர் யாழோடு கலந்துபாடிதேவியை ஆராதனம் செய்யலாம்.

**விதூஷகன்.**—அப்படியானால் வா. நாமும் கோயில் பார்ப்போம்.

**நாயகன்.**—நீ சொல்லியது நல்லது. தேவதைகளைப் பூஜிக்க வேண்டியதுதான் (கிட்ட நெருங்கி, ஒல்லென நின்று) நண்பா! ஒருவேளை இம்மங்கையைக் காண்பது தகுதியாயிராது. ஆகையால் இந்தத் தாமலத்தோப்பில் பதுங்கி, பின், கோயில்போகும் ஸமயத்தை எதிர்பார்க்கலாம். (தோப்பில் பதுங்கல்)

(மலையவதி கையில் வீணையோடும், தாதி ஒருவளுடனும், வீணைவாசித்துக் கொண்டுவரல்.)

**நாயகி.**—(பாடுகிறள்)

இதழ்விரி கயலங்கள் மதுசொரிந் தலர்தரு தாதின்றூள்
விதந்தரு வணமுடை உமையென மனன்வரம் அருள்
[வாயே.

**நாயகன்.**—(பாட்டைக்கேட்டு) மித்ரா! ஆஹா! என்ன கானம்! என்ன ஸங்கீதம்! ஸங்கீதமுறைமைக்கமைந்து, விரல்கள் திருந்த பத்திடங்களிலும் பதிந்து, நரம்புகளிலிருந்து இனிய ஸ்வரம் கிளம்பி, நன்றாக ஒலிக்கின்றன. ஜநகராகங்கள் பத்தும் சுத்தமாகவிருக்கின்றன. துரிதம், மத்யம் லம்விதம் என்னும் முக்காலங்களும் நன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. கோபுச்சக முதலிய கால நிலைகளும் வரிசைக்ரமத்தில் அநுபவத்தில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. கீழ் மத்யம் உச்சம் ஆகிய மூவகையிலும் தாளம் விடாது, ஸ்வரம் கலையாது, வீணையின் ஒலியும் கண்டஸ்வரமும் மயங்கி ஒருமிக்கப்பாடுதல் நன்றாகக் காட்டப்பட்டது!

**தாதி.**—(ஆசையுடன்) அம்மா! தாங்கள் நெடுநேரம் வீணை வாசித்தீர்கள். உங்கள் விரல்கள்தான் நோகாதா?

**நாயகி.**—(வெறுப்போடு) ஹா! சாதுரிகை! கௌரியின் முன் வீணை வாசித்தால் விரல்களுக்கெப்படி வருத்த முண்டாகும்?

**தாதி.**—அம்ம! நான் சொல்வதைச் சற்றுக் கவனியுங்கள்! இளந்தளிர்போன்ற ஸ்த்ரீ சரீரத்தால் கடுந்தவம்பூண்டு நெடுநாள் பூஜைசெய்தும் கருணையென்பது சற்றுமில்லாத இப்பாழும் தெய்வமுன் பாடித்தான் என்ன ப்ரயோஜனம்?

**விதூஷகன்.**—மித்ரா! அவள் ஒரு கன்னி—மணமாகாத மகள்—அவளை நாம் என் காணலாகாது?

**நாயகன்.**—தோஷம் என்ன இருக்கிறது! கன்னிகையை நிந்தைக்கிடமின்றிக் கண்டால் தோஷம் இராது. ஆனாலும் இளம் பெண்] ஆகையால் தனக்கு இயற்கையான நாணத்தால் நம்மைக்கண்டால் இங்குந் தங்கி இருக்க விரும்பாள்; நாம் அவளை இந்தத் தாமல வ்ருக்ஷத்தின் பின் நின்று பார்ப்போம். (இருவரும் அவ்வாறே பார்க்கிறார்கள்)

**விதூஷகன்.**—(ஆச்சர்யத்துடன் பார்த்து) பார் நண்பா! அதோ பார்! வீணாகானத்தால் காதை இன்பத்தில் மூழ்குவித்ததுபோல் தனது அழகால் கண்ணையும் ஆநந்தத்தில் மூழ்கச்செய்கிறாள். அவள் யாராய் இருக்கலாம்? தேவியேயோ? நாககன்னியோ? வித்யாதர மடந்தையோ? அல்லது வித்தர் குலத்து உதித்தவளோ?

**நாயகன்.**—(மகிழ்வோடு பார்த்துக்கொண்டு) நண்பா! எனக்கவள் யார் என்று தெரியவில்லை.

தேவ மடந்தையேல் தேவேந் திரன்தன்
கண்களா யிரமுங் கவினுண் டிருக்கும் ;
எண்ணிடு நாக எந்திழை யாயின்
தண்ணிய வொளியின் வெண்பிறை யிலையெனு
கவலை தீர்த்திக் கவின்முக மிதுதான் ;
வித்யா தரியேல் விஞ்சையர் குலந்தான்
மற்றெ வற்றினும் உற்றது பெருமைகாண்;
மற்றிவள் சித்தரின் மகளா யிடிலவர்
மூவுல கினுஞ்சிர் மேவின ரன்றே!

**விதூஷகன்.**—(நாயகனைக் கண்டு ஸந்தோஷத்துடன் தனக்குள்) அத்ருஷ்டம்தான். நெடுநாள் கடந்து இப்பொழுதானடா இவன் மன்மதனுடைய புஷ்பபாணங்களிற்கு இரை ஆனான்! இல்லை. இல்லை—நானே ஒரு கட்டை ப்ராஹ்மணன்தான்.

**தாதி.**—(அன்போடு) சற்று கவனியும்! அரசி! நான் சொல்லவில்லையா! இந்தக் கண்ணில்லாதபாழும் தெய்வமுன் பாடுவதால் என்ன பயன். அதன் மனமுருகவில்லை. கடின நெஞ்சமுடையது. அதன்முன் வீணை வைத்துக்கொண்டும் பஜனையா? (வீணையைப் பிடித்திழுக்கிறாள்.)

**நாயகி.**—(கோபத்தோடு) என்னடி ! அம்பாள் கௌரிக்கு அபராதம் செய்கிறாய். இன்று எனக்கு அம்பாள் அருள்புரியவில்லையா?

**தாதி.**—(ஸந்தோஷத்துடன்) அது என்ன எனக்கு சொல்லுங்கள் அம்மணி!

**நாயகி.**—இது என்க்குத் தெரியும். எனக்கு இன்றைக்குக் கனவில் இந்த வீணையை வாசித்துக் கொண்டிருந்தாற்போல் இருக்கிறது. அப்பொழுது அம்பாள் கௌரி 'குழந்தாய் உன்னுடைய அபாரவீணா ஞானத்திற்கு மகிழ்ந்தேன். மெல்லிய ஸ்த்ரீகள் எவர்களாலும் உன்னைப்போல வாசிக்க முடியாது. உனது உள் மனத்தோடொழுகும் பத்திக்கும் மெச்சினேன். உன்னைச் சீக்ரத்தில் வித்யாதரர் அரசன் கல்யாணம் செய்து கொள்வான்" என்றதாகத் தெரிந்தது. அதுபொய்க்குமா?

**தாதி.**— (ஸந்தோஷத்தோடு) அப்படியா ! என் அதைக் கனவு என்று கூறுகிறாய்? உன்னுடைய மனோபீஷ்டமே அல்லவா தேவி ஈடேறும்படிச் செய்தல்லவா ?

**விதூஷகன்.**—இதுதான் நல்ல ஸமயம். தேவியைப் பார்க்க இதுதான் நல்ல ஸமயம். வா நாம் போவோம்

**நாயகன்.**—நான் வரமாட்டேன்,

**விதூஷகன்.**—(இஷ்டப்படாத நாயகனை இழுத்துக் கொண்டு கோயில் உள் நுழைகிறான் நுழைந்து) வாழிய அரசே ! உனக்கு ஸுகமுண்டாகட்டும் ! சாதுரிகை சொல்லியது நிச்சயம்தான் ! இதோ பார் ! இங்குக் கௌரி அளித்த வரன். இதுதான் பார்.

**நாயகி.**—(கூச்சத்தோடு எழுந்து, நாயகனைச் சுட்டி பக்கத்தில் பார்த்து) தோழீ இ ! யார் அது ?

**தாதி.**—ஸமானமில்லாத அவர் ரூபத்தைப் பார்த்தால் அவர்தான் அம்பாள் உனக்களித்த வரனாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

(நாயகி நாணத்தோடு பார்ச்வமாக கடைக்கண்ணால் நாயகனை அன்போடு பார்க்கிறாள்)

**நாயகன்.**—

காணுங் கண்டுணை கம்பிக்க வார்குயம்
நாணும் நடுங்கு முயிர்ப்பின்மெய்ந் நைந்திட
கோணில் மெய்த்தவங் கொண்டின்னம் நைவதென்
யாண ரென்முகங் கண்ணுற்ற தாலரோ !

**நாயகி.**—(பிறரறியாது) தோழீ! எனக்கு இங்கு எதிரில் இருக்க லஜ்ஜையாகின்றது. என்னால் முடியவில்லை—(நாயகனை வெட்கத்தோடு கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டு சற்று முகத்தைத்திருப்பினாற்போல நிற்கிறாள்)

**தாதி.**—நாயகி ! இது என்ன இது ?

**நாயகி.**—இவர் அருகு இருக்க என்னால் முடியவில்லை. நாம் இதைவிட்டு போகலாம் வா. (எழுந்திருக்க விரும்புகிறாள்.)

**விதூஷகன்.**—நண்பா ! இவள் உன்முன் நிற்க லஜ்ஜைப்படுகிறாள். நான் பூர்வம் படித்த வித்தையின் பலத்தால் இவளை இவ்விடமே சிலகாலம் இருக்கும்படிச் செய்வேன்—(யோசித்து) அம்மணீ ! இது உமக்கு அடுக்குமா? ஆச்ரம ஒழுக்கத்திற்குப் பொருந்துமா? நல்லது ! உம்மிடம்வந்த அதிதியோடு வார்த்தையால்கூட வரவு கேழ்க்காமலிருப்பது நன்று!! இதுதானா உமது வழக்கம் ?

**தாதி.**—(தனது நாயகியைப்பார்த்து—தனக்குள) அவள் பார்வைமுழுதும் இங்கே லயித்து ஆனந்தமடைகிறது. இவ்வாறு பேசுவேன்—(வெளிப்படையாக) அரசி! ஐயர் சொன்னது ஸரிதான். அதிதிக்கு நல்வரவு கூறவேண்டியது உன் கடமைதான். இப்பெரியவரிடத்தில் நீ செய்யவேண்டிய தர்மத்தை அறியாது ஏன் நிற்கிறாய்?

(தொடரும்.)

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

**CHILDREN'S PAGES**

### உண்மை உயர்வு
### அல்லது
### வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS
RO
VASUDEVA SASTRI

### அத்தியாயம் 2
### ஸத்காலக்ஷேபம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ; —நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

இப்பொழுது வேறோர் இடம் போகிறோம். ஸாதாரணமாயும்தாழ்ந்த கூரை உடையதாயும் சிற்சில இடங்களில் இடிந்து விழுந்துகொண்டிருப்பதாயும் உள்ள ஒரு வீட்டின் புகுந்து பார்ப்போம். அஜாக்ரதையாகக் குனியாமற் சென்றால் வாயில் நிலை படீர் என்று மண்டையில் இடித்துவிடும். அதுஅவ்வளவு தாழ்ந்து இருக்கிறது. கதவு திறந்தவண்ணமாகவே இருக்கிறது. உள்ளே பார்த்துவிட்டால் நுழையவே நமக்குப் பிடிக்காது. ஆயினும் உள்ளே புகுந்துவிட்டதால் முதலில் வாயிற்றிண்ணை ரேழிமுதலியவைகளைத்தாண்டுவோம். பின்னர் ஒரு கூடத்துள் புகும்படி நேரிடும். அது தான் சாப்பிடுவதற்கும், சிலர் கூடிப் பேசிக்கொண்டிருப்பதற்கும் தகுந்த விடமாக இருந்தது. அந்தக் கூடத்தில் ஸூர்ய சந்திரர்கள் மழை ஆகிய இவைகள் தாராளமாக வாஸம்செய்ய இடமிருந்தது. பார்வைக்கு அது ஓர் குடிசைபோல பஞ்சையாக விருந்தது. அங்கு உட்காருவதற்கு இரண்டொரு பலகைகள் தவிர வேறுஒருவித ஸாமான்களும் காணப்படாது. ஒரு மூலையில் சில பாத்திரங்கள் ஒழுங்காக வைக்கப்டிருந்தன. மற்றொரு புறத்தில் ஓர் சந்தணக்கல்லும், அருகாமையில் தெய்வபூஜை வைத்திருந்த ஓர் அலமாரியும் இருந்தன. இந்தக் கூடத்தில் எதிரும்புதிருமாக இரண்டு அறைகள் அமைந்திருந்தன. ஒன்று சமையல் அறை ; மற்றொன்று பாவுள், அதில் ஒன்றின்மேல் ஒன்றாக அநேகம் பானைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவைகளுள் வீட்டு ஸாமான்கள் இருந்தன. முற்கூறிய கூடத்தின் மத்தியில் சிலர் உட்கார்ந்துகொண்டு ஸத்காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்தனர்.

இவர்களில் ஒரு ஸ்திரீ 'ஒருவன் வெறும்பட்டப் பெயர்களை எண்ணி எண்ணி மகிழ்ந்து பித்துப் பிடித்தவன் போலாய் விடக்கூடாது. வீண் கர்வப்படவே கூடாது' என்று நான் எவ்வளவு சொல்லியும் அவர் என்மேல் அடங்காக் கோபம் கொண்டார். அகங்காரத்திற்கு அப்பாற்பட்டு நிற்றல் அருமை! அருமை!' என்று மிகுந்த ஆவலுடன் கூறினள்.

'மிகக்கஷ்டம் வீதே!'என்றார் மற்றொருவர். 'இந்தக் கஷ்டம் பிரபஞ்சத்தில் எல்லோருக்கும் உண்டு.

"முன்னொரு காலத்தில் வியாஸபகவான் குருக்ஷேத்ரம் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் காலடிச்சத்தத்தைக்கேட்டு வழியிலிருந்த புழுவொன்று பயந்து வெகு வேகமாக நகர்ந்து ஒதுங்கிப்போயிற்று. இதைக் கண்டவுடன், ' நாம் இந்த ஜந்துவை ஒரு பொருட்டாக மதிக்கிறதில்லை. இது எவ்வளவு அல்பமாக நமக்குப்பட்டபோதிலும், இதற்கும் இதன் உயிர் வெல்லமாகவே தான் இருக்கிறது ! என்ன ஆச்சர்யம்! பகவத் ஸ்ருஷ்டியின் மஹிமையே மஹிமை ! ' என்று வியாஸர் வியந்து, தமது ஞானதிருஷ்டியால் அந்த ஜந்து யார் என்று உற்றுநோக்கினர். அத்யாச்சர்யம் ! மஹானுகிய நாரதரே அந்த ஜன்மம் அடைந்திருந்ததைக் கண்டார்! அப்பொழுது அந்தப் புழுவை நோக்கி, ' ஓ நாரத பகவானே ! உமக்கு என் இந்தத் தாழ்ந்த ஜன்மம் வந்தது? இந்த நிலையை அடைந்த பின்பும் உமக்கு என் இந்த ஜன்மத்தைக் காப்பாற்ற வேண்டும், என்ற துர்ஆசை உண்டாயிருக்கிறது?' என்று கேட்டார். அதற்கு அந்தப் புழு, ' ஓ வ்யாஸ பகவானே, ஒரு பாபம் செய்து நான் இந்த நிலைக்கு வந்து விட்டேன். பகவத் மாயையின் சக்தியை என்னென்று சொல்லுவேன் ! இந்த ஜன்மத்திலிருந்த போதிலும், என்னைப்பற்றி எனக்குச் சிறந்த அபிப்பிராயம்தான். என் ஸுக துக்கங்களே எனக்குப் பெரிதாகிவிட்டன. உம்முடைய திருஷ்டிக்கு நான் மிகத் தாழ்ந்ததாகத் தோற்றிய போதிலும், எனக்கு என்னைப்பற்றி அம்மாதிரியானஎண்ணமே கிடையாது. இதனுல்தான் என் உயிர் எனக்கு வெல்லமாயிருக்கிறது' என்றது. ' இம்மாதிரி ஒருபுழு தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் மனிதராகிய நம்மிடம்

அகங்காரம் குடிகொண்டிருப்பது ஓர் ஆச்சரியமா? அணுமுதல் அண்டங்கள் பரியந்தம், பிரபஞ்சத்தில் உள்ள வஸ்துக்களிலும் இந்த அகங்காரம் இருந்து கொண்டுதான் தொழிற்படுத்துகின்றது. இந்த அகங்காரம் தான் பிரபஞ்ச வ்யாபாரம் எல்லாவற்றிற்கும் காரணம். இந்த அகங்காரம் எவ்வித தந்திரத்தாலாகிலும் இந்தப் பிரபஞ்சத்தைவிட்டு நீக்கப்பட்டால், இதன் உண்மை உருவாம் பரம்பொருள் மாத்திரம் தான் தனித்து நிற்கும். இம்மூடமான அகங்காரத்தை அடக்கி அப்பாற்பட்டு நிற்றல் நம்மவருள் அநேகருக்கு முடியாது. ஆதலால் தான் பத்திரகிரியாரும்:—

‘ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்’

என்று கதறியிருக்கிறார்.”

என்று அவர் அமிருதவருஷமாக வருஷித்தார். இதைக் கேட்டதும் அவர்களுள் பேராவல் கொண்ட ஒரு சிறு பெண் “ஆஹா! என்ன அழகு! என்ன அற்புதம்! மாமா! நாம் எங்கள் கணவரை நேசிப்பதும், குழந்தைகளை வளர்ப்பதும், இரந்தோர்க்கு ஈவதும் இன்னும் நாம் செய்யும் மற்றைய ஸத்கர்மங்கள் எல்லாம் இந்த அகங்காரத்தைச் சுட்டறுக்கத்தானே ஏற்பட்டவை? என்ன ஆச்சர்யம்! கண்டுகொண்டேன் தெரிந்து விட்டது’ என்று கூறி ஆனந்த பரவசையானாள்.

இப்பொழுது இவர்கள் இன்னார் என்பதை நான் கூறிவிட வேண்டும்; இல்லாவிடில் கதை ஒழுங்குகள்படி வாசிப்போருக்கு இவர்கள் ஸத்காலக்ஷேபம் ருசிக்காமல் போய்விடலாம். இதுவரையில் இவ்வாறு செய்யாததற்கு மன்னிக்கவேண்டும். முதல் பேசியவள் இன்னாள் என்பது உங்களுக்கு முன்னரே தெரியும். அவள்தான் வீதாலக்ஷ்மி அம்மாள். ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் நாராயணய்யர் அவர்கள் ஸீ. ஐ. இ. உடைய ஸம்ஸாரம். திவ்ய தேஜஸ்ஸோடும் பரபரப்போடும் கடைசியில் பேசியவள் வீதாலக்ஷ்மி பெண்; அவளுக்கு ருக்மிணி என்று பெயர். நடுவிற் பேசியவர் வாஸுதேவ சாஸ்திரியைத் தவிர வேறொருவருமன்று; அவர்தான் நமது கதாநாயகர். அவருக்குத்தான் முன்னாளிரவில் மஹாகனம் திவான்பஹதூர் அவர்கள் மிக மரியாதையாகப் பட்டங்கட்டி மகுடாபிஷேகம் செய்தது.

கதை சொல்லுவோர் வழக்கப்படி அவரை வர்ணிக்கப் புகுவோம். அவர் நல்ல யுவா, நல்ல சிவப்பு. அவர் அங்கங்கள் மிக ஒழுங்காகவும் பார்வைக்கு மிக லக்ஷணமாகவும் அமைந்திருந்தன. அவர் முக உல்லாஸமே அவரிடம் இருந்த சிறந்த விஷயம். அவர் முகத்தில் ஒருவித சாந்தமும் மேன்மையும் சேர்ந்து காணப்பட்டன. இதுவுமல்லாமல் அதில் ஒருவித மிருதுத்துவம், ஸௌகம், பூர்ணமாக மலர்ந்த தாமரையைப் போன்ற வரம்புகிடந்த ஆனந்தம் ஆகிய இவைகள் ஜ்வலித்தன. ஓர் ரிஷிக்குக்கூட இம்மாதிரி திவ்யதேஜஸ் அமைந்த முகம் வாய்த்திராது. அவர் கண்களில் ஒருவித திவ்யமான ஸத்வகுணம் காணப்பட்டது, அவைகளில் அடங்கி இருந்த அற்புத சக்தியால் தூர்வாஸர் கோபம்கூட சாந்தமாகிவிடும் என்று சொல்லலாம். இக்கண்களின் சிறப்பு விட்டுவிட்டு மின்னல்போலப் பிரகாசித்து ஒடுங்குவதல்ல. அவைகள் அவர் மனத்தில் குடிகொண்டிருக்கும் ஸத்வம், அன்பு, அமைதி ஆகிய இவைகளை இடைவிடாது ஸதா வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. அவைகள் தேஜஸ் மழுங்குவதே இல்லை; காலதேச பேதங்கள் அதைத் தாக்கச் சக்தியற்றவையாயிருந்தன. அவைகள் தேவலோக மலராகிய வாடா கற்பகங்கள் போலப் பிரகாசித்தன. அவைகள் பார்க்கும்பொழுது வெளியே விசித்ரமாகக் காணப்படும் பிரபஞ்ச பேதத்தைக் காண்பதாகத் தோற்றவில்லை. இவைகளுள் மறைந்துகிடந்து இவைகளைப் பொருத்தும் ஏகவஸ்துவை ஓர் திவ்ய அப்யாஸத்தால் காணும் திறன் வாய்ந்தவைபோல அவைகள் காணப்பட்டன. பாலைப் பார்க்குங்கால் மனத்திற்கு எவ்வளவு திருப்தி உண்டாகுமோ அவ்வளவு திருப்தி அவர் கண்களைக் காணுங்கால் நமக்கு ஏற்படும். அவர் நம்மைப் பார்த்துவிட்டால் கேட்கவேண்டியதே இல்லை. அற்புதமாயும் பரிசுத்தமாயும் உள்ள அவர் திருஷ்டி தம்மேல் தாக்கப்பெற கொடுத்துவைக்க வேண்டுமே என்ற ஆசை ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும் இருந்தது. அவர் ஆனந்தம் எந்த வெளி வஸ்துவிலும் ஸம்பந்தப்பட்டதாகக் காணப்படவில்லை. ஸௌகதுக்கங்களால் அவருக்குப் பரபரப்பு ஏற்பட்டதாக ஒருவருக்குத் தெரியாது. கோபம் அவரை அணுகாது என்று சொல்லவும் வேண்டுமா! அவரை கோபம் மூட்டுவதே சில பள்ளிப்பிள்ளைகளுக்கு விளையாட்டாக விருந்தது. தான் தனது என்ற இருவித மனோநிலைகள் அவரிடம் லவலேசமேனும் இருப்பதாகக் காணப்படவில்லை. அவர் நடவடிக்கைகள் எல்லாம் அவர், அன்பு, அடக்கம் இவைகளையே வெளிப்படுத்தின. அவர் பரம ஏழை. தம் வீட்டில் பூஜை செய்து வருவதற்கு நாராயணய்யர்

கொடுத்து வந்த அற்பச் சம்பளமே அவர் வரும்படி. ஆனல் பணக்காரர்களைவிட இவரிடம் எல்லோருக்கும் மதிப்பு அதிகம். குழந்தைகளுக்கு எல்லாம் இவரிடம் அதிக ப்ரீதி; சில இவர்மேல் தொத்திஏறும், சில இவர் தோள்மேல் ஏறித் தாண்டவமாடும், சில தலைமயிரை பிடித்திழுக்கும், சில இவருக்கு லகான்கட்டி மேலே ஏறிக்கொண்டு மாடு ஓட்டுவதுபோல ஓட்டும்; சில இவர் முதுகின்மேல் சேணம்போலத் துணிகளைப் போட்டு ஏறி ஸவாரிசெய்யும். அவஸர வேலையாகப் போகுங்கால் தாய்மார்கள் இவரிடம் தமது சிறு குழந்தைகளைவிட்டுப் போவது உண்டு. இவர் அவைகளை ஸாவதானமாகத் தூங்கவைப்பார். சிற்சில ஸமயங்களில் பாட்டுப்பாடி அவைகளை ஸந்தோஷப்படுத்துவார்.

ராமா க்ருஷ்ண கோவிந்தா
எனினும் எனைத்தான் அழைக்கின்ருய்
ஈசா சம்போ மாதேவா
எனினும் எனைத்தான் அழைக்கின்ருய்
ஆமா ருலகனைத் தனையும்
அரசாள்பவனும் நானே காண்
ஆண்டானும் நான் அடிமை நான்
அல்லால் வேறென்றில்லாதே.

அவைகளுள் இது ஒன்று. கடைசி வரி பாடுங்கால் எளிதாகத் தாளத்திற்கு ஒத்து வருவதால் குழந்தைகளது சுத்தமான ஆனந்தத்தை அதிகப்படுத்தும்.

கிழவி குப்பிப்பாட்டி சாஸ்திரி வீட்டின் வழியாகப் போகும்பொழுதெல்லாம் 'அப்பா தர்மராஜா' என்று மனதார வாழ்த்தாது போவதில்லை. கிருஷ்ணன் என்ற பையன் தன் அற்புத ஸமாசாரங்களை இவரிடம் முற்றிலும் கூருது தன் வீடு போவதில்லை—கோவிலுக்கு வெள்ளை யானை கொண்டுவரப் போகிருர்கள்! தன் கற்பலகையில் ஓர் வெள்ளைக்காக்கை தூங்கிக்கொண்டிருந்தது! தான் தூங்குங்கால் நாய் குலைப்பதே இல்லை! சனிக்கிழமையன்று மழையேபெய்யாது! தன் வீட்டுக்கொல்லையில் ஒரு பெரும் புலி இருக்கிறது! என்று இவைபோன்ற மனம்போன போக்கே அற்புத ஸங்கதிகளை கிருஷ்ணன் சாஸ்திரிகளிடம் சொல்வது உண்டு. வேலையை விட்டு ஒழிவு பெற்றதாசில்தார்ஸுப்ரஹ்மணியய்யர் அவர்கள் இவரிடம்வந்தால் நலமாக இருக்கும் என்றுஎண்ணுவதுண்டு. ஆனல் இவர் ஓயாது வேதாந்தத்தைப்பற்றியே வசனித்ததாலும், வம்புப்பேச்சுபேசத் திறனில்லாதிருந்தாலும், தன் எண்ணப்படி தாசில்தாருக்குநடக்கமுடியாமல் போய்விட்டது. வேதாந்தம் தமக்குத் தெரியு என்ற எண்ணங்கொண்ட மதுரை முனிசிப் விசுவநாதய்யர் அவர்கள் தினம் ஒரு முறை சாஸ்திரியாரிடம் வருவார். மதுரை ஸப்ஜட்ஜி வீட்டுத்தூப்புக்காரி அங்கி என்பவள் சாஸ்திரியாரைக் காணும்பொழுதெல்லாம் 'பணத்தால் என்ன குணம்? பணம் சண்டை சச்சரவு மனஸ்தாபங்களுக்கே காரணமாகும். சாஸ்திரியாரைப் பார்! அவர்பஞ்சையாய்த்தவிக்குங்காலத்தும் எவ்வளவு திருப்தியுடன் இருக்கிருர்!' என்று வைராக்கியம் கூறி ஆனந்திக்காது போகவேமாட்டாள். பள்ளிக்கூடம் உபாத்யாயர் ராமஸ்வாமி அய்யருக்கு உலகம் முழுவதும் கெட்டது என்ற திட நம்பிக்கை இருந்தபோதிலும், 'வாஸ்து மாத்திரம் தப்பிப் பிறந்தவன். ஒருவேளை ஸ்வர்க்கத்திலிருந்து தவறி வந்தான்போலும், ஆதலால் தான் அவன் ஏழையா யிருக்கிருன்' என்று அபிப்ராயப் படுவார். வாய் ஓயாது நாள் முழுவதும் பொய்யுரைக்கும் தன்மை வாய்ந்த வக்கீல் ஸுந்தரய்யர் சாஸ்த்ரியைக் கண்டால் பொய் சொல்ல நா எழவில்லை என்று ஒப்புக்கொள்வார். தியஸாபிகல் ஸங்கத்தின் அங்கத்தினரும் நீண்ட தாடி உடையவருமான ஸப்ரிஜிஸ்ட்ரார் முத்து அய்யர் சாஸ்திரியாரைக் கண்டதும், 'இவர் ஓர் பெரிய ஸ்வாமிகள், மஹாபரிசுத்தர்' என்று கூறி அகம் மகிழ்வார். எப்படியாயினும் சாஸ்த்ரிகள் வாசிப்போருக்கு இன்னர் என்று இதற்குள் தெரிந்திருக்கும். இனி அவர் விஷயங்களைக் கவனித்து அவருடன் பழகுவதா வேண்டாமா என்பதை வாசிப்போரே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

கதையை விட்ட விடத்தில் தொடங்குவோம். ருக்மிணி கேள்வியைக்கேட்டதும் சாஸ்திரியார் அவளை நோக்கி 'ஆம் குழந்தாய்! நீ சொல்வது முற்றிலும் உண்மையே! நாம் அன்பு பாராட்டுங்கால் நமது அகங்கார மமகாரங்களை அதனுள் முழுத்தித் தொலைக்க வேண்டும். ஏழைகளைக் காத்தல் முதலிய ஸத்கர்மங்கள் செய்யுங்கால் அவைகளில் ஸம்பந்தமாக ஏற்படக்கூடிய கர்வம் என்னும் படுகுழியில் விழுந்து விடக்கூடாது. இந்தக் காலங்களில் நாம் வெறும் கருவிகளே ஒழிய கர்த்தாவே அல்ல என்ற எண்ணம் திடமாக இருக்கவேண்டும்.

"ஓர் ஊரில் ஒருத்தி தோசைவார்த்து விற்று ஜீவனம் செய்துவந்தாள். அவள் தினம் தவருது ஸூர்ய உதயத்திற்கு இரண்டு நாழிகைக்குமுன் எழுந்து தனது தொழிலைத் தொடங்குவது வழக்கம். அவளி

டம் ஒரு கோழி இருந்தது. அதுதவருது உதயத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன் கூவி அவளை எழுப்பும். கோழி தினம் கூவப் பின் பொழுது விடிந்து வந்ததைக் கண்ணுற்ற அவளுக்கு நாளடைவில் கோழி கூவாவிட்டால் பொழுது விடியாது என்ற நம்பிக்கை வந்துவிட்டது. இப்படி இருக்கையில் அந்த ஊரில் சில சிறுவர்கள் இந்தக் கிழவியைப் பரிஹாஸம் பண்ண, இவளுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. ' பார்! இந்தப் பயல்களுக்குச் சொல்லுகிறேன் வழி! என் சக்தி இவ்வளவென்று இவர்களுக்குக் காட்டி விடுகிறேன்! நான் கோழியைக்கொண்டு அடுத்த கிராமம் போய்விடுகிறேன்! இங்கு எப்படிப் பொழுது விடியும் பார்ப்போம்? இந்தப் பயல்கள் விடியா இரவில் அழுந்தி வருந்தட்டும்' என்று முறுமுறுத்துக்கொண்டு, அன்றிரவே அடுத்த கிராமம் போய்விட்டாள். மறுநாள் சிலர் முதல் கிராமத்திலிருந்து இரண்டாம் கிராமத்திற்குவர, தோசைவிற்கும் கிழவி அவர்களை நோக்கி, 'என்னைக் கோபமூட்டாது வைத்துக்கொண்டிருந்தீர்களாகில், இந்தக் கஷ்டம் உங்களுக்கு வந்திராதே! ஐயோ, பாவம்! உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது, நீங்கள் விடியா இரவில் அகப்பட்டுக்கொண்டீர்களே!' என்ருள். அவர்களுக்கு விஷயம் ஒன்றும் விளங்காமற்போக, விழித்தார்கள். அப்பொழுது இவள் தன் கதையை ஆதியோடந்தம் ஸவிஸ்தாரமாகச்சொல்லி, 'நான் என்னுடைய கோழியைக்கொண்டு இங்குவந்து விட்டேன்! ஆகையால் அங்கு எப்படி பொழுது விடிந்திருக்கும்?' என்று மிகுந்த கம்பீரமாக முடித்தாள். இந்தக் கிழவியினது மூடத்தனத்தையும், கர்வத்தையும், அகங்காரத்தையும் கண்டு வந்தவர்கள் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள்.

" இம்மாதிரிதான் நாமும் அகங்காரம், கர்வம் முதலியவற்றிற்கு ஆளாவது. நாம் உபகாரம் செய்யும் குணம் உள்ளவர்களாயின், நாம் இல்லாவிடில் ஏழைகள் பிழைக்கமாட்டார்கள் என்ற கர்வம் நம்மை அறியாது நம்மை வந்து மூடிக்கொள்ளும். நாம் அஜாக்ரதையாகஇருந்து அதற்கு இடங்கொடுத்துவிட்டால் நம்மை நன்ருக அது கீழ்ப்படுத்திவிட, தோசைக்காரியின் மூடநிலைக்கு வந்துவிடுவோம். இந்தஸமயங்களில்'கிருஷ்ண பரமாத்மா முதலிய பகவத் அவதாரங்கள்கூட உலகை விட்டுப்போனபின்பும், உலகம் முன்போல நடந்துவரவில்லையா ? இப்படியிருக்க நாம் எந்த மூலை?' என்றிப்படி மனனம் செய்துவந்தால் தோசைக்கிழவியாகிவிடாமல் நாம் கடைத்தேறலாம்.'என்று சாஸ்திரி மொழிந்துவிட்டார்.

அருகிலிருந்த பாட்டி ஒருத்தி அவரை நோக்கி, இந்த நாமரூபங்களில் என்ன இருக்கிறது? இதை என்ன இவ்வளவு பிரமாதமாகக் கூறுகிறீர்களே?' என்ருள்.

'அதென்ன அப்படிச் சொல்லுகிருய்? பிரபஞ்சம் முழுவதும் இவைதானே. இவைகளில் அகப்பட்டுத்தானே நாம் எல்லோரும் மோசம் போய்——'என்று சாஸ்திரி கூறி முடிக்குமுன் உள்ளே ஓர் அம்மாள் தடபடலாக ஒடிவந்தாள்.

வந்தவள் உள்ளே பேசிக்கொண்டிருந்தவர்களைக் கண்டாள்! 'நாசமாய்ப்போக! வேதாந்தக்கடை என் வீட்டிலும் பரப்பிவிட்டீர்களா! நான் பஞ்சையாகிப் பாப்பதும், என் குடும்பம் சீர்குலைந்துபோனதும் ஆச்சர்யமேயன்று! ராக்ஷஸிகளா! நீங்கள் நாசமாய்ப்போக, உங்கள் வீட்டில் வேதாந்தம் விழாதா! நீங்களும் என்னைப்போலாகமாட்டீர்களா! என்று இந்தக் கொடிய வேதாந்தம் உங்கள் வீட்டுள் புகுந்து கலக்கி உங்களை நடுச்சந்தி சிரிக்க அலையவிடுமோ? அறியேன்! நீங்களா! என் வீட்டில் வந்து வேதாந்தக்கடையைப் பரப்புகிறது!' என்று ஆவேசம் பிடித்தவள்போலக் கதறினள்.

ஆகாயத்திலே அதிக உயரத்தில் சஞ்சரிக்கின்ற "ஹோமா" என்ற ஜாதியைச்சேர்ந்த பக்ஷிகள் அவ்வுயரமான பிரதேசங்களையே அதிக ஆசையோடு நேசித்து வருவதால் கீழே இறங்கி பூமிக்கு வரவேண்டுமென்னும் கருத்தே அவைகளுக்குக் கிடையாது. அவைகள் ஆகாயத்திலேயே முட்டையிடுவதால் அம்முட்டைகள் பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பெற்றுக் கீழே விழுந்துகொண்டிருக்கையிலேயே நடுவில் குஞ்சு பொறித்துக் குஞ்சுகளை வெளிப்படுத்துகின்றன. வெளியே வந்த குஞ்சுகள் தாங்கள் கீழே விழுந்து கொண்டிருப்பதை உடனே தெரிந்துகொண்டு, தங்களுக்கு இருப்பிடம் ஆகாயமென்பதை இயற்கையறிவாலுணர்ந்து தாங்கள் செல்லும் கதியை உடனே மாற்றி மேல்நோக்கிப் பறக்க ஆரம்பிக்கின்றன. அவ்வாறே சுகதேவர், நாரதர், சங்கராசாரியர், இயேசு முதலிய மகான்கள் இன்மையிலேயே இவ்வுலகப்பற்றை யறுத்து உன்னத பிரதேசங்களாகிய மெய்யறிவையும் திருவருட்பிரகாசத்தையும் நாடிச்செல்லுகின்றனர்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### 2. துயரொழிந்தகாதை

*நாளை வதுவை மணமென்று நாளிட்டு*
*பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்*
*கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்*
*காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.*

*　　*　　*　　*

*　　*　　*　　*

*மதுரை யார்மன்ன னடிநிலை தொட்டெங்கும்*
*அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.*

—நாச்சியார் திருமொழி

ப்ராஹ்மணன் கூறியது முற்றும் கண்ணன் காதில் நன்றாக விழுந்தது. மிகுந்த ஆவலோடு கேட்டார். ப்ராஹ்மணன் "ஸமாசாரம் இது. நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யும்" என்றார்.

ப்ராஹ்மணரது இருகரங்களைத்தன்கைக்குள் லாகவமாக வைத்துக்கொண்டு பரந்தாமன் ஸ்ரீவாஸுதேவன் கூறுகிறார் :—

"அதே மாதிரியாக என்மனமும் அவள்பால் அன்பு கொள்கிறது. எனக்கு இரவிலும் நித்ரையுங் கிடையாது. ருக்மி, என்னிடம் பகையினால் அவள் என்னைக் கல்யாணம் செய்துகொள்வதைத் தடுக்கிறான். வன்னி மரத்தைக்கடைந்து அதனிடம் நெருப்பை எடுத்தல்போல ருக்மியைக்கொன்று அவனிடமிருக்கும் ருக்மணியைக்கவர்வேன்". 'நாளைதான் கல்யாணதினம்' என்று ப்ராஹ்மணன் கூறக்கேட்டு மதுஸூதனன் தனது தேராளைக் கூப்பிடும்படிச் சொன்னார். சைவ்யம், ஸுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹகம், என்னும் நான்கு குதிரைகள்பூட்டிய தேரைக் கடத்திக்கொண்டு தாருகன் கைபொத்தி வாய்பொத்தி எதிரில் வந்து நின்றான். தேர்மேல் ப்ராஹ்மணரை ஏற்றி, தானும் இவர்ந்து ஸ்ரீ வாஸுதேவன் ருக்மணி பிராட்டியாரைக் காணச் சென்றார்.

விதர்ப்ப நாட்டின் முக்கிய பட்டணம் குண்டினபுரம். புரமெங்கும் தலைவாசல்களிலும், ராஜவீதிகள், நாற்சந்திகளில் மகா தோரணங்கள், கொடிகள், பூரணகும்பங்கள் நிறைந்திருக்கின்றன. தெருவெங்கும் நூதன வஸ்த்ரம் தரித்த பெண், ஆண், பெரியோர், சிறியோர் அடங்கலும் அகில் கட்டைகளை நெருப்பிலிட்டு நல்ல வாஸனைவீசும்படிச்செய்துகொண்டிருக்கிறார்கள். ஸூரியன்போல் ஜ்வலிக்கும் மாளிகைகளின்மேல் நல்வரவை காட்டிய ஸூசனைகளும் பொற்கலசங்களும் நிறைந்திருக்கின்றன. ஜனங்கள் வீசியெறிந்து நிறைந்த புஷ்பப்பொடிக் காற்றில் பரந்து வாஸனை வீசிக்கொண்டிருக்கின்றது. வீதிமுழுதும் நீர் தெளித்து சுத்தமாக இருக்கின்றது.

இவ்வாறு குண்டினபுரம் கோலாஹலமாகத் திருவிழாக் கொண்டாடினாற்போல விளங்காநின்றது.

அரசன் பீஷ்மகனும் தனது பெண் கல்யாணத்திற்காகப் பிதிர்ப்ரீதி, தெய்வாராதனம், ப்ராஹ்மண பூஜை முதலானவைகள் எல்லாம் செய்து, தன் குழந்தைக்கு ஆசிர்வாதம் செய்யும்படிச் செய்தான். தன் பெண்ணிற்கு இரண்டு புதிய சேலை வாங்கிக்கொடுத்து அதை உடுக்கச்செய்தான். அநேக திவ்ய ஆபரணங்களை அணியச்செய்தான். அவளும் தானும் ஸ்நாநம் செய்து காப்புக்கொண்டார்கள். ப்ராஹ்மண ச்ரேஷ்டர் ரிக், யஜுர், ஸாம வேதங்களின் மந்த்ரங்களால் ஆசி கூறினார்கள். அதர்வணவேத பாரங்கதர்கள் க்ருஹங்களின் ப்ரீதிக்காக ஹோமஞ்செய்தனர். ஒழுக்கமுழுது ஒழுக அறிந்த அரசனும் ப்ராஹ்மணர்களுக்கு பொன், வெள்ளி, வஸ்த்ரம் முதலிய யாவும் பசுக்களோடும், எள்ளினோடும் தானஞ்செய்தான்.

சேதிகர்க்கரசன், தாமகோஷனும், மந்த்ரங்களறிந்த பெரியோர்களைக்கொண்டு தன் மகன் சுபத்திற்காக செய்யவேண்டிய கர்மங்களை எல்லாம் செய்தான். மதஞ்சொரியும் யானைகளோடும், பொன்னால் பூ நிறைந்த தேர்களோடும், குதிரைப்படை, காலப்படையோடும் அவன் குண்டினபுரத்திற்கு வந்தான். வந்ததும் விதர்ப்பநாட்டரசன் அவர்க்குத் தக்க வடுதிவிடுவித்தான். சால்வன், ஜராஸந்தன், தந்தாவக்ரன், விதூரதன், பௌண்ட்ரகன் இவரன்றி பல்லாயிரம்பேர் சேதி நகரசனோடு சேர்ந்தவர்களும் வந்தார்கள். ஸ்ரீக்ருஷ்ண பகவான் பலராமன் கீழ்யது ச்ரேஷ்ட்டர்களோடு வந்து எங்கு ருக்மணியைக் கவர்ந்து சென்றுவிடுவானோ என்று க்ருஷ்ணனுக்கு எதிரியான அரசர்கள் எல்லாரோடும் அவர் அவ்வாறு செய்தால் எதிர்க்கத் தயாராக இருக்கவேண்டுமென்று சிசுபாலன் க்ருஷ்ணனுடைய ாதிரிகளை எல்லாம் அவருடைய சேனையோடு வரவழைத்திருந்தான். பலராமர் இதை எல்லாமுணர்ந்து, தன் தம்பியும் ஸ்ரீ ருக்மணியை எடுத்துவர செல்கிறான்

என்பதையும் அறிந்து, தனது இளையவன்பால் ஆசையால் பெருஞ்சேனையோடு குண்டினபுரம் அடைந்து எதிரிகளைத் தடுக்கத் தயாராக இருந்தார்.

இது நிற்க பீஷ்மன் மகள் ஸ்ரீஹரியின் வரவை எதிர்பார்த்தவளாகி, தன் தூதன் ப்ராஹ்மணன் வராததைக்கண்டு கீழ்வருமாறு எண்ணலானாள்:—

“ அந்தோ! இந்தப்பாழும் இரவு கழிந்ததும் இப்பாழானவளது . கல்யாணம் ஆய்விடும். செந்தாமரைக்கண்ணன் இன்னம் வரக் காண்கிலேன்; காரணமும் அறியேன். தூதனாகிய அந்த த்விஜோத்தமனும் வரவில்லை. வருவதாய் இருந்தாலும் அழகன், அக்கண்ணன், என்முன்னிடம் ஸ்வபாத்தைக் கண்டு வரமாட்டார். பரமசிவம் என்மேல் அருள்புரியவில்லை—யான் துர்அத்ருஷ்டமுடையவள்—என்பால் மலையரசன் மகள், கற்பிற்சிறந்த கௌரியும் அருள்கொள்ளவில்லை ”

இவ்வாறு சிந்தாக்ராந்தையாய் தன்னுள்ளம் க்ருஷ்ணனால் கொள்ளை கொள்ளப்பட்ட மடந்தை கோவிந்தனையே நினைத்து நினைத்து, தன் கதியையும் நினைத்து நினைத்து, கண்ணீர் ஒழுக ஒழுக, காலம், நல்ல காலம், தனக்கு வரவில்லை என்று எண்ணி, நீர்த்தளும்ப தன் கண்களைத் திறந்தாள். அவள் இடக்கண், இடது தோள் எல்லாம் துடித்தன. ஸ்ரீக்ருஷ்ணனது ஆணையால் ப்ராஹ்மணனும் ருக்மணிப்பிராட்டியாரிடம்வந்தான். அவன் முகம் கிளைத்து, அமைதியோடிருப்பதைக் கண்டு பிராட்டியாரும் சிரித்த முகத்தோடு ஸங்கதியை விசாரித்தாள். ஸ்ரீ பரந்தாமன் வரவை அறிந்து, ஆனந்த மிகுந்து எதை அளிப்பது என்று அறியாது, அப்பிராஹ்மணருக்கு நமஸ்காரம் செய்தாள்.

பீஷ்மனும் தனது மகள் கல்யாணத்தைக் காண ஸ்ரீ க்ருஷ்ணபலராமாள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்க்கு வேண்டிய மர்யாதைகள் யாவும் செய்தான். சங்கமூதி, மதுபர்க்கம் அளித்து, மாலைபூட்டி மற்றும் பலவிதங்களால் அவர்களை ஸந்தோஷப்படுத்தினான். அவர்களுடைய சேனை பரிவாரங்களுக்கும் அப்படியே செய்தான். எவ்வெவர்களுக்கு எந்தெந்த விதமாகச் செய்ய வேண்டுமோ அந்தந்த முறைமைப்படி எல்லாம் செய்தான். ஸ்ரீக்ருஷ்ணனுடைய வரவை அறிந்த பௌர்ஜனங்கள் அவரைக் கண்டு தம் கண் ஆனந்திக்கப் பெற்றார்கள். அவருடைய முகத்தாமரையை முழுதுங் கண்டு, ‘ருக்மணிதான் இவர்க்குத் தகுந்த பத்நி. குற்றமற்ற இவரே அவளுக்குத் தகுந்தவர். மூவுலகையும் ஆக்கி அளிக்கும் அச்சுதனே நாங்கள் செய்த ஏதோ அல்ப பக்திக்கு ஆநந்தித்து இந்த விதர்பநாட்டு அரசன் மகளை மணக்கட்டும்’ என்று கூறினார்கள். இது அவர் உள்ளன்பினாலே கூறியது.

ருக்மணியும், பௌர பரிவாரங்களுடன் அம்பிகையின் கோயிலை அடைய புறப்பட்டாள். தன் மெய்ம்மறந்து உள்ளம் முழுதும் ஸ்ரீ வாஸுதேவனுடைய பாதாரவிந்தங்களிற்கு அர்ப்பணஞ்செய்துவிட்டு, தன் தாய்களோடும் தோழிகளோடும், தம்மைச் சூழ கடும் காவலோடும், அம்பிகையின் செந்தாமரைப் பாதங்களைத் தொழச் சென்றாள். ம்ருதங்கம், முழவு, சின்னம், சல்லரி, மல்லாரி, கொம்பு, சின்னம், தாரை முதலிய பதினெட்டு வாத்தியங்களும் முழங்கின. சந்தன புஷ்பாலங்க்ருதர்களாகிய ப்ராஹ்மணஸ்த்ரீகள் சோபனம்பாடவும், ஆசிகூறுவோர் ஆசிர்வசனங்களை பொழியவும், ஸங்கீதமுணர்ந்தோர் கீதமாரி பெய்யவும், ருக்மணி இவர்களோடும் ஸ்வஸ்திவாசகங் கூறுவோர்களோடும் கோயிலை அடைந்தாள். அடைந்ததும், கால் கை கழுவி, வாய் துடைத்து, நிர்மலமான மனத்துடன் அம்பிகையிடம் சென்று கைகூப்பி ‘ஹே! அம்பிகே! அம்மா! உனக்கும் உன் குழந்தைகளுக்கும் நமஸ்காரம். அம்மணீ! எனக்கு பரந்தாமன் ஸ்ரீக்ருஷ்ணன் கணவனாகும்படி அருள்செய்வாய். உமது திருவருள் அதுவித்திக்குமாறு செய்யட்டும்’ என்று துதித்துத் தேவிக்கு நல்ல நீர் சந்தனம், அக்ஷதை புஷ்பமுதலியவைகளால் ஆட்டி, வஸ்த்ரமளித்து, பூஜைசெய்து பலவகை தானங்களும் செய்தாள். கூடவந்த ப்ராஹ்மண ஸ்த்ரீகளும் அவ்வாறே பூஜை செய்தார்கள். பின் பூஜாக்ஷதைகளால் பிராட்டியார்க்கு நன்மை யுண்டாக ஆசீர்வாதம் செய்தார்கள். அவளும் தேவிக்கும் அவர்க்கும் தொழுது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். பின் மௌனங்கலைந்து தன் தோழிகளோடு கோயில் வெளி வந்தாள்.

அழகுமிக்க இடையும், குண்டலங்களுக்கு அழகுசெய்யும்முகமும், சின்னஞ்சிறுவயதில், உடல் முதிரப்பருவம் அடையாதிருக்கவும், இளந்தளிர்ப்போல் விளங்கு மேனியும்பெற்று, பெதும்பைப்பருவமடைய கிளைத்துக் கொண்டு நின்ற, மான்போல் சலிக்கு கண்களையுடைய, முத்தெனத் தெரிக்கும் பற்களைச் சிறிது காட்டி நகைஎரிக்கு கோவைப்பழம் போன்ற உதட்டை அடைந்து, அன்ன நடையில் நூபுரமொலிக்கவரும் பிராட்டியாரை கண்டதும் கண்டவர்மனமெல்லாம் ப்ரமை குடிகொண்டது. தமது மனம் முழுதும் அவளிடம் செல்ல கையில் இருந்த ஆயுதங்களைக் கீழ் விழவிட்டு இவள் அழகை க்ருஷ்ணனுக்கு அன்று அளிக்க, மெல்லப்போவது போல் பாவனைசெய்கிறாள் என்று எண்ணி எண்ணி ப்ரமித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். பிராட்டியும் சாய்ந்தபார்வையால் க்ருஷ்ணன் இருக்கும் இடம்காண அரசர் ஒவ்வொருவரையும் இருபக்கங்களிலும் பார்த்துக்கொண்டே சென்றாள்.

இமைக்கு முன் எல்லாரையும் மாயையிற் கவர்ந்து மாதவன் மங்கை ருக்மணியைத் தேரில் எடுத்துவைத்துக்கொண்டு தன்னூர்சேர சடுதியில்தேரைநடத்தினார்.

## விசேஷ வர்த்தமானங்கள்

### INTERESTING NEWS

**சிதம்பரம் உபாத்திமைச் சங்கத்தின் முதலாவது வருஷமஹோத்ஸவக் கொண்டாட்டம்:—** இஃது 1911-ம் ௵ ஆகஸ்டு௴ 5௳ சனிக்கிழமை ஷெயூர் டவுன் ஸெகண்டரி ஸ்கூலில் வெகு விமர்சையாக நடந்தேறியது. இதற்கு டிஸ்டிரிக்ட் முன்சிப் ம-௱-௱-ஸ்ரீ, திருநாராயணசாரியாரவர்கள், எம். ஏ., பி. எல். அக்கிராஸனம் வஹித்தார். இதைப்பார்த்து ஆனந்திக்க ஷெயூர் கனவான்களில் அநேகரும், சிதம்பரம் ரேஞ்சு எல்லா உபாத்யாயர்களும் வந்திருந்தார்கள். அன்று நடந்தவைகளுள், வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகத்தில் நியாஸ்தலகாக்ஷி (Court Scene) 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களால் நடத்திக்காண்பிக்கப்பட்டதும், தபாலாபீஸார்களினுடையவும், கிராமாதிகாரிகளினுடையவும் கடமைகளை ஸம்பாஷணை மூலமாகச் சிறுவர்கள் தெளிவாய் எடுத்துக்காட்டியதும், சிறுவர்களால் கல்வியின் பெருமையைப் பற்றிய சிறந்த உபன்யாஸங்களும் மிகவும் மெச்சத்தக்கவை. இதை ஸரிவர நடத்த ஷை ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ, வி. ஏ. வெங்கிடசுப்பய்யர் அவர்களும், அவர்களுக்கு உதவியாயிருக்கும் இரு ஸூபர்வைஸர்களும் ஷை சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் ஸாமிவேல் பிள்ளையும் மிகவும் சிரமமும் ஊக்கமும் எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

* *
*

**பிளேக்கினால் நேரிடும் உயிர்ச்சேதங்கள்:—** இந்தியாவில் பற்பல மாகாணங்களில் ஜனவரி முதல் ஜூலை வரையில் பிளேக்கினால் நேரிட்ட மரணங்கள் பின் வருமாறு:—

பம்பாய் மாகாணம் 32,541; சென்னை 3,856; வெங்காளம் 68,878; ஐக்கிய மாகாணங்கள் 3,09,950; பஞ்ஜாப் 1,79,053; வடமேற்கு எல்லைப்புற மாகாணம் 242; பர்மா 4,806; மத்திய மாகாணங்கள் 18,405; கீழ்வெங்காளம்; ஆஸாம்; 10; கூர்ஜரம் 3; மைசூர் 3,377; ஐதராபாத்து 2,773; மத்திய இந்தியா 7,954; ராஜபுதனம், அஜ்மீர்-மிர்வாரா 17,794; காஷ்மீரம் 1,086; பலுச்சிஸ்தானம் 2; மொத்தம் 6,50,690;

* *
*

**இங்கிலாந்தில் பென்ஷன் பெற்றவர்கள் விகிதம்:—** 1911-௵ மார்ச்௴ கடைசி வெள்ளிக்கிழமை வரையில் ஐக்கிய நாட்டில் (United Kingdom) 3,33, 050-புருஷர்களும், 574,411 ஸ்திரீகளும் பென்ஷன் பெற்றிருக்கின்றனராம்.

**ஒரு பெட்டைக்கோழியின் மதிப்பு:—** அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பிலடெல்பியா வென்னு மூரில் நடைபெற்ற கோழிகாட்சியில் ஒரு பெட்டைக் கோழியை ஒருகனவான் 2400-பவுண்டு கொடுத்து வாங்கினாராம். அதனது முட்டை யொன்றனது விலை 5 -பவுண்டாம். அக்கோழி பஞ்ச வர்ணமும், மனோகரமான குரலோசையும், அழகான நடையுமுடையதாம்.

* *
*

**பர்மாவில் பருத்திப்பயிர்:—** பர்மாவில் இந்த வருஷம் பருத்தி பயிராயிருக்கும் நில விஸ்தீரணம் 1,79,069 ஏகர்களாகும். போன வருஷத்தைவிட இந்த வருஷத்தில் 10,956 ஏகர் அதிகமாகவே பருத்தி பயிராயிருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தயட்மியோ ஜில்லாவில்தான் அது மிக அதிகமாய்ப் பயிராயிருக்கிறதாம். அதற்குத் தக்க பருவத்தில் வேண்டிய மழை பெய்ததே காரணமெனப்படுகிறது. சரியான பருவத்தில் விதை விதைக்கப்பட்டதென்றும் பயிர் நன்றாயிருக்கிறதென்றும் தெரிகிறது. ஆதலால் சில ஜில்லாக்களில் அதிகமழை வேண்டுமெனப்படுகிறது.

* *
*

**ஒரே முறையில் மூன்று பிரசவம்:—** அழகாபுரியில் ஒரு செட்டியார் வீட்டில் ஒரு ஸ்திரீ சில தினங்கட்கு முன்னர் ஒரே முறையில் மூன்றாண் குழந்தைகளை யீன்றாள். அக்குழந்தைகட்குப் பிறந்த முறைப்படி இராமன், இலட்சுமணன் பாரதனெனப் பெயரிடப்பட் டிருக்கின்றதாம்.

* *
*

✓ **டெல்லிதர்பாரின் ராணுவப் பயிற்சி, படைக்காட்சி:—** டெல்லியில் தர்பார் நடைபெறும்போது ராணுவப்பயிற்சி படைக்காட்சிகளின் பொருட்டு 43 இலட்சம் ரூபாய் செலவிடப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

* *
*

√ **இந்தியாவின் கடன்:—** இப்போது நமதிந்தியா தேசம் இங்கிலாந்து தேசத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனின் தொகை 27-கோடியே 40-இலட்சம் ரூபாய். அதற்காக வருஷந்தோறுங் கொடுக்கவேண்டிய வட்டியின் தொகை ஒரு கோடியே 12-இலட்சத்து 50-ஆயிரம் ரூபாய்.

### ஒரு பிழை திருத்தம்

"விவேக போதினி" மூன்றும் தொகுதி, 11-ம் பகுதி, பக்கம் 397-ல் "பாக்கி நாழிகை 68" என்பதை "பாக்கி நாழிகை $6\frac{3}{4}$" என்றும், "அஸ்தமித்து 68 நாழிகை" என்பதை "அஸ்தமித்து $6\frac{3}{4}$ (ஆறே முக்கால்) நாழிகை" என்றும் திருத்திக்கொள்ளவும்.